www.padippakam.com

# ஜடி துரை தண்டா...

வினவு

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# ஐ.டி. துறை நண்பா...!

புதிய கலாச்சாரம்
வெளியீடு

படிப்பகம்

www.padippakam.com

*நூல்:*

ஐ.டி. துறை நண்பா...!

*வினவு, புதிய கலாச்சாரம் கட்டுரைகள்...*
http://vinavu.wordpress.com
vinavu@gmail.com

*முதற்பதிப்பு:*

ஜனவரி 2009

*வெளியிடுவோர்:*

புதிய கலாச்சாரம்
சென்னை - 83.

*கிடைக்குமிடங்கள்:*

இரா. சீனிவாசன்,
புதிய கலாச்சாரம்,
16, முல்லை நகர் வணிக வளாகம், 2ஆவது நிழற்சாலை,
(15-ஆவது தெரு அருகில்), அசோக் நகர்,
சென்னை - 600 083.
தொலைபேசி: 044 - 2371 8706, செல்பேசி : 99411 75876

கீழைக்காற்று வெளியீட்டகம்,
10, அவுலியா தெரு, எல்லீசு சாலை,
சென்னை - 600 002.
தொலைபேசி: 044 - 28412367

*விலை:* ரூ. **35.00**

படிப்பகம்

www.padippakam.com

# பொருளடக்கம்


முன்னுரை 4

அமெரிக்க திவால்: டவுசர் கிழிந்தது! 7

வாசகர் விவாதம் 21

ஐ.டி. துறை நண்பா,
உனக்கு ரோஷம் வேணும்டா! 30

வாசகர் விவாதம் 35


படிப்பகம்

www.padippakam.com

# முன்னுரை

ஐ.டி. என்று பரவலாக அறியப்படும் தகவல் தொழில் நுட்பத் துறை சமீபத்திய ஆண்டுகளில் வளர்ந்திருப்பது அனைவரும் அறிந்ததே. வீட்டு வாடகை உயர்ந்தது முதல் நட்சத்திர விடுதிகளின் வார விடுமுறைக் கொண் டாட்டம் வரை பல்வேறு விசயங்களில் இந்தத் துறையின் செல்வாக்கும் நமக்கு தெரிந்த விசயம்தான். திடீரென்று பலரது வாழ்க்கையை ஜாக்கி வைத்து தூக்கிய பெருமையும் இத்துறைக்கு உண்டு. ஒரு காவியம் போல வியந்தோதப்படும் இந்தத் துறையின் இன்றைய நிலை என்ன?

மென்பொருள் தயாரிக்கும் அந்த நிறுவனத்தில் வெள்ளிக்கிழமை என்றால் குதூகலம் அனைவரையும் பற்றிக் கொள்ளும். வாரத்தின் விடுமுறை நாட்களைக் கொண்டாடுவதற்கு நிறுவனமே பல பொழுது போக்கு ஏற்பாடுகளைச் செய்யும். ஊழியர்களின் பிறந்த நாளுக்கு பரிசு, மூன்று வேளையும் உயர்தர உணவு இலவசமாக அளிக்கப்பட்டது என அந்த பொற்காலம் சுபீட்சமாகத்தான் இருந்தது சில மாதங்களுக்கு முன்பு வரை. அதன் பிறகு என்ன ஏது என தெரியாமல் அந்தப் பொற்காலத்தின் கூரைகள் ஒவ்வொன்றாய் விழ ஆரம்பித்தன. இலவச உணவு ரத்து செய்யப்பட்டது. பல ஊழியர்கள் நீக்கப்பட்டனர். முக்கியமாக வெள்ளிக்கிழமை மாலை யில்தான் இந்த ஆட்குறைப்பு வைபவங்கள் நடந்தேறின. மகிழ்ச்சியை அளித்து வந்த அந்த நாள் இப்போது பீதியை பற்றவைக்கும் நாளாக மாறியது.



படிப்பகம்

www.padippakam.com

அந்த நிறுவனத்தின் வயது எட்டென்றால் அந்த குரூப் லீடர் ஏறக் குறைய ஆறு வருடங்கள் வேலை செய்திருக்கிறார். சம்பளம் ரூ.30,000. திருமணம், சொந்தவீடு, வங்கிக் கடன் என பல திட்டங்களை அந்த சம்ப ளைத்தை வைத்து செயல்படுத்தியிருக்கிறார். திடீரென்று ஒரு வெள்ளிக் கிழமை மாலை அவரது வேலை பறிக்கப்பட்டதாக ஆணை வருகிறது. உத் தரவு வந்த சில மணித்துளிகளுக்குள்ளாகவே அலுவலக கணினி அவரது உத்தரவுகளுக்கு ஆட்பட மறுக்கிறது. விரக்தி கொப்பளிக்க அவர் கதறி அழு கிறார். தன் வேலை பறிக்கப்படும் அளவுக்கு எந்த குறையையும் செய்ய வில்லையே என அரற்றுகிறார். அவரது முன்னாள் சக ஊழியர்கள் அவரை சமாதானப்படுத்துகின்றனர். அவரது அழுகைக்கு பின்னே அந்த சம்பளத்தின் தரத்திற்கேற்ப கட்டியமைக்கப்பட்டிருந்த வாழ்க்கை இனி வாழ முடியாத ஒன்றாக மாறிவிட்டது. இனி அவர் புதிய வேலைக்கு முயன்றாலும் பழைய சம்பளத்தில் பாதி கிடைத்தால் பெரிய விசயம் எனுமளவுக்கு நிலைமை மாறி விட்டது. ஏன்?

அமெரிக்காவில் நிதி நிறுவனங்களும், வங்கிகளும் திவாலாகி உலகையே ஒரு பொருளாதார வீழ்ச்சியில் தள்ளிய நேரத்தில் அதைப் பற்றி *புதிய கலாச்சாரத்தில்* ஒரு பெரிய கட்டுரையை வெளியிட்டிருந்தோம். அதையே *வினவுத்* தோழர்களும் அவர்களுடைய இணைய தளத்தில் வெளி யிட்டிருந்தார்கள். பல வலைப்பூக்களும் இக்கட்டுரையை மறு பிரசுரம் செய்தன. பல ஆயிரம்பேர் படித்த அந்தக் கட்டுரையில் அமெரிக்க நிறுவ னங்கள் திவாலானதின் பின்னணியையும், குறிப்பாக முதலாளித்துவத்தின் தவிர்க்க இயலாத சூதாட்ட பொருளாதாரத்தின் இயங்கு விதிகளையும் எளி மையாக விளக்கியிருந்தோம். தனியார்மயம், தாராளமயத்தின் தோல்வியும், அந்த நிறுவனங்களைக் காப்பாற்ற அமெரிக்க அரசு பல ஆயிரம் கோடி ரூபாயில் நிவாரண நிதி அளித்ததின் பின்னே மறைந்திருக்கும் முதலாளித் துவப் பொருளாதாரத்தின் தோல்வியையும் குறிப்பிட்டிருந்தோம்.

இணையத்தில் வெளிவந்த இக்கட்டுரை பல நூறு வாசகர்களால் பாராட் டப்பட்டது. பலர் மறுமொழிகளின் மூலம் தங்களது கருத்துக்களை தெரிவித் திருந்தனர். அந்தக் கட்டுரையும் மறுமொழிகளும் இங்கே வெளியிடப்பட்டி ருக்கின்றன. இக்கட்டுரையின் தொடர்ச்சியாக *வினவுத்* தோழர்கள் ஐ.டி துறையைப் பற்றி ஒரு கட்டுரையை இணையத்தில் வெளியிட்டிருந்தார்கள். அதில் அமெரிக்கா திவாலின் பிரதிபலிப்பாக இந்தியாவில் ஏற்படக்கூடிய பாதிப்புகளையும், ஐ.டி ஊழியர்கள் தமது எதிர்காலத்தை பாதுகாப்பதற்காக தொழிற்சங்கங்களில் திரளவேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தியிருந் தார்கள். ஆனால் பல வாசகர்கள் - இத்துறையில் பணியாற்றுபவர்கள் - அவற்றை அலட்சியமாக மறுத்தார்கள். தங்களுக்கொன்றும் பாதிப்பில்லை எனவும் ஆக்ரோஷமாக தெரிவித்தார்கள். சில வாசகர்கள் அந்தக் கட்டு



படிப்பகம்

www.padippakam.com

ரையின் சாரத்தை ஏற்றுக் கொண்டதோடு ஐ.டி துறையின் ஆட்குறைப்பு நடவடிக்கைகளைப் பற்றிஆதாரங்களுடன் தெரிவித்தார்கள். இங்கே அந்தக் கட்டுரையையும் அதையொட்டி நடந்த வாசகர் விவாதங்களையும் வெளி யிட்டுள்ளோம்.

இக்கட்டுரை வெளியிட்டு இன்று ஓரிரு மாதங்கள் முடிந்து விட்டன. இன்று தகவல் தொழில் நுட்பத்துறையின் வீழ்ச்சியும், ஆட்குறைப்பும், சம்பளக் குறைப்பும் யாரும் மறுக்க முடியாத அளவுக்கு கண்கூடான யதார்த் தங்களாக மாறிவிட்டன. இதை முன்னறிந்து சொல்லும்போது மறுத்தவர்கள் இன்று அவர்களது மறுப்பைத்தான் மறுக்கவேண்டியிருக்கும். முதலாளித்து வத்தின் பயங்கரவாதமாய் அமெரிக்காவிலிருந்து இறக்குமதியாகியிருக்கும் இந்த பொருளாதாரச் சுனாமி இந்தியாவை மட்டுமல்ல பல நாடுகளையும் பதம் பார்த்திருக்கிறது. சில மாதங்களுக்கு முன்னர் 20,000 புள்ளிகளில் கும் மாளமிட்ட மும்பை பங்குச் சந்தை இன்று 10,000த்திற்கே தள்ளாடுகிறது. இந்த இழப்பில் ஏமாந்து பலர் தற்கொலை செய்திருக்கின்றனர்.

முதலாளித்துவத்தின் அநீதியான உலகமயம் எப்படிப் பார்த்தாலும் இப் படித்தான் ஒரு அழிவை மக்களுக்கு தர முடியும். இதை அரசியல் ரீதியாக புரிந்து கொள்வதும், அதற்கெதிராய் செயல்படுவதும் காலம் நம்மிடம் கோரும் கடமையாகும். அந்த கடமைக்கு வாசகரை தயார் செய்யும் பணியில் இந்த நூலும் ஒரு பங்காற்றும் என்ற நம்பிக்கையுடன் உங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

தோழமையுடன்
ஆசிரியர் குழு,
ஜனவரி, 2009. புதிய கலாச்சாரம்.



படிப்பகம்

www.padippakam.com

# அமெரிக்கா திவால்: டவுசர் கிழிந்தது!

அமெரிக்கா திவாலாகி விட்டது. பிரெஞ்சுப் புரட்சிக்கு முந்தைய பிரான்சை அமெரிக்காவின் நிலைமை நினைவூட்டுகின்றது என்கிறார் ஒரு பத்திரிகையாளர். கடந்த செப்டம்பர் 7-ஆம் தேதி ஃபான்னி மே, ஃபிரட்டி மாக் என்ற இரு வீட்டு அடமான வங்கிகள் திவாலாவதைத் தடுக்க அவற்றை அரசுடைமையாக்கியது புஷ் அரசு. அரசுடைமையாக்கப்படும்போது அவற்றின் சொத்து மதிப்பு 5500 கோடி டாலர்கள். அவற்றின் கடனோ 5,00,000 கோடி டாலர்கள். அடுத்து உலகின் மிகப்பெரிய காப்பீட்டு நிறுவனம் என்று கூறப்படும் அமெரிக்கன் இன்டர்நேசனல் குரூப் நிறுவனம் திவாலின் விளிம்பில்; இந்தியாவில் காப்பீட்டுத் துறையைத் தனியார்மயமாக்க தீவிரமாக முயன்று வரும் இந்த நிறுவனத்தைக் காப்பாற்ற 8500 கோடி டாலர்களை வழங்கி அதன் 80% பங்குகளை வாங்கியிருக் கின்றது அமெரிக்க அரசின் ஃபெடரல் ரிசர்வ்.

லேமன் பிரதர்ஸ், மெரில் லின்ச், கோல்டுமேன் சாக்ஸ், மார்கன் ஸ்டான்லி, வாக்கோவியா, வாஷிங்டன் மியூச்சுவல்... என உலக நிதிச் சந்தையின் சர்வவல்லமை பொருந்திய தேவதை களாகக் கருதப்பட்ட நிறுவனங்கள் எல்லாம் நாளுக்கொன்றாகக் கவிழ்ந்து கொண்டிருக்கின்றன.

அமெரிக்காவின் வங்கிகள், நிதி நிறுவனங்கள் மட்டுமின்றி, ஆலைகள், ஐ.டி துறைகளிலும் திடீரென்று ஆயிரக்கணக்கான ஊழி யர்கள் ஆட்குறைப்பு செய்யப்படுகின்றார்கள்.



படிப்பகம்

கடனை அடைக்க முடியாததால் வெளியேற்றப்பட்ட இலட்சக்கணக்கான மக்களின் வீடுகள் அமெரிக்காவில் வாங்கு வாரின்றிப் பூட்டிக் கிடக்கின்றன. ஐ.டி. தொழிலின் மையமான கலிபோர்னியா மாநிலமே திவால் மாநிலமாகி விட்டது. பிரைஸ் வாட்டர் கூப்பர்ஸ் என்ற பிரபல நிறுவனத்தின் நிதி ஆலோசகரான கார்த்திக் ராஜாராம் என்ற என்.ஆர்.ஐ இந்தியர், தனது மனைவி, மூன்று குழந்தைகள், மாமியார் அனைவரையும் சுட்டுக் கொன்று தானும் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார். ரியல் எஸ்டேட் சூதாட்டத்தில் அவர் குவித்த கோடிகள் ஒரே நாளில் காணாமல் போயின.

தவணை கட்டாததால் பறிமுதல் செய்யப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 50 இலட்சம் என்று அறிவித்திருக்கின்றார் அமெரிக்க நிதியமைச்சர் பால்சன். அதாவது, அரசின் கணக்குப்படியே சுமார் 3 கோடி மக்கள், அமெரிக்க மக்கள் தொகையில் 10% பேர் புதிதாக வீடற்றவர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். வாங்குவாரின்றிப் பூட்டிக் கிடக்கும் வீடுகள் சூறையாடப்படுகின்றன.

ஆட்டோமொபைல் தொழிலில் உலகின் தலைநகரம் என்ற ழைக்கப்பட்ட டெட்ராய்ட், அமெரிக்காவின் திவால் நகரமாகி விட்டது. அங்கே வீட்டின் விலை உசிலம்பட்டியைக் காட்டிலும் மலிந்து விட்டது. இரண்டு படுக்கையறை கொண்ட வீட்டின் விலை ரூ. 75,000.

அமெரிக்காவில் வெடித்த பொருளாதார நிலநடுக்கம், உலகெங்கும் பரவுகின்றது. ஒரு ஊழியின் விளிம்பில் நின்று கொண்டிருக்கிறோம் என்று அலறுகிறார் பிரெஞ்சுப் பிரதமர்.

எந்த நாட்டில் எந்த வங்கி எப்போது திவாலாகும் என்று யாருக்கும் தெரியவில்லை. வங்கிகளின் மீது மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர். ''ஐரோப்பிய வங்கிகள் திவாலானால் 50,000 யூரோக்கள் வரையிலான டெபாசிட் தொகையைக் கொடுக்க ஐரோப்பிய அரசுகள் பொறுப்பேற்பதாக'' ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்திருக்கின்றது. இந்தியா உள்ளிட்டு உலகெங்கும் பங்குச் சந்தைகள் கவிழ்ந்து பாதாளத்தை நோக்கிப் பாய்ந்து கொண்டிருக் கின்றன.

உலகப் பொருளாதாரத்தின் அச்சாணி என்றும், உலக முதலா ளித்துவத்தின் காவலன் என்றும் பீற்றிக் கொள்ளும் அமெரிக்க

www.padippakam.com

ஏகாதிபத்தியத்திய முதலாளி வர்க்கத்தின் முகத்தில் உலகமே காறி உமிழ்கின்றது.

''பொருளாதாரத்தில் அரசு எந்த விதத்திலும் தலையிடக் கூடாது; சந்தைப் பொருளாதாரம் ஒன்றுதான் மனித சமூகம் கண்டறிந்த மிகச்சிறந்த பொருளாதார ஏற்பாடு'' என்று கூறி, பின் தங்கிய நாடுகள் அனைத்தின் மீதும் தனியார்மயத்தைக் கதறக் கதறத் திணித்து வரும் அமெரிக்க முதலாளி வர்க்கம், கூச்சமே இல்லாமல் 'மக்களின் வரிப்பணத்தை வைத்து எங்களைக் கைதூக்கி விடுங்கள்' என்று அமெரிக்க அரசிடம் கெஞ்சுகின்றது.

திவால்கள் இத்துடன் முடியப்போவதில்லை என்பது தெளி வாகிவிட்டது. முதலாளிவர்க்கத்தைக் கைதூக்கி விடுவதற்காக 70,000 கோடி டாலர் (35 இலட்சம் கோடி ரூபாய்) பணத்தை அரசு வழங்க வேண்டும் என்ற புஷ் நிர்வாகத்தின் தீர்மானத்தை அமெரிக்காவின் 'மக்கள் பிரதிநிதிகள்' ஒருமனதாக நிறைவேற்றி விட்டார்கள்.

அமெரிக்க மக்களோ ஆத்திரத்தில் வெடிக்கிறார்கள். உலக முதலாளித்துவத்தின் புனிதக் கருவறையான வால் ஸ்ட்ரீட் எங்கும் மக்கள் கூட்டம். ''தே.. பசங்களா, குதிச்சுச் சாவுங்கடா..'' என்று வங்கிகளை அண்ணாந்து பார்த்துத் தொண்டை கிழியக் கத்துகின் றார்கள் மக்கள். ''குப்பைக் காகித்தை வாங்கிக் கொண்டு முதலாளி களுக்குப் பணம் கொடுக்கும் அரசே, இந்தா என் வீட்டுக் குப்பை. எனக்கும் பணம் கொடு!'' என்று ஆர்ப்பாட்டம் நடத்துகின் றார்கள். வால் ஸ்ட்ரீட் வங்கிகளின் நெடிதுயர்ந்த கட்டிடங்களில் அமெரிக்க மக்களின் முழக்கம் மோதி எதிரொலிக்கின்றது - 'முதலாளித்துவம் ஒழிக!'

•••

இத்துனை அமெரிக்க வங்கிகளை ஒரே நேரத்தில் திவாலாக்கி, உலகப் பொருளாதாரத்தையும் நிலைகுலைய வைத்திருக்கும் இந்த நிதி நெருக்கடியைத் தோற்றுவித்தது யார்? அமெரிக்காவின் ஏழைகள்! அவர்கள்தான் உலகத்தைக் கவிழ்த்து விட்டார்களாம். பல இலட்சம் கோடி டாலர் மதிப்புள்ள இந்த பிரம்மாண்டமான கேள்விக்கு, இரண்டே சொற்களில் பதிலளித்துவிட்டன முதலாளித்துவப் பத்திரிகைகள். ''கடன் பெறவே தகுதியில்லாத வர்கள், திருப்பிச் செலுத்த முடியாதவர்கள் என்று வந்தவர் போன வருக்கெல்லாம் வங்கிகள் கடன் கொடுத்தன. வீடுகட்டக் கடன்


படிப்பகம்

www.padippakam.com

கொடுத்ததில் தவறில்லை. ஆனால், அது சரியான ஆட்களுக்குக் கொடுக்காததுதான் இந்த நிலைக்குக் காரணம்...'' (நாணயம் விகடன், அக்-15)

எப்பேர்ப்பட்ட கண்டுபிடிப்பு! இதே உண்மையைத்தான் எல்லா பொருளாதாரக் கொலம்பஸ்களும் வேறு வேறு வார்த்தைகளில் கூறுயிருக்கின்றனர். முதலாளி வர்க்கத்தை இவ்வளவு எளிதாக ஏழைகளால் ஏமாற்ற முடியுமா? நண்பர்களுக்கு 50, 100 கடன் கொடுப்பதென்றால் கூட நாமே யோசிக்கின்றோமே, வந்தவன் போனவனுக்கெல்லாம் இலட்சக்கணக்கில் வாரிக் கொடுத்திருக்கும் அமெரிக்க முதலாளிகளை வள்ளல்கள் என்பதா, முட்டாள்கள் என்பதா? இரண்டுமே இல்லை. அவர்கள் கிரிமினல்கள்.

அமெரிக்காவின் உழைக்கும் மக்களையும், நடுத்தர வர்க்கத்தினரையும் மட்டுமல்ல, பல்வேறு நாட்டு மக்கள், சிறு முதலீட்டாளர்கள், வங்கிகள் .. அனைத்துக்கும் மேலாக சக நிதிமூலதனச் சூதாடிகள் எல்லோரையும் ஏமாற்றிச் சூறையாடியிருக்கும் இந்த மோசடியை என்ன பெயரிட்டு அழைப்பது? ஆயிரம், இரண்டாயிரம் போயிருந்தால் அது திருட்டு. இலட்சக் கணக்கில் போயிருந்தால் கொள்ளை என்று கூறலாம். பறிபோயிருப்பது பல இலட்சம் கோடி. அதனால்தான் மிகவும் கவுரவமாக இதனை 'நெருக்கடி' என்று கூறுகின்றது முதலாளித்துவம்.

வந்தவன் போனவனுக்கெல்லாம் வாரிக் கொடுத்ததனால் ஏற்பட்டதாகக் கூறப்படும் 'அமெரிக்காவின் சப் பிரைம் நெருக்கடி' தோன்றிய கதையைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

தயக்கமில்லாமல் கடன் வாங்குவதற்கும், நுகர்பொருட்களை வாங்குவதற்கு அந்தப் பணத்தைச் செலவிடுவதற்கும் மக்களை நெடுங்காலமாகவே பயிற்றுவித்து பொம்மைகளைப் போல அவர்களை ஆட்டிப்படைத்து வருகின்றது அமெரிக்க முதலாளி வர்க்கம். சராசரியாக ஒரு அமெரிக்கனிடம் 100 கடன் அட்டைகள் இருக்கும் என்பது மிகக் குறைந்த மதிப்பீடு. அங்கே வட்டி விகிதத்துக்கு உச்சவரம்பு இல்லை என்பதால் கடன் அட்டைக்கு 800% வட்டி கூட உண்டு. சராசரியாக ஒரு அமெரிக்கன் தனது மாதச்சம்பளத்தில் 40% தொகையைக் கடன் அடைக்க ஒதுக்குகின்றான். ஒரு கல்லூரி மாணவனின் சராசரி கல்விக்கடன் 10 இலட்சம் ரூபாய்.



படிப்பகம்

www.padippakam.com

2003-ஆம் ஆண்டிலேயே அமெரிக்காவின் வங்கிக் கடன்களின் சரிபாதி அடமானக் கடன்களாக இருந்தன.

இதற்கு மேலும் கடன் வாங்கிச் செலவு செய்யும் சக்தி அவர்களுக்கு இல்லாமல் போனதால், நுகர்பொருள் முதல் ரியல் எஸ்டேட் வரை எல்லாத் தொழில்களிலும் சந்தை தேங்கியது. கடன் வாங்க ஆளில்லாததால் வட்டி வருவாய் இல்லாமல், வங்கித் தொழிலும் தேங்கியது. கடனுக்கான வட்டி விகிதங்கள் பெருமளவு குறைந்தன. இந்தத் தருணத்தில்தான் தங்கள் லாபப் பசிக்கு புதிதாக ஒரு இரையைக் கண்டுபிடித்தார்கள் வங்கி முதலாளிகள்.

''வேலை இல்லாத, வருமானமும் இல்லாத ஏழைகளிடம் அடகு வைக்க எதுவும் இல்லையென்றாலும், அவர்கள் நேர்மையாகக் கடனை அடைப்பார்கள். அடைத்துத்தான் ஆக வேண்டும். ஏனென்றால் அவர்களுக்கு வேறு யாரும் கடன் கொடுக்க மாட்டார்கள். எனவே வட்டியை உயர்த்தினாலும் அவர்களுக்கு வேறு வழி இல்லை. இவர்களைக் குறி வைப்போம்'' என்று முடிவு செய்தார்கள்.

ஒருவேளை பணம் வரவில்லையென்றால்? அந்த அபாயத்திலிருந்து (risk) தப்பிப்பதற்கு வால் ஸ்ட்ரீட்டின் நிதி மூலதனச் சூதாட்டக் கும்பல் வழி சொல்லிக் கொடுத்தது. 10 இலட்சம் ரூபாய் வீட்டுக் கடன், அந்தக் கடன் ஈட்டக்கூடிய வட்டித் தொகை ஆண்டுக்கு ஒரு இலட்சம் என்று வைத்துக் கொள்வோம். கடன் கொடுக்கும் வங்கி, கடன் வாங்குபவருடைய அடமானப் பத்திரத்தை உடனே நிதிச் சந்தையில் 10.5 இலட்சத்துக்கு விற்றுவிடும். இப்படியாக கொடுத்த கடன்தொகை உடனே கைக்கு வந்து விடுவதால், பத்திரத்தை விற்க விற்க கடன் கொடுத்துக் கொண்டே இருக்கலாம். கொடுத்தார்கள்.

நிதிக் கம்பெனிகளும், இன்சூரன்சு நிறுவனங்களும், ரியல் எஸ்டேட் நிறுவனங்களும் (FIRE) கூட்டணி அமைத்து ரியல் எஸ்டேட் சந்தையைச் சுறுசுறுப்பாக்கி விலைகளை இருமடங்கு, மும்மடங்காக ஏற்றினார்கள். 'ஒரு டாலர் கூடக் கொடுக்க வேண்டாம். வீட்டை எடுத்துக் கொள்ளுங்கள்' என்றார்கள். தயங்கியவர்களிடம், '10 ஆண்டுகளில் நீங்கள் கட்டப்போகும் தொகை இவ்வளவுதான். ஆனால் 10 ஆண்டுகளுக்குப் பின் உங்களது வீட்டின் விலை 10 மடங்கு கூட உயர்ந்திருக்கும்' என்று ஆசை


படிப்பகம்

www.padippakam.com

காட்டினார்கள். 'வட்டியை மட்டும் கட்டுங்கள். அசலை அப்புறம் பார்த்துக் கொள்வோம்' என்று வலையில் வீழ்த்தினார்கள். 'அதுவும் கஷ்டம்' என்று மறுத்தால், 'பாதி வட்டி மட்டும் கட்டுங்கள். மற்றதைப் பின்னால் பார்த்துக் கொள்வோம்' என்றார்கள். வீழ்த்தப்பட்டவர்களில் ஆகப் பெரும்பான்மையினர் கறுப்பின மக்கள் மற்றும் லத்தீன் அமெரிக்க வம்சாவளியினர். மற்றவர்கள் வெள்ளையர்கள்.

இந்த மக்கள் யாரும் வீடு வாங்கக் கடன் கேட்டு வங்கிக்கு செல்லவில்லை என்பது மிகவும் முக்கியமானது. நம் ஊரில் 'கடன் வேண்டுமா?' என்று தொலைபேசியில் கேட்டு நச்சரிப்பதைப் போல 'வீடு வேண்டுமா?' என்று நச்சரித்தார்கள். 2006 ஆம் ஆண்டு வீட்டுக்கடன் வாங்கிய 64% பேரைத் தரகர்கள்தான் வலைவீசிப் பிடித்து வந்தனர். 20% பேர் சில்லறை வணிகக் கடைகளின் மூலம் மடக்கப்பட்டனர். இவர்கள் வாங்கும் வீடுகளின் சந்தை விலையை மதிப்பிடும் நிறுவனங்கள் (appraisers) வேண்டுமென்றே வீட்டின் மதிப்பை ஒன்றுக்கு இரண்டாகக் கூட்டி மதிப்பிட்டுக் கடன் தொகையை அதிகமாக்கினர். வீடு வாங்கச் செலவு செய்யும் பணத்துக்கு வரிவிலக்கு அறிவித்து ரியல் எஸ்டேட் சந்தையை ஊக்கப் படுத்தியது அரசு.

ரியல் எஸ்டேட் விலைகள் மேலும் ஏறத் தொடங்கின. 2004-இல் பத்து இலட்சம் ரூபாய்க்கு வாங்கிய வீட்டின் சந்தை மதிப்பு, 2005 இல் 20 இலட்சம் ரூபாய் என்று உயர்ந்தவுடன், இன்றைய சந்தை மதிப்பை அடிப்படையாகக் கொண்டு மேலும் 7,8 இலட்சம் கடன் அவர்கள் சட்டைப் பைக்குள் திணிக்கப்பட்டது. 'விலைகள் ஏறியபடியேதான் இருக்கும்' என்று மக்கள் நம்ப வைக்கப்பட்டார்கள்.

ஆனால் வாங்கிய கடனைக் கட்ட வேண்டியவர்கள் மக்களல்லவா? வட்டியோ மீட்டர் வட்டி! அமெரிக்காவிலோ வேலையின்மை அதிகரித்துக் கொண்டிருந்தது. உணவு, பெட்ரோல் விலை உயர்வு வேறு. மாதம் 1000 டாலர் கொடுத்து வாடகை வீட்டில் இருந்தவர்கள் இப்போது சொந்த வீட்டுக்கு 3000 டாலர் தவணை கட்ட வேண்டியிருந்தது. மூச்சைப் பிடித்துக் கொண்டு 10, 20 மாதங்கள் கட்டிப் பார்த்தார்கள். முடியவில்லை. தூக்கமில்லாத இரவுகள், குடும்பச் சண்டைகள், மணவிலக்குகள்.. என குடும்பங்கள் சித்திரவதைப் பட்டன. 'ஐப்திக்கு எப்போது ஆள்



படிப்பகம்

www.padippakam.com

வருமோ' என்று நடுங்கினார்கள். போலீசு வரும்வரை காத்திருக் காமல் சொல்லாமல் கொள்ளாமல் வெளியேறி விட்டார்கள். சென்ற ஆண்டில் மட்டும் 22 இலட்சம் வீடுகள் இப்படிக் காலியாகின.

விளைவு - ரியல் எஸ்டேட் சூதாடிகள் ஊதி உருவாக்கிய பலூன் வெடித்து விட்டது. 5 இலட்சம் டாலருக்கு வாங்கிய வீடு ஒரு இலட்சத்துக்கு விழுந்து விட்டது. எனினும் 5 இலட்சத்துக்கு உரிய தவணையைத்தான் கட்டவேண்டும் என்ற நிலைமை ஏற்பட் டதால், தவணை கட்டிக் கொண்டிருந்தவர்களும் 'வீடு வேண் டாம்' என்று முடிவு செய்து வெளியேறத் தொடங்கினார்கள். சந்தை தலைகுப்புறக் கவிழ்ந்தது.

•••

இந்தக் கொடுக்கல் வாங்கலில், மக்கள் யாரை ஏமாற்றி னார்கள்? அவர்கள் மாதத்தவணை கட்டியிருக்கின்றார்கள். முடியாத போது வீட்டைத் திருடிக் கொண்டு ஓடவில்லை. திருப்பி ஒப்படைத்து விட்டார்கள். வீடு இருக்கின்றது. ஆனால் மதிப்பு இல்லாமல் போய்விட்டது. அதற்கு மக்கள் என்ன செய்ய முடியும்? ரியல் எஸ்டேட்டின் சந்தை விலையை அவர்களா நிர்ண யித்தார்கள்? சந்தை எழுந்ததற்கும் வீழ்ந்ததற்கும் அவர்களா பொறுப்பு?

ஒரு வீட்டின் உண்மையான மதிப்பை எப்படி நிர்ணயிப்பது? அந்த வீடு எந்தப் பொருட்களால் உருவாக்கப்பட்டிருக்கின்றதோ, அந்தப் பொருட்களை உருவாக்குவதற்கும், அப்பொருட்களை இணைத்து அந்த வீட்டை உருவாக்குவதற்கும் செலவிடப்பட்ட உழைப்புச் சக்தியின் மதிப்புதான் அந்த வீட்டின் மதிப்பு என்கிறார் மார்க்ஸ். ஒரு மாபெரும் முதலாளித்துவ மோசடியில் வாங்கிய அடி, மார்க்சியத்தின் வாயிற்கதவுக்கு அமெரிக்க மக்களை இழுத்து வந்திருக்கின்றது.

எனினும் முதலாளித்துவச் சந்தையின் விதி இதை ஒப்புக் கொள்வதில்லையே! 10 இலட்சம் ரூபாய்க்கு வீடு வாங்கி, ஒரு இலட்சம் தவணை கட்டி விட்டு, மீதியைக் கட்ட முடியாமல் வீட்டை வங்கியிடம் ஒப்படைத்தால் (foreclosure), வங்கி அந்த வீட்டை ஏலம் விடும். தற்போது வீடு 2 இலட்சத்துக்கு ஏலம் போகின்றது என்று வைத்துக் கொண்டால், மீதி 7 இலட்சம்



படிப்பகம்

www.padippakam.com

பாக்கியை கடன் வாங்கியவன் கட்டியாகவேண்டும். அதாவது இல்லாத வீட்டுக்கு தவணை கட்டவேண்டும். இதுதான் முதலாளித்துவ சந்தை வழங்கும் நீதி. அது மட்டுமல்ல, இவ்வாறு தவணை கட்டத் தவறுபவர்கள் அடுத்த 7 ஆண்டுகளுக்கு அமெரிக்காவில் எந்த இடத்திலும் கடன் வாங்கவோ கடன் அட்டையைப் பயன்படுத்தவோ முடியாது. சுருங்கக் கூறின் வாழவே முடியாது. இதுதான் அமெரிக்கச் சட்டம். ''இந்தச் சட்டத்தைத் தளர்த்தி நிவாரணம் வழங்கு'' என்று கோருகின்றார்கள் மக்கள்.

திவாலான மக்களுக்கு நிவாரணம் தர மறுக்கும் அமெரிக்க அரசு மதிப்பிழந்து போன குப்பைப் பத்திரங்களை வங்கிகளிடமிருந்து விலை கொடுத்து வாங்க 35 இலட்சம் கோடி ரூபாய் வழங்குகின்றது.

ஏன், மக்களுடைய அந்த வரிப்பணத்தை மக்களுக்கே நிவாரணமாகக் கொடுத்தால்? அப்படிக் கொடுத்தால், உலக முதலாளித்துவமே வெடித்துச் சிதறிவிடும். ஏனென்றால் அந்த வீட்டு அடமானக் கடன் பத்திரங்களில் பெரும்பகுதி இப்போது உலகத்தின் தலை மீது இறங்கி விட்டது.

பொதுவாக, கடன் என்பது 'கொடுப்பவருக்கும் வாங்குபவருக்கும் இடையிலான ஒப்பந்தம்' மட்டுமே. ஆனால் நிதி மூலதனத்தின் உலகமயமாக்கல் இந்தக் கடன் பத்திரங்களையும் உலகமயமாக்கியிருக்கின்றது.

இத்தகைய கடன் பத்திரங்களின் நம்பகத்தன்மைக்கு சான்றிதழ் கொடுக்கும் பிரபல நிறுவனங்கள், லஞ்சம் வாங்கிக் கொண்டு, இந்த வாராக் கடன்களுக்கு 'மிக நம்பகமான கடன்கள்' என்று பொய் சர்டிபிகேட் கொடுத்தன. இந்த பொய் சர்டிபிகேட்டைக் காட்டி 11.8 டிரில்லியன் டாலர் (ஒரு டிரில்லியன் என்பது இலட்சம் கோடி) மதிப்புள்ள ஒரு கோடி கடன் பத்திரங்களை அமெரிக்கச் சூதாடிகள் உலக நிதிச்சந்தையில் விற்று விட்டார்கள்.

பிறகு அந்தப் பத்திரங்களின் மீதும் சூதாட்டம் தொடங்கியது! 'இந்தக் கடன் வசூலாகாவிட்டால் இழப்பீடு தருவதாக'ச் சொன்ன இன்சூரன்சு கம்பெனிகளின் காப்பீட்டுப் பத்திரங்கள், 'ஒவ்வொரு கடனும் வருமா, வராதா என்று அவற்றின் மீது பந்தயம் கட்டிச் சூதாடிய' டெரிவேட்டிவ்கள்.. என தலையைச் சுற்றும் அளவுக்கு விதம் விதமான சூதாட்ட உத்திகளை உருவாக்கி, ஒரு கோடி கடன்



படிப்பகம்

www.padippakam.com

பத்திரங்களின் மீது 1000 கோடி பரிவர்த்தனைகளை (transactions) நடத்தி விட்டார்கள் வால்ஸ்ட்ரீட் சூதாடிகள்!

பறவைக் காய்ச்சலை விடவும் பரவலாக, பருவக்காற்றை விடவும் வேகமாக உலகெங்கும் பரவி யார் யார் தலையிலோ இறங்கி விட்டது இந்தக் கடன். இவற்றை முதலீடுகளாகக் கருதி வாங்கிய பிறநாட்டு வங்கிகள், தொழில் நிறுவனங்கள், பென்சன் ஃபண்டுகள் அனைத்தும் மரணத்தின் விளிம்பில் நிற்கின்றன. முதலாளித்துவ உலகப் பொருளாதாரத்தையே அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றது அமெரிக்காவின் திவால்!

•••

நாட்டாமையின் டவுசர் கிழிந்து விட்டது! உலக முதலாளித்துவத்தின் காவலன், சந்தைப் பொருளாதாரத்தின் மேன்மையை உலகுக்கே கற்றுக்கொடுத்த பேராசிரியன், ஐ.எம்.எஃப்., உலக வங்கி முதலான நிறுவனங்களின் மூலம் ஏழை நாடுகளின் மீது ஒழுங்கை நிலைநாட்டிய வாத்தியார், ஒரு மூணுசீட்டுக்காரனை விடவும் இழிந்த போர்ஜரிப் பேர்வழி என்ற உண்மை 'டர்ர்ர்' என்று கிழிந்து விட்டது. ஆயினும் இது உலக முதலாளித்துவம் சேர்ந்து நடத்திய ஒரு கூட்டுக் களவாணித்தனம் என்பதால் கிழிசலை கோட்டுக்குள் மறைக்க முயல்கின்றது உலக முதலாளி வர்க்கம்.

35 இலட்சம் கோடி 'மொய்'ப் பணத்தை முதலாளிகளுக்கு வாரிக்கொடுக்கும் இந்த 'சூதாடிகள் நல்வாழ்வுத் திட்டத்'துக்குப் பெயர், பிரச்சினைக்குரிய சொத்துக்கள் மீட்புத் திட்டமாம்! (Troubled Assets Recovery Programme). ஒ 'அமெரிக்க ஏழை மக்களுக்கு மருத்துவக் காப்பீடு வழங்கக் காசில்லை' என்று கூறிய புஷ், சூதாட்டத்துக்கு காப்பீடு வழங்கியிருக்கின்றார். மக்களின் ஆரோக்கியத்தை விட முதலாளித்துவத்தின் ஆரோக்கியம் மேன்மையானதல்லவா?

அமெரிக்க நிதிநிறுவனங்கள் அரசுடைமையாக்கப்பட்ட செய்தியை வெளியிட்ட டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளேடு, 'சோசலிச ரசியாவாக மாறுகின்றது அமெரிக்கா!' என்று அச்செய்திக்கு விசமத்தனமாகத் தலைப்பிட்டிருந்தது. அமெரிக்காவில் நடந்திருப்பது என்ன? முதலாளிகளின் கடன்கள் அரசுடைமையாக்கப்பட்டிருக்கின்றன. பொதுச்சொத்தான மக்களுடைய வரிப்



படிப்பகம்

www.padippakam.com

பணமோ தனியார்மயமாக்கப் பட்டிருக்கின்றது. இல்லாத வீட்டுக்கு அமெரிக்க மக்கள் கடன் கட்டவேண்டும். அது நேரடிக் கொள்ளை. அப்படிக் கொள்ளையடித்தவனுக்கு அரசு கொடுக்கும் 70,000 கோடி டாலரையும் மக்கள் இனி வரியாகக் கட்டவேண்டும். இது மறைமுகக் கொள்ளை! இதைவிடப் பட்டவர்த்தனமான ஒரு பகற்கொள்ளையை யாரேனும் நடத்த முடியுமா?

முதலாளித்துவ அரசு என்பது முதலாளி வர்க்கத்துக்குத் தேவையான காரியங்களை முடித்துக் கொடுக்கும் காரியக் கமிட்டியே அன்றி வேறென்ன என்று கேட்டார் மார்க்ஸ். 'கல்வி, மருத்துவம், போன்ற எதையும் அரசாங்கம் ஏழைகளுக்கு இலவசமாக வழங்கக்கூடாது' என்ற கொள்கையை அமெரிக்காவில் அமல்படுத்தி வரும் அமெரிக்க அரசு, எழுபதாயிரம் கோடி டாலரை அமெரிக்க முதலாளிகளின் பாதாரவிந்தங்களில் சமர்ப்பிக்கின்றதே, இது மார்க்ஸின் கூற்றுக்கு நிரூபணமே அன்றி வேறென்ன?

''தொழில், வணிகம், நிதித்துறைகளில் அரசாங்கத்தின் தலையீடு இல்லாமல் இருந்தால், நாங்கள் அப்படியே அறுத்துக் கத்தை கட்டிவிடுவோம்'' என்று பேசிவந்த முதலாளி வர்க்கம், இதோ வெட்கம் மானமின்றி மக்கள் சொத்தைக் கேட்டுப் பகிரங்கமாகப் பிச்சையெடுக்கின்றது. முதலாளித்துவப் பத்திரிகைகள் எனும் நாலுகால் பிராணிகள், ''அரசாங்கம் தலையிட்டு மக்களது வரிப்பணத்தைக் கொடுத்து இந்த நெருக்கடியைத் தீர்க்க வேண்டும்'' என்று சூடு சொரணையில்லாமல் எழுதுகின்றன.

யாருடைய தயவில் யார் வாழ்கின்றார்கள்? முதலாளி வர்க்கத்தின் தயவில் உழைக்கும் வர்க்கம் வாழ்ந்து வருவதாகத் தோற்றுவிக்கப்பட்டிருக்கும் பிரமை உங்களது கண் முன்னே நொறுங்குவது தெரியவில்லையா? தெருக்கூட்டுபவர்கள், குப்பை அள்ளுபவர்கள், மேசை துடைப்பவர்கள் என்று கடையரிலும் கடையராய்த் தள்ளப்பட்ட அமெரிக்கத் தொழிலாளிகள், தமது வியர்வைக் காசில் வீசியெறிந்த வரிப்பணத்தைப் பொறுக்குவதற்கு முண்டியடிப்பவர்கள் யார் என்று அடையாளம் தெரிகின்றதா? அட! இவர்கள் வால் ஸ்ட்ரீட்டின் உலகப் பணக்காரர்கள் அல்லவா?

•••

தாங்கள் அதிமேதாவிகள் என்றும், நிதிச் சந்தையின் அபாயகரமான வளைவுகளில் நிறுவனத்தைச் செலுத்தும் வல்லமை பெற்ற



படிப்பகம்

www.padippakam.com

திறமைசாலிகள் என்றும் அதனால்தான் தாங்கள் ஆண்டுக்கு 400 கோடி, 500 கோடி சம்பளம் வாங்குவதாகவும் பீற்றிக் கொண்டிருந் தார்கள் பன்னாட்டு நிறுவனங்களின் நிர்வாகிகள். இந்த வெள் ளைக்காலர் கண்ணியவான்கள், 'போர்ஜரி வேலை - கள்ளக் கணக்கு - பொய் சர்டிபிகேட் தயாரிக்கும் தொழிலில்' ஈடுபட்டி ருந்த நாலாந்தரக் கிரிமினல்கள் என்பது வெட்ட வெளிச்சமாகத் தெரியவில்லையா?

பணம், பணத்தைக் குட்டி போடுவது போலவும், அப்ப டித்தான் இவர்கள் உலகக் கோடீசுவரர்கள் ஆகி, உட்கார்ந்து கொண்டே சாப்பிடுவதாகவும் இவர்கள் உலகத்துக்குச் சொல்லி வந்தார்கள். அமெரிக்க மக்களையும் அவ்வாறே நம்ப வைத் தார்கள். ''ரியல் எஸ்டேட்டில் பணம் போடு, ஒன்று போட்டால் நூறு ஆகும். பங்குச் சந்தையில் பணம் போடு, நூறு போட்டால் ஆயிரம்'' என்று போதையூட்டினார்கள். ''எல்லோரும் உட்கார்ந்து தின்றால் உழைப்பது யார், எல்லாரும் வட்டியில் வாழ வேண்டு மென்றால், வட்டி கட்டுவது யார்?'' என்ற எளிய கேள்வி கூட அந்தப் போதை மயக்கத்தில் அமெரிக்க மக்களுக்கு உறைக்க வில்லை. இன்று? இல்லாத வீட்டுக்குத் தவணை கட்டும் ஏமா ளிகளாக, தனது ஆயுட்கால உழைப்பு முழுவதையும் அடகு வைத்துச் சூதாடிய தருமனாகத் தெருவில் நிற்கின்றார்கள் அமெ ரிக்க மக்கள்.

உற்பத்தி மென்மேலும் சமூகமயமாகி வருகின்றது, உலகம யமாகி வருகின்றது. ஒரு காரின் பல்வேறு பாகங்கள் பத்து நாடு களில் தயாரிக்கப்பட்டு, ஒரு இடத்தில் பூட்டப்படுகின்றன. ஒரு ஆயத்த ஆடையை ஒரு தையல்காரர் தைப்பதில்லை. அதுகூட 50 கைகள் மாறுகின்றது. இந்த உற்பத்தியினால் கிடைக்கும் ஆதாயமோ, ஒரு சிலர் கையில் மட்டும் குவிகின்றது. உழைப்பாளி களின் கையில் காசில்லை. அவர்களுடைய நிகழ்கால உழைப்பை ஒட்டச் சுரண்டிவிட்டதால், கட்டப்பட்ட வீடுகளை, உற்பத்தியான பொருட்களைத் விற்பதற்காக மக்களின் எதிர்கால உழைப்பையும் இன்றைக்கே சுரண்டிவிடத் திட்டம் தீட்டி கடன் தவணை என்ற வலையில் அவர்களை வீழ்த்துகின்றது முதலாளித்துவம். ரோமானிய அடிமைகள் ஒரு ஆண்டைக்கு மட்டுமே வாழ்நாள் அடிமையாக இருந்தார்கள். அமெரிக்க மக்களோ முதலாளி வர்க் கத்துக்கே வாழ்நாள் கொத்தடிமைகளாக ஆக்கப்பட்டிருக்கின் றார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

புதிய வீடுகளைக் கட்டினால் வாங்க ஆள் கிடையாதென்பதால் பழைய வீடுகளின் 'மதிப்பை' ஒன்றுக்குப் பத்தாக உயர்த்துவதன் மூலம், இரும்புப் பெட்டியில் தூங்கும் பணத்தை (மூலதனத்தை) வட்டிக்கு விட்டு சம்பாதிக்க முனைந்தார்கள் அமெரிக்க முதலாளிகள். இதுதான் உலக முதலாளித்துவம் கண்டிருக்கும் 'பொருளாதார வளர்ச்சி'. இது வளர்ச்சி என்றால் லாட்டரிக் குலுக்கலும், மூணு சீட்டும், நாடா குத்துவதும் கூடப் பொருளாதார வளர்ச்சிதான். இதுதான் பங்குச்சந்தை! இந்த சர்வதேச சூதாட்டக் கிளப்புக்குப் பெயர்தான் நிதிச்சந்தை!

''இந்த நிதிச்சந்தைக்கு விதிக்கப்பட்டிருக்கும் தடைகளையெல்லாம் அகற்றி இந்திய வங்கிகளையும், காப்பீட்டுக் கழகத்தையும், நிதி நிறுவனங்களையும் சுதந்திரமாகச் சூதாட அனுமதிக்க வேண்டும். தொழிலாளர்களின் வருங்கால வைப்பு நிதி உட்பட இந்திய மக்கள் அனைவரின் தாலியையும் அறுத்து, அடகு வைத்து சூதாடும் சுதந்திரம் முதலாளிகளுக்கு வழங்கப்பட வேண்டும்'' என்ற கொள்கையைத்தான் நமது ஹார்வர்டு நிதி அமைச்சர் சிதம்பரம் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றார் என்பதை இங்கே நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்!

எந்தச் சூதாட்டத்திலும் எல்லோரும் வெற்றிபெற முடியாது. சூதாட்டத்தின் ஒழுக்கவிதிகளை மீறுவதிலிருந்து சூதாடிகளைத் தடுக்கவும் முடியாது. போலிப் பத்திரங்களைத் தயாரித்து சக சூதாடிகளுக்கே அல்வா கொடுத்து விட்டார்கள் அமெரிக்கச் சூதாடிகள். 'உலக சூதாடிகள் மனமகிழ் மன்றத்தையே' மூடும் நிலை வந்துவிடுமோ என்று அஞ்சித்தான் உலகநாடுகளின் அதிபர்கள் தவிக்கின்றார்கள். ''வங்கிகள் திவாலானால் அரசாங்கம் பணம் தரும்'' என்று அவசரம் அவசரமாக ஆஜராகின்றார்கள்.

●●●.

புதிதாக எதையும் உற்பத்தி செய்யாமல், உற்பத்தி செய்தவனின் பொருள் மீது சூதாடி, சூதாடி உலக முதலாளித்துவம் கண்டிருக்கும் இந்த 'அபரிமிதமான பொருளாதார வளர்ச்சி'யின் உண்மையான பொருள் என்ன? இது உழைப்பே இல்லாமல் உட்கார்ந்து தின்பவனின் உடலில் வளரும் கொழுப்பு! அந்த வகையில் அமெரிக்க முதலாளித்துவத்துக்கு இப்போது வந்திருப்பது மாரடைப்பு!

அமெரிக்காவுக்கு மாரடைப்பு என்றவுடன் அகில உலகத்துக்கும் வேர்க்கின்றது. உலக முதலாளித்துவத்தின் இதய



படிப்பகம்

www.padippakam.com

மல்லவா? இந்த இதயம் இயங்குவதற்குத் தேவையான இரத்த மாகத் தமது நிதி மூலதனத்தை அமெரிக்கச் சந்தையில் முதலீடு செய்திருக்கும் எல்லா நாடுகளும் நடுங்குகின்றன. செப்டம்பர் 7-ஆம் தேதியன்று அமெரிக்க அரசால் அரசுடைமை ஆக்கப்பட்ட ஃபான்னி, ஃபிரெட்டி ஆகிய இரு நிறுவனங்களில் மட்டும் சீனா, ஜப்பான், ரசியா, பெல்ஜியம், பிரிட்டன், மற்றும் வளைகுடா நாட்டு முதலாளிகள் போட்டிருக்கும் தொகை 1,50,000 கோடி டாலர். அமெரிக்க நிறுவனங்களில் பிற நாடுகள் பெருமளவில் முதலீடு செய்திருப்பது மட்டுமல்ல, அமெரிக்காவுக்கான ஏற்று மதியை நம்பி சீனா, ஐரோப்பா, ஜப்பான் போன்ற பல்வேறு நாடு களின் பொருளாதாரங்கள் இயங்கி வருவதால், 'பெரியண்ணன் சாய்ந்தால் உலகப் பொருளாதாரமே சீட்டுக்கட்டு போலச் சரிந்து விடும்' என்று கலங்குகின்றது முதலாளித்துவ உலகம்.

'புலியாக மாற வேண்டுமானால், புலிவாலைப் பிடிக்க வேண் டும்' என்ற தத்துவத்தின் அடிப்படையில், அமெரிக்காவின் வாலைப் பிடித்து வல்லரசாகி விடக் கனவு கண்டு கொண்டிருக்கும் இந்தியத் தரகு முதலாளி வர்க்கத்துக்கும் கை கால்கள் நடுங்கு கின்றன. மும்பை பங்குச் சந்தை பாதாளத்தை நோக்கிப் பாய் கின்றது. திவாலான அமெரிக்க இன்சூரன்சு கம்பெனியுடன் கூட்டணி அமைத்திருக்கின்றது டாடாவின் இன்சூரன்சு நிறுவனம். ஐ.சி.ஐ.சி.ஐ வங்கியோ, கவிழ்ந்து விடாமல் இருக்க சர்க்கஸ் வேலை செய்கின்றது. திருப்பூரின் பனியன் ஜட்டி ஏற்றுமதி யாளர்கள் முதல், இன்போசிஸ், விப்ரோ, எச்.சி.எல் போன்ற அமெரிக்க அவுட்சோர்சிங் வேலைகளின் இறக்குமதியாளர்கள் வரை அனைவரும் அமெரிக்கா நலம்பெற ஆண்டவனுக்கு நெய் விளக்கு போட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

'அமெரிக்க நெருக்கடிகள் இந்தியாவில் பிரதிபலிக்காது என்று எண்ணுவது முட்டாள்தனம்' என்கிறார் பொருளாதார அறிஞர் அலுவாலியா. 'உலகப் பொருளாதாரமே ஒரு இழையில் பின்னப் பட்டிருப்பதால், அமெரிக்காவின் பிரச்சினையைத் தீர்க்க இந்தி யாவும் தனது பங்களிப்பைச் செலுத்த வேண்டும்' என்று சர்வ தேசிய உணர்வுடன் பேசுகின்றார் மன்மோகன் சிங். 'மகாராட்டி ரத்தில் தற்கொலை செய்து கொள்ளும் விவசாயிகளும் இந்தியர் களே' என்ற தேசிய உணர்வை அவரிடம் வரவழைக்க ஒரு இலட்சம் விவசாயிகள் தமது உயிரைக் கொடுக்க வேண்டியிருந்தது என்பதையும் இங்கே நினைவு படுத்திக் கொள்ளுங்கள்!



படிப்பகம்

www.padippakam.com

அமெரிக்க வீழ்ச்சியின் காரணமாக இந்தியப் பங்குச்சந்தையும் சரியத் தொடங்கியவுடனே, 'அரசாங்கம் முட்டுக் கொடுத்து நிறுத் தும்' என்று அறிவித்தார் ப.சிதம்பரம். அமெரிக்கக் கடன் பத்தி ரங்களை வாங்கி இந்திய முதலாளிகள் நட்டமடைந்திருந்தாலோ, இந்திய வங்கிகள் கவிழ்ந்தாலோ நம்முடைய வரிப்பணத்தி லிருந்து நிதியமைச்சர் அதனை ஈடுகட்டுவாராம்! அமெரிக்க முதலாளிகளின் உண்டியலில் இந்திய மக்களின் வரிப்பணமும் காணிக்கையாகச் செலுத்தப்படுமாம்!

தனியார்மயம், தாராளமயம், உலகமயம் என்ற கொள்கையால் அர்ஜென்டினா, மெக்சிகோ, இந்தோனேசியா, தென் கொரியா போன்ற பல நாடுகள் திவாலாக்கப் பட்டிருக்கின்றன. இப்போது அமெரிக்காவின் டவுசரே கிழிந்து விட்டது. 'எசமானின் மானத்தைக் காப்பாற்ற உங்களுடைய வேட்டியை உருவித் தருவ தாக' உங்களால் ஜனநாயகப் பூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிதி அமைச்சர் உறுதி அளித்திருக்கின்றார்.

இதோ, கம்யூனிசத்தைத் தோற்கடித்த முதலாளித்துவம் வெற்றி உலா வந்து கொண்டிருக்கின்றது! மகா ஜனங்களே, கோவணம் பத்திரம்!

● மருதையன்
புதிய கலாச்சாரம், அக்டோர் 2008



படிப்பகம்

www.padippakam.com

# வாசகர் விவாதம்

**கோவி.கண்ணன்:** ம்... என்னத்தைச் சொல்வது! சேமிப்பில் போடும் பணமாவது கிடைக்குமா என்ற நிலையை அடையப் போவதாகத் தெரிகின்றது. உலக அழிவு நெருங்குவதை இது போன்று நடப்பவைகள்தான் மறைமுகமாகக் காட்டுகின்றது!

**ராபின்:** அமெரிக்கா என்ன.. இந்தியாவிலேயே நகரங்களில் வீடுகளின் வாடகையும் விலையும் ஏறிக்கொண்டே போவதைப் பார்த்தால் பயமாகத்தான் இருக்கின்றது. கண்ணை மூடிக்கொண்டு எந்தக் கொள்கையைப் பின்பற்றினாலும் அழிவுதான்.

**நரேன்:** இதைப் பற்றி இன்னும் அதிகம் எழுதுங்கள். மேலும் இந்த நேரத்தில் வாரன் பஃபே ஏன் பங்குச் சந்தையில் முதலீடு செய்தார் என்பதையும் எழுதுங்கள்.

**ராகவன் நைஜீரியா:** அருமையான அலசல் ! அமெரிக்க, ஐரோப்பிய சந்தை வீழ்ந்தால் அது உலகெங்கும் பிரச்சினையைத் தோற்றுவிக்கும். இந்திய பங்குச்சந்தை கண்மூடித்தனமாக ஏறும்போதே நினைத்தேன், ஒரு நாள் இது கவிழ்ந்து பலரையும் திவாலாக்கும் என்று. அது நடந்தே விட்டது. நிதியமைச்சரோ பதட்டப்பட வேண்டாம் என்கிறார். பதட்டம் அரசியல்வாதிகளுக்கானதல்ல, அது மக்களுக்கானது.

**குமரன்:** மிகவும் பயனுள்ளதாக இருந்தது. சிதம்பரமும் மன்மோகன் சிங்கும் இனியும் நாடகமாடாமல் தேசத்திற்கு நலம் செய்ய வேண்டாம்! தீங்கு செய்யாமல் இருந்தால் போதும்!



படிப்பகம்

www.padippakam.com

குப்பன் யாஹூ: நல்ல பதிவு, ஒருவேளை இந்திய 2020-இல் உண்மையாகவே வல்லரசு ஆகிவிடும் போல.

மருத்துவர் ருத்ரன்: நல்ல பதிவு. யாராவது இக்கட்டுரையை ஜாலியாகப் படிப்பவர்களின் மொழிக்கு மாற்றி எழுதினால் சிறப்பாக இருக்கும்.

ஆர்.செல்வகுமார்: மிகவும் ஆழ்ந்து எழுதப்பட்டுள்ள கட்டுரை. எச்சரிக்கை மணி என்று கூடச் சொல்லலாம். வலைப்பூக்களில் இது போன்ற கட்டுரைகள் வருவதில்லையே என்று ஏங்கிக் கொண்டிருந்தேன். இக்கட்டுரை எனது ஏக்கத்தைத் தீர்த்து வைத்து விட்டது.

ராஜேஷ்: மிக நன்றாக இருந்தது. ஆனால் இன்னமும் நம்முடைய அதிபுத்திசாலிகள் (அதாங்க நம்ம ஐ.டி. மகாஜனம்) இதைப்பற்றி எல்லாம் கவலைப்படாமல் நம் நாட்டின் பணவீக்கத்தை (குறிப்பாக வீட்டுமனை வர்த்தகம்) கூட்டிக்கிட்டே போறாங்க.. அமெரிக்காவின் இந்த நிலைமை நமக்கெல்லாம் ஒரு எச்சரிக்கை மணி. நாம் இன்னும் விழிக்காமல் விட்டால் நாமும் திவாலாகும் காலம் வெகு தொலைவில் இல்லை.

சந்துரு: நம்ம லோக்கல் பிக்பாக்கெட் மணி, பிளேடு பக்கிரி எல்லாம் பேசாம இவனுங்ககிட்ட தொழில் கத்துக்கலாம்.

பகத்: மிகவும் பயனுள்ள பதிவு. இதுவரை முதலாளித்துவம் சரி என்று வாதிட்டவர்களும் இன்று வாயடைத்து நிற்கின்றனர்.. இன்னொரு செய்தியை இங்கே பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன்.. வாஷிங்டன் மியூச்சுவல் என்ற நிதி நிறுவனத்தில் தலைமை நிறுவன அதிகாரியாக பணியாற்றியவர் ஆலன் பிஷர்மன்.. இவர் அந்த நிறுவனத்தில் பொறுப்பேற்று வெறும் 17 நாட்களே வேலை செய்தார், சரியாக 18 வது நாள் அந்த நிதிநிறுவனம் திவால் ஆனது. ஆனால் அந்த 17 நாட்கள் வேலை செய்ததற்காக அவருக்கு கொடுக்கப்பட்ட சம்பளம் 20 மில்லியன் டாலர்கள். இதில் அவருக்கான போனசும் அடக்கம்..! இது ஏதோ ஒருவருக்கு மட்டும் கிடைத்த லாட்டரி பரிசு அல்ல. இவரைப் போன்று பல நிதிநிறுவன அதிபர்களும் இந்த நெருக்கடி நிலையில் பல மில்லியன் டாலரைச் சம்பளமாகப் பெற்றுள்ளனர். வங்கிகளில் உள்ள மக்களின் சேமிப்புப் பணத்திற்கு உத்திரவாதம் இல்லை; ஆனால் அந்த வங்கியின் தலைமை அதிகாரிகளுக்கு போனசுடன் சம்பளம்..



படிப்பகம்

www.padippakam.com

**மருத்துவர் புருனோ:** தெளிவாகப் புரிந்துகொள்ள முடிந்தது. நல்ல இடுகை.

**உலகம்ஸ்:** நல்ல ஆய்வு.

**ஹரி ஹர கிருஷ்ணன்:** ஹை! இது எங்க போய் முடியுமோ தெரியவில்லை. ஒரு காலத்தில் இது போன்ற நிலைமை நம் இந்தியாவில் வராமல் பார்த்துக் கொண்டு அதை உலகுக்கும் சொல்லிக் கொடுக்க வேண்டும். வீட்டுக்கடன் மாதிரி இந்த கடன் அட்டை பழக்கம் நம் இந்தியாவிலும் அதிகம் பரவ ஆரம்பித்துள்ளது. இதனால் ஏற்படும் வலி என்னவென்று புரியவில்லை இவர்களுக்கு. ஒரு மாத சம்பளம் ரூ.30,000 .. செலவு போக மீதி ரூ.10,000 ஐ சேமிக்காமல் கடன் அட்டைக்கான மாதத் தவணைக்கு அதனை உபயோகப் படுத்துகின்றார்கள் .. ஆக சம்பளம் ரூ.30,000, ஆனால் செலவு ரூ.45,000. இதுதான் கடன் அட்டை வைத்திருப்பவர்களின் இலட்சணம்.

**செங்கொடி:** நல்ல பதிவு தோழர்! இங்கு (தம்மாம் சௌதி) இன்னும் புதிய ஜனநாயகம் கிடைக்கவில்லை. உங்கள் பதிவைப் படியெடுத்து இங்குள்ள தமிழர்களிடம் கொடுத்து வருகின்றேன்.

**நல்லதந்தி:** அற்புதமான பதிவு ! எங்களைப் போன்ற விபரம் குறைந்தவர்களுக்கும் தெளிவாகப் புரியும்படி எழுதியுள்ளீர்கள் !நன்றி!

**சந்திரன்:** மிகவும் பயனுள்ள பதிவு. தெளிவாக எழுதப்பட்டுள்ளது. நன்றி !

**உண்மைத்தமிழன்:** மிக மிகப் பயனுள்ள பதிவு.. என்னைப் போன்ற முழு விபரம் பெறத் துடித்தவர்களுக்கு மிகப் பெரிய உதவியைச் செய்திருக்கிறீர்கள்.. நன்றி.. நன்றி.. நன்றி. வாழ்க வளமுடன்!

**சயந்தன்:** கனதியான பதிவு. இந்த விடயத்தில் முழுமையாக என்ன நடந்தது என்பதைத் தெளிவாக பொருளாதார அறிவு முக்கியம் என்ற நிபந்தனையின்றி புரியும் விதத்தில் எழுதியிருக்கிறீர்கள்.

**விஜய்:** அருமையான பதிப்பு. இன்றைய நிதி நிலைமையைத் தெளிவாக எடுத்துரைக்கிறது உமது கட்டுரை.

**ரங்குடு:** ஏதோ முதல்முறையாக அமெரிக்காவில் பங்குச்சந்தை விழுந்து விட்டதாகவும், அமெரிக்காவே திவால் ஆகி விட்டதா



படிப்பகம்

www.padippakam.com

கவும் எழுதப்பட்டுள்ளது இந்தப் பதிவு. இதை விட மோசமான பங்குச்சந்தை வீழ்ச்சிகளையும், வீட்டு விலைச் சரிவுகளையும் 1929/1930 களிலும், 1980-களிலும் பார்த்திருக்கின்றது அமெரிக்கா. இந்த முறை உலகம் தழுவிய இணையத் தொடர்பால், எல்லோருக்கும் தெரிகின்ற மாதிரி நடக்கிறது அல்லது நடப்பது எல்லோருக்கும் தெரிகின்றது. இன்று அரசுடைமையான பேனி மே, ப்ரடி மேக் போன்றவை 1930-இல் நிகழ்ந்த பங்குச்சந்தை வீழ்ச்சியில் உருவானவை. எந்த ஒரு இஸமும் நீண்ட நாள் நிலைப்பதில்லை. கம்யூனிஸம் கொஞ்சம் சீக்கிரமாக விழுந்தது. இன்று முதலாளியிஸம் விழத் தொடங்கியுள்ளது. ஆனால் அன்றும், இன்றும், என்றும் திறமை படைத்தவர்கள் எப்போதும் பணம் பண்ணுவார்கள். இத்தனை வீழ்ச்சியிலும் ஏராளமாகப் பணம் பண்ணியவர்கள் இருக்கிறார்கள். அவர்கள்தான் தங்கத்தில் முதலீடு செய்தவர்கள், பங்குகளை ஷார்ட் செய்தவர்கள். நாம் எந்தக் காலத்திலும் பிழைப்பவர்களைப் பார்த்து கற்றுக்கொள்ள வேண்டுமே தவிர, 'பங்குச் சந்தை விழுந்து விட்டது, அமெரிக்காவின் டவுசர் கிழிந்து விட்டது' என்று பதிவு போடலாமே தவிர, நமது டவுசர் கிழிவது தெரியாமலே போய்விடும். என்ன செய்வது ! நாம் எல்லோரும் சினிமா பார்த்து, கார்ட்டூன் பார்த்து மகிழத்தான் லாயக்கு என்பதை விகடன் நாணயமும், புதிய கலாச்சாரமும் மீண்டும் நிரூபிக்கின்றன.

ஹிதா: அருமையான பதிவு ! ஆனால் இந்தியாவும் இது போன்ற நிலையை வெகு விரைவில் சந்திக்கும். அதற்கான அறிகுறிகள் தோன்றி விட்டன... அ) மக்களின் பேராசையும், நுகர்வு வெறியும்; ஆ) பணக்காரர்களும் அரசியல்வாதிகளும் பெரும் செல்வத்தைச் சுருட்டும் அதே நேரத்தில் சாதாரண மனிதர்களுக்கு வாழும் உரிமை கூட மறுக்கப்படுகின்றது. இனி பணக்காரர்களுக்கு மட்டுமே கல்வியும் சுகாதார நல்வாழ்வும் என்ற நிலைக்கு இந்தியா சீக்கிரம் தள்ளப்படும்.

ராஜ்குமார், குவைத்: அருமையான அலசல்... அமெரிக்காவின் முடிவு துவங்குகின்றதோ?

அறிவுடைநம்பி: மிகச் சிறந்த பதிவு. இந்த நிலையிலும், நிவாரணத்தை அறிவித்த அமெரிக்க அதிபரின் உரையை 'தி லாஸ்ட் டே' திரைப்படத்தோடு ஒப்பிட்டு மெச்சுகின்றார்கள், எங்கள் ஐ.டி. கம்பெனியின் அமெரிக்க தாசர்கள்.



படிப்பகம்

www.padippakam.com

அதி. அழகு: *மிகச் சிறந்த ஆய்வுடன் கூடிய பதிவு. பாராட்டுக்கள்!*

*இதோ சில தகவல்கள்: பொருளாதார நெருக்கடியினால் அதிகரிக்கும் தற்கொலைகள் கெல்லி கென்னடி, அஸோஸியேட்டடு பிரஸ், அக்டோபர், 14. தான் 38 வருடங்களாக வாழ்ந்து வந்த வீட்டை ஜப்தி செய்ய வந்த அதிகாரிகளின் முன்னால் 90 வயது மூதாட்டி தற்கொலை.. தனது மார்பில் துப்பாக்கியால் சுட்டுக்கொண்டு தற்கொலை முயற்சி. மாஸாசூசட்ஸில் கார்லீன் எனும் குடும்பத் தலைவி தனது வீட்டைக் கையகப்படுத்த முனைந்தால் தற்கொலை செய்து கொள்வேன் என வங்கிக்கு கடிதம் எழுதி அனுப்பிவிட்டு தற்கொலையும் செய்து கொண்டார். செப்டம்பர் 2001-க்கு பிறகு இந்த நிதிப் பேரழிவுதான் மக்களைப் பெரும் துயரத்தில் ஆழ்த்தி விட்டது. மக்கள் காலை வாரி விடப்பட்டதைப் போல நிலைகுலைந்து போய் விட்டனர் என்கிறார் பங்குத்தந்தை மலோனி. அதே போல தற்கொலை தடுப்பு முகாமுக்கு வரும் தொலைபேசி அழைப்பு பல நூறாகப் பெருகி விட்டது. இதில் பெரும்பான்மையானோர் வீடு ஜப்தியாகி நிராதரவாக விடப்பட்டவர்கள்.*

*''எங்களிடத்தில் வருபவர்கள் பலர் அனைத்தையும் இழந்து விட்டதாகச் சொல்கின்றனர். வீடு, வேலை எதுவுமின்றி நடுத்தெருவில் நிற்பதாகக் கூறுகின்றனர்'' என்கிறார் திரு. செர்வாசியோ, ப்ளோரிடா தற்கொலை தடுப்பு ஆலோசனை முகாமின் தலைவர். ஆனாலும் துயரங்கள் பெருகிக் கொண்டுதான் இருக்கின்றன. கடந்த வாரம் லாஸ் ஏஞ்சல்ஸில் வேலையையும் பங்குகளின் விலைவீழ்ச்சியால் பணத்தையும் இழந்த கார்த்திக் ராஜாராம் எனும் நபர், தனது மனைவி, மூன்று மகன்கள் மற்றும் தனது மாமியாரையும் கொன்று தற்கொலையும் செய்து கொண்டார்.*

*டென்னஸியில் ஒரு பெண்மணி தனது வீட்டைக் கையகப் படுத்த வந்த போலீசாரின் முன்னிலையிலேயே தற்கொலை செய்து கொண்டார். செர்விவில்லில் பமீலா ராஸ் எனும் 57 வயது பெண்மணி தனது கனவன் மற்றும் போலீசாரின் முன்னிலையிலேயே மார்பில் சுட்டுக் கொண்டு தற்கொலை செய்து கொண்டார். ஒக்லஹாமாவைச் சேர்ந்த ரோலண்டு கோரே வீடு கைவிட்டுப் போகும் என்ற நிலை வந்துவிட்ட பின்பு தனது மனைவி மற்றும் நாயைக் கொன்று வீட்டையும் கொளுத்தி தானும் தற்கொலை செய்து கொண்டார். இது போன்ற பல செயல்கள் இப்பகுதியில் நடப்பதாகப் போலீசார் தெரிவிக்கின்றனர்.*



படிப்பகம்

www.padippakam.com

''இந்த பொருளாதாரத் திவால் நிலைமை தோற்றுவிக்கும் மன உளைச்சல் மிகக் கொடியது. ஒரு கட்டத்திற்கு மேல் தாக்குப்பிடிக்க முடியாத நபர்கள் தற்கொலை செய்து கொள்வதோடு மட்டுமல் லாமல், தனது குடும்பம் இந்த சூழலைச் சந்திப்பதை விட இறப்பதே மேல் என நினைத்து அவர்களையும் கொன்று விடுகின்றார்கள்'' என் கிறார் வாஷிங்டனின் வன்முறை ஆய்வு மையத்தின் நிர்வாகி கிரிஸ்டின் ரான்ட். ''இந்த பொருளாதார நெருக்கடி தீவிர மன உளைச் சலின் தோற்றுவாயாக இருக்கின்றது. நிறுவனங்களைக் கைதூக்கி விடும் அரசு தங்களைக் கைகழுவி விட்டதனால் மக்கள் பீதியோடும் அரசின் மேல் கடும்கோபத்தோடும் இருக்கின்றனர். பொதுவாகவே இது போன்ற நேரங்களில் தற்கொலைகள் அதிகரிக்கத்தான் செய் யும்'' என்கிறார் ஹூஸ்டனைச் சேர்ந்த மனநல மருத்துவர் எட்வர்ட் சார்லஸ்வொர்த்.

கத்தோலிக்க சமூக சேவை மையம் தனது உறுப்பினர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் இப்பிரச்சினையினால் மனநல மருத் துவச் சிகிச்சை பெற்று வருகின்றார்கள் எனக் கூறியுள்ளது. அது மட் டுமல்லாது இப்பிரச்சினைகளுக்கு காரணம் யார் என்பதைப் புரிந் துகொள்ள முடியாத மக்கள் தங்களது கணவனையோ மனை வியையோ குற்றம்சுமத்தி சண்டையிடுகின்றனர். இதனால் குடும் பங்கள் பல சிதைந்து போகின்றன.

பெரியார் கிரிட்டிக்: அமெரிக்கா ஆட்டம் கண்டிருக்கின்றது. அது மீண்டு விடும். டவுசர் கிழிந்து காணமல் போனது உங்களின் புரட்சி கரத் தத்துவம்தான். மாவோவின் சீனம் பெயரளவில் சோசலிசம் நடைமுறையில் முதலாளித்துவம் என்று இருந்தால், நேபாளத்தில் உள்ள புதிய அரசோ விப்ரோவையும், இன்போஸிசையும், வருக முதலீடு செய்க என்று அழைக்கின்றது. உலக வங்கி, ஐரோப்பா வுடன் பேசி உதவி கோருகின்றது. நீங்கள் இந்திய அரசை வெறுத்து வசை பாடினாலும் நேபாள அரசு இந்திய அரசை மிக்க நட்புடன் உறவு கொண்டாடுகின்றது. அங்கு என்ன சோசலிசப் பொருளா தாரமா வரப் போகின்றது? உலக வங்கி கடனுடன் பிரசந்தா பொருளாதார சீரமைப்பு செய்வார். அப்போது பு.ஜ. / பு.க. வில் என்ன எழுதுவீர்கள்?

மருதையன்கள் போகாத ஊருக்கு வழி சொல்ல பத்திரிகை நடத் துகின்றார்கள். பு.ஜ. / பு.க. முன் அட்டையில் தொடங்கி பின்



படிப்பகம்

www.padippakam.com

அட்டையில் முடிந்து விடும் இவர்களின் புரட்சி. இவர்கள் அமெரிக்கா திவால் என்று எழுதுகிறார்கள். டவுசர் கிழிஞ்சு தொங்கறவன் வேட்டி கட்டிருப்பவனைப் பார்த்து 'வேட்டியை ஏன் தலையில கட்டலை'ன்னு, 'இடுப்புல வேட்டியக் கட்டாதே மடையா'ன்னு கேட்டா எப்படி இருக்கும். அப்படித்தான் இருக்கு வினவு எழுதறதும், அவர் எடுத்துப் போடற கட்டுரைகளும்.

**மாணவன்:** ரங்குடு, 'நாம் எந்தக் காலத்திலும் பிழைப்பவர்களைப் பார்த்து கற்றுக் கொள்ள வேண்டுமே..', பிழைப்பவர்கள் என்பது ரங்குடுவின் அகராதியில் ஏமாற்றுபவர்களைக் குறிக்கும் போலும்.

பெரியார் கிரிட்டிக், பெரியார் பெயர் வைத்துக் கொண்டால் பத்தாது. நேபாளத்தில் என்ன வகையான அரசு இருக்கின்றது. சோசலிசம் என்றால் என்ன? படிக்கணும். சரியா ! போ கண்ணு. போய் படிச்சுட்டு வா! வரலாறு எப்போதும் முன்னேறித்தான் செல்லும். அப்போது தெரியும், டவுசர் கிழிந்து காணமல் போவது யாருக்கு என்று..

**அர டிக்கெட்டு:** பெரியார் கிர்ர்ர்ரிடிக்கு, ரசியாவுல, சீனாவுலெல்லாம் கம்யூனிசம் கவுந்தது நிசம்தான். அத நிமுத்துற கவல உனக்கு வேணாம் கண்ணு. நாங்க பாத்துக்கறோம் .. உங்க மேட்டர பேசுங்க .. ஏதோ நீங்க கவுந்தீங்க.. நஷ்டமாச்சு! கடன உடன வாங்கி சமாளிச்சா, ஏன் உங்களப் பத்தி எழுதணும்! ஆட்டம் கண்டிருச்சாம். அது மீண்டுருமாம். எப்படி மீண்டு வரும்.. அதப் பத்தி நீங்க பேச மாட்டீங்க!

பிச்ச எடுத்து, அதுவும் உழைக்குற மக்கள் வரிப்பணத்துல பிச்ச எடுத்து மீண்டு வர வேண்டிய நெலமையில் இருக்குற உங்களுக்கு இவ்வளவு சவடாலா? கந்து வட்டிக்கு கடன வாங்குன எங்க விவசாயி பூச்சி மருந்த குடிச்சுட்டு சாவறான் .. அடுத்தவன் காசப் பொறுக்கித் தின்னுட்டு தெனாவெட்டா பேச உனக்கு வெக்கமா இல்ல! கட்டுரையில எழுதியிருக்குற விசயத்துக்கு பதிலச் சொல்லு. முடியலன்ன முன்னாடியும் பின்னாடியும் பொத்திக்கிட்டு போ! இப்படி அறிவு நாணயம் இல்லாம பதிவுல போடாத விசயத்தப் பத்தி வாந்தி எடுத்துட்டு ஒளிஞ்சுக்க வேண்டியது... த்தூ!.. இதுவும் ஒரு பொழப்பா ?



படிப்பகம்

www.padippakam.com

**புள்ளிராஜா:** 'மகாராட்டிரத்தில் தற்கொலை செய்து கொள்ளும் விவசாயிகளும் இந்தியர்களே' என்ற தேசிய உணர்வை அவரிடம் வரவழைக்க ஒரு இலட்சம் விவசாயிகள் தமது உயிரைக் கொடுக்க வேண்டியிருந்தது என்பதையும் இங்கே நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்! 100% உண்மை!

**லஷ்மண்:** இது இந்தியா ஒரு பொருளாதார சக்தியாக, உலகுக்கு முன்னுதாரணமாக விளங்க வேண்டிய தருணம். நமது பிரதமரும், நிதியமைச்சரும் மக்களுக்கு உண்மையைச் சொல்லாமல், 'பீதியடைய வேண்டாம் எல்லாம் கட்டுக்குள் இருக்கிறது' என்பதையே சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது. நல்ல கட்டுரை.

**மகேஷ்:** அருமைங்க.. அருமை.. ரொம்ம்ம்ம்ம்ம்ம்ம்ப.. நீளமான பதிவா இருந்தாலும், எல்லாத்தையும் விளக்கமா எழுதி இருக்கு. நான் கூட இதப்பத்தி இரண்டு பதிவு எனக்கு புரிஞ்ச விதத்துல எழுதியிருக்கேன். டைம் இருக்கும்போது பாருங்க. நன்றி.

**ஜமாலன்:** தோழர் உங்கள் கட்டுரையை எனது பதிவில் சுட்டியாகத் தந்துள்ளேன்.

**லைட் இங்க்:** அருமையான கட்டுரை ! வாழ்த்துக்கள் !

**உலகநாதன்:** தெளிவான கருத்து. பலரது கண்களைத் திறக்கும்.

**சிவா:** அபாரமான கட்டுரைக்கு நன்றி. எப்போ இந்தியாவின் டவுசர் கிழியப் போவுதோ?

**ஜேசுதாசன்:** முதலாளித்துவத்தின் கோர முகத்தை கட்டுரை படம் பிடித்து காட்டுகின்றது.

**சரவண குமார்:** அருமையான அலசல் ! அற்புதமான எழுத்தாளுமை!

**முத்துக்குமார்:** அருமையான அலசல். நிறைய திரைமறைவுத் தகவல்கள். உங்களால் இதற்கான மூலங்களை, இணையச் சுட்டிகளைக் கொடுத்து உதவ முடிந்தால் மிகவும் உதவியாக இருக்கும். ''ஏன், மக்களுடைய அந்த வரிப்பணத்தை மக்களுக்கே நிவாரணமாகக் கொடுத்தால்? அப்படிக் கொடுத்தால், உலக முதலாளித்துவமே



படிப்பகம்

www.padippakam.com

வெடித்துச் சிதறிவிடும்.'' அருமையான கருத்து. எந்த மக்கள்நல அரசும் அதைத்தான் செய்திருக்கும்.

இரு வாரத்திற்கு முன்னால் அமெரிக்க தேசிய வானொலியைக் கேட்டேன். அதில் டியூக் பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர் ''இந்த 700 பில்லியன் டாலர்களையும் நிறுவனங்களுக்கே கொடுக்காமல் அதில் 50% மக்களுக்கும் கொடுக்க வேண்டும். அதனால் வீடு ஜப்தி யாகும் நிலையில் இருக்கும் மக்கள் வீட்டை விட்டுவிட்டுப் போகாமல் அதை வைத்துக் கொள்ளவும் முடியும். வங்கிகளும் திவா லாகாமல் இருக்கும்'' என்றார்.

மருத்துவர் அன்புமணி: அருமையான கட்டுரை. இதை ஆங்கி லத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டால் பலருக்கும் பலனளிக்கும். முதலாளித்துவம் தனக்குத்தானே குழி பறித்துக் கொள்ளும் ஒரு அமைப்பு.

ஸ்ரீ: தவறான பொருளாதாரக் கொள்கையும், தவறான வாழ்க்கை முறையும்தான் அமெரிக்காவின் தற்போதைய நிலைக்குக் காரணம். தங்களின் கொள்கையை மற்ற நாடுகளின் மீது திணித்த அமெரிக்கா இப்போது முழி பிதுங்கி நிற்கின்றது.

•••



படிப்பகம்

www.padippakam.com

## ஐ.டி. துறை நண்பா, உனக்கு ரோஷம் வேணும்டா!

ஈழத் தமிழருக்கு அடுத்தபடியாக தமிழ்ப் பதிவுகளை அதிகம் படிக்கும் ஐ.டி. நண்பா, இந்தப் பதிவு உனக்காக எழுதப்படுகின்றது. அமெரிக்காவில் வெடித்த பொருளாதார நெருக்கடி கடல் தாண்டி இந்தியாவையும் பாதித்திருப்பதை உன் அனுபவத்தில் உணர்ந்திருப்பாய். சத்யம், இன்போசிஸ், விப்ரோ, எண்ணற்ற மென்பொருள், பி.பி.ஓ., கால் சென்டர் நிறுவனங்களில் ஆள்குறைப்பு அரங்கேறி வருகின்றது.

சம்பள உயர்வு, இன்சென்டிவ்ஸ், அத்தனையும் நிறுத்தப்பட்டிருக்கின்றது. கசக்கிப் பிழிபடுவதற்கு தயாராக இல்லாத ஊழியர்கள் தயவு தாட்சண்யமின்றி தூக்கி எறியப்படுகின்றனர். புதியவர்கள் சில ஆயிரம் குறைவான சம்பளங்களுக்கு வேறெந்த சலுகையுமின்றி சேர்க்கப்படுகின்றனர். அதிகரித்து வரும் டாலர் மதிப்பினால் முந்தைய ஒப்பந்தப்படி போடப்பட்ட வரவினால் ஏற்படும் நட்டத்தை ஊழியர் தலையில் கட்டுவதற்கு நிறுவனங்களின் மனிதவளத் துறை மேலாளர்கள் புதிது புதிதாக யோசித்து வருகின்றனர். பணிச்சுமையும், நேரச்சுமையும் அதிகமாகக் கொடுக்கப்படுகின்றது. முன்பு போல அலுவலக நேரத்தில் பதிவுகளை ஹாயாக படிப்பதற்கு உனக்கு இனி நேரமிருக்காது. இந்த பாதிப்பு ஏன் என்று நீ யோசித்தது உண்டா?

அமெரிக்காவிலிருந்து ஆர்டர்கள் போதுமான அளவு வரவில்லை, அதனால் முதலாளிகளுக்கு இலாபம் குறைந்திருக்கின்றது



படிப்பகம்

www.padippakam.com

என்பதால் இந்த நெருக்கடிகள் என்று நீ பதிலளிக்கக் கூடும். அது உண்மையெனும் பட்சத்தில் அமெரிக்கா நன்றாக இருந்த காலங் களில் உன்னுடைய முதலாளி அந்த இலாபத்தில் ஏன் பங்களிக்க வில்லை என்ற கேள்விக்கு நீ பதிலளிக்க வேண்டும். மாதம் ஒன்றிற்கு பல ஆயிரங்கள் சம்பளம் என்பதைத் தாண்டி உன் நிறுவனத்தின் வரவு செலவு குறித்து உனக்கு ஒன்றும் தெரியாது என்பதோடு அது குறித்து நீயும் பெரிய அளவுக்கு கவலைப்பட்டிருக்க மாட்டாய்? அது தெரிந்து என்ன ஆகப் போகின்றது என்று நீ கேட்கக் கூடும். அது தெரி யாவிட்டால் உனது நிச்சயமற்ற எதிர்காலத்தின் அபாயம் உனது வாழ்க்கையில் ஏற்படுத்தும் அதிர்வுகளை உன்னால் சரி செய்ய முடியாது.

அது கிடக்கட்டும் அமெரிக்கா இருமினால் இந்தியா ஏன் வாந்தி எடுக்க வேண்டும்? அமெரிக்க பொருளாதாரம் பாதிப்படைந்தால் இந்தியாவுக்கு ஏன் நெறிகட்ட வேண்டும்? ஏதோ அமெரிக்கா நம்மைப் போன்ற பலரை வாழவைத்துக் கொண்டிருக்கின்றது என உன்னில் சிலர் நினைக்கக் கூடும். இல்லை நண்பா, அமெரிக்காதான் பல ஏழை நாடுகளைச் சுரண்டி வசதியாக வாழ்ந்து கொண்டிருக் கிறது. இந்தச் சுரண்டலில் அமெரிக்காவின் நடுத்தரவர்க்கமும் அவ திப்படுகின்றது என்பதையும் நீ புரிந்து கொள்ள வேண்டும். அமெ ரிக்காவில் ஒரு மணிநேர வேலைக்கு ஒரு தொழிலாளிக்கு கொடுக் கப்பட வேண்டிய பணத்தில் சிறு அளவுதான் இந்தியாவில் அதே வேலைக்கு கொடுக்கப்படுகின்றது. இதனால் ஒரு அமெரிக்க தொழி லாளிக்கு வரவேண்டிய வேலை பறிபோகின்றது என்பதோடு உனக்கு கொடுக்கப்படும் குறைவான சம்பளத்தின் மூலம் உன்னை உருவாக்கிய இந்த நாடும் சுரண்டப்படுகின்றது. இப்படி இரு பக் கமும் இலாபம் அடிப்பதால்தான் அமெரிக்கா பணக்காரர்களுக்கான நாடாக இருக்கின்றது.

இப்போது அமெரிக்காவில் உள்ள பிரச்சினை என்ன? பல நிறு வனங்கள் திவாலாகியிருக்கின்றன. திவாலானதற்கு காரணம் பொருளாதாரத்தில் அந்த நிறுவனங்கள் நடத்திய சூதாட்டம்தான். இந்த சூதாட்டம் பொழுதுபோக்கிற்காக நடந்தது அல்ல. அமெரிக்க மற்றும் உலக மக்களின் வருமானத்தை தூண்டில் போட்டு அள்ளுவ தற்கு நடந்த பகல் கொள்ளை. இந்தப் பகல் கொள்ளையினால் ஏற் பட்ட இழப்பைச் சரி செய்ய இந்தியாவும் இழக்க வேண்டு மென்றால் அந்த லாஜிக் சரியா? அமெரிக்காவில் சில முதலாளிகள்



படிப்பகம்

www.padippakam.com

வருமானம் பார்க்க நாம் பலிகடா ஆகவேண்டுமென்றால் இந்த அடிமை நிலை இந்தியாவிற்கு நல்லதா? அமெரிக்க சிக்கலுக்கு இந்தியா உதவி செய்வது கடமை என்று உனது பிரதமர் மன்மோகன் சிங் ஜால்ரா தட்டுவதைப் பார்த்து உனக்கு கோபம் வந்ததா, இல்லை மகிழ்ச்சி அடைந்தாயா?

அமெரிக்காவின் தும்மலால் மும்பை பங்குச்சந்தைக்கு விக்கல் ஏற்பட்டு 20,000த்தில் இருந்த புள்ளி இப்போது 10,000த்தில் தள்ளாடுகின்றது. உடனே நிதியமைச்சர் வங்கிகளின் ரொக்க இருப்பைக் குறைத்து, வட்டி விகிதத்தையும் குறைத்து ரிசர்வ் வங்கி மூலம் இரண்டரை இலட்சம் கோடி ரூபாயைப் பங்குச்சந்தையில் சூதாடுவதற்கு இறக்கி விட்டிருக்கின்றார். இதனால் அந்நிய முதலீட்டாளர்கள் தங்கள் முதலீட்டை இந்தியாவில் தொடர்ந்து போட்டு விளையாடுவார்களாம். பத்தாயிரம் புள்ளி இழப்பில் வந்த நட்டம் அனைத்தும் உன்னைப் போன்று கொஞ்சம் ஆசைப்பட்டு பங்குச்சந்தையில் சேமிப்பை முதலீடு செய்த நடுத்தரவர்க்கத்திற்கு ஏற்பட்டது என்றால் நிதியமைச்சரோ வெளிநாட்டு நிறுவனங்கள் குறித்து கவலைப்படுகின்றார். இந்த இரண்டரை இலட்சம் கோடி ரூபாயும் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படப் போவதில்லை. உன்னைப் போன்ற சற்று காசு உள்ளவர்கள் தொடர்ந்து பங்குச்சந்தையில் ஏமாறலாம் என்ற நம்பிக்கை ஏற்படுத்துவதற்காகவே இந்த நாடகம் நடத்தப்படுகின்றது என்பது உனக்குத் தெரியுமா?

பள்ளி, கல்லூரி, மருத்துவமனை ஆரம்பிப்பதற்கு பணமில்லை என்று எல்லாவற்றையும் தனியாருக்கு தாரை வார்த்துக் கொடுத்து விட்டு இப்போது முதலாளிகளைக் காப்பாற்றுவதற்கு மட்டும் இவ்வளவு பெரிய தொகை எங்கிருந்து வந்தது, உனக்கு தெரியுமா? இதெல்லாம் உனக்கெப்படி தெரியப் போகின்றது? அதிக சம்பளம் கொடுத்து அலுவலகப் பணியில் கசக்கிப் பிழிந்து, ஓய்வு நேரத்தையும் பொழுது போக்கு என்ற பெயரில் எடுத்துக்கொண்டு கொடுக்கப்பட்ட பணத்தை எப்படிச் செலவழிப்பது என்று அதற்கும் ஏற்பாடு செய்து கொடுத்து உன்னை மொத்தத்தில் ஒரு அரசியல் தற்குறியாக மாற்றி விட்டார்களே என்ன செய்வது? இதனால் நீ கோபப்படலாம். ஆனாலும் மற்றவர்களைப் போல ஐ.டி. துறையில் விவாகரத்து மலிந்து விட்டது, பாலியல் சீரழிவு அதிகரித்து வருகின்றது என்று நான் கவலைப்படவில்லை. மாறாக அரசியல் ரீதியில் நீ சீரழிக்கப்பட்டிருப்பது குறித்துத்தான் வருத்தமடைகின்றேன்.



படிப்பகம்

www.padippakam.com

வருடத்திற்கு சில இலட்சம் சம்பளம், வருடத்திற்கு ஒரு முறை வெளிநாட்டு சுற்றுலா, ஒரு இந்திய சுற்றுலா, இருமாதத்திற்கு ஒரு தடவை பிக்னிக், மாதந்தோறும் கேளிக்கைப் பூங்காக்கள், வாரந் தோறும் கேளிக்கை நிகழ்ச்சிகள், நடிகர் நடிகைகளைக் கூட்டி வந்து சாட்டில் பேசுவது, புதிய படத்திற்கு முதல் காட்சிக்கு அழைத்துச் செல்வது, வெறுமனே ஜாலி மட்டுமல்லாமல் சில நவீன சாமியார் களைக் கூட்டி வந்து தியானம் சொல்லிக் கொடுப்பது, உடலை இளைக்க வைக்க வகுப்புக்கள், அலுவலகத்திலேயே விளையாடு வதற்கு உள்ளரங்குக் களங்கள், கார், அடுக்குமாடிக் குடியிருப்பு வாங்குவதற்கு ஏற்பாடு செய்வது, பல நுகர்வுப் பொருள்களை மாதத் தவணையில் வாங்குவதற்கு அலுவலகத்திற்கே வந்து செய்யப்படும் விற்பனை மேளாக்கள், மாதக் கூப்பன் கொடுத்து பேரங்காடிகளில் பொருள் வாங்குவது, இது போக தாகமெடுத்தால் கோக், பசியெ டுத்தால் பிஸா, போரடித்தால் சத்யம் தியேட்டர், இப்படித்தானே நண்பா நீ வாழ்ந்து கொண்டிருக்கின்றாய்? இந்த வசதிகளை வழங்கிய உலகமயமாக்கம்தான் இதே காலகட்டத்தில் சில இலட்சம் விவசாயிகளை தற்கொலை செய்ய வைத்திருக்கின்றது. இந்த முரண்பாட்டுக்கு உன்னுடைய பதில் என்ன?

உன்னுடைய ஆடம்பரங்களெல்லாம் நிலையானவை அல்ல நண்பா! அவை எந்நேரமும் உன்னிடமிருந்து பறிக்கப்படலாம். உன் பணிச்சூழல் எப்படி இருக்கின்றது என்று பார். வேலைக்கு நேர வரையறை கிடையாது, பதவி ஏற்றத்துக்கும், இறக்கத்துக்கும் எந்த அளவுகோலும் இல்லை. நன்றாக வேலை செய்பவர் நிறுவனத்தை விட்டே துரத்தப்படுவதும், நன்றாக வேலை செய்யா விட்டாலும் நிறுவனத்தால் தக்கவைக்கப்படுவதற்கும் எந்த தர நிர்ணயமும் இல்லை. ஊழியர் கொள்கையில் பின்பற்றப்படும் இரக்கமற்ற தன்மை, மற்ற தொழிற்சாலைகளில் இருக்கும் எந்த தொழிற்சங்க உரிமையும், பாதுகாப்பும், சலுகைகளும் ஐ.டி. நிறுவனங்களில் செல்லுபடியாகாது என்ற நிலை, நூற்றுக்கணக்கில் ஆள்குறைப்பு செய்தாலும் மறுமொழியின்றி அதை ஏற்றுக் கொள்ளும் அடிமைத் தனம், எந்த நிறுவனத்திலும் நிரந்தரமாக வேலை செய்ய முடியாத நிச்சயமற்ற சூழல், இன்னும் எத்தனை அநீதிகளுக்கு மத்தியில் நீ வேலை செய்கின்றாய் என்பதை நான் சொல்லி விளக்கத் தேவை யில்லை. ஆனால் இவையெதனையும் நீ அடிமைத்தனம் என்று கரு தவில்லை. அதுதான் கவலைக்குரியது நண்பா!



படிப்பகம்

www.padippakam.com

உன்னை விடப் பல மடங்கு குறைவாக சம்பளத்தை வாங்கும் ஹூண்டாய் கார் தொழிற்சாலையில் வேலை செய்யும் ஒப்பந்தத் தொழிலாளி கூட தன்னுடைய பணிப்பாதுப்புக்காக, சுயமரியா தைக்காக தொழிற்சங்கம் கட்டும் போராட்டத்தில் ஈடுபட்டிருக் கிறான். நிர்வாகம் பல தடைகளை அரசின் ஆதரவோடு அமல்படுத் தினாலும் அந்தத் தொழிலாளர்கள் தம்முடைய போராட்டத்தில் உறு தியாக நிற்கின்றனர். இப்போது ஐ.டி. துறையில் உனக்கிருக்கும் நிச் சயமற்ற நிலைக்கும், சுயமரியாதை அற்ற சூழலை எதிர்ப்பதற்கும் உனக்கிருக்கும் ஓரே வழி தொழிற்சங்கம் கட்டுவதுதான். உன்னைத் திருத்துவதற்கு மட்டுமல்ல, உன்னுடைய முதலாளிகளின் அட்டூழி யத்தைத் தட்டிக் கேட்பதற்கும் அது ஒன்றுதான் வழி. இன்றைய உனது வாழ்க்கை நாளைக்கே கூட இல்லாமல் போய் விடலாம். அமெரிக்காவின் இரத்த ஓட்டத்தில் இணைக்கப்பட்டிருக்கும் உன் னுடைய நிறுவனம் உன்னுடைய நலனுக்காக இயங்குபவை அல்ல. உன்னுடைய நலனும் இந்தியாவின் நலனும் ஒன்றிணையும் ஒரு பொருளாதாரத்தில்தான் உனக்கு மட்டுமல்ல தற்கொலை செய்யும் விவசாயிகளுக்கும் விடிவைத் தரும் வாழ்க்கையை உருவாக்க முடியும். அதற்கு முதற்படியாக உன்னுடைய இடத்தில் தொழிற்சங் கத்தை முதலில் கட்டு. பிறகு பார் அதனுடைய வலிமையை.

●●●



படிப்பகம்

www.padippakam.com

# வாசகர் விவாதம்

கோட்ஸிலா: தொழிற்சங்கம், செங்கொடி, உண்டியல் இதெல்லாம் இல்லாமல் நீங்க அரசியல் நடத்த முடியாது. அதற்காக அடுத்தவனை உசுப்பி விட்டு நீங்க போயிடுவிங்க. ஆனா ஐ.டி மக்கள் முட்டாள் இல்ல.

புருனோ: நல்ல கட்டுரை. ''அது தெரிந்து என்ன ஆகப்போகிறது என்று நீ கேட்கக்கூடும். அது தெரியா விட்டால் உனது நிச்சயமற்ற எதிர்காலத்தின் அபயாம் உனது வாழ்க்கையில் ஏற்படுத்தும் அதிர்வுகளை உன்னால் சரி செய்ய முடியாது'' நச் !

கமல்: ஆகா கிளம்பிட்டாங்கய்யா கிளம்பிட்டாங்க. என்னடா இது ரொம்ப கருத்து சொல்றாரேன்னு பார்த்தா கடைசியிலதான் தெரியுது இவரோட சிவப்பு கலரு.. செங்கொடி நண்பா, இந்த தொழிற்சங்கத்த வெச்சு நீங்க என்ன இதுவரைக்கும் சாதிச்சிருக்கீங்கன்னு கொஞ்சம் சொன்னா என்ன மாதிரி ரோஷம் கெட்ட பசங்க எல்லாரும் கேட்டுப்போம். போங்கண்ணா போய் ஏதாவது நல்ல வேலையா பாருங்க.

அமரபாரதி: அது தெரிந்து நீங்கள் இதுவரை என்ன செய்தீர்கள் என்று சொல்ல முடியுமா? நீங்கள் ஐ.டி துறையில் இல்லை என்பது தெளிவு. அதிர்வு கிதிர்வு என்று உளற வேண்டாம். உங்கள் தொழிற்சங்கம் மூலமாக என்ன சாதித்தீர்கள் என்றாவது சொல்ல முடியுமா? சமூகத்தில் மேல் மட்ட மனிதர்களுக்கு மட்டுமே கிடைத்துக் கொண்டிருந்த சவுகர்யங்கள் ஐ.டி. துறை வந்த பிறகு மிடில் கிளாஸ் மக்க



படிப்பகம்

www.padippakam.com

ளுக்கும் கிடைத்தது. அது உங்களால் தாங்கிக்கொள்ள முடிய வில்லை என்றால் ஒரு ஜெலுசில் சாப்பிடவும். ''அரசியல் ரீதியில் நீ சீரழிக்கப்பட்டிருப்பது குறித்துத்தான் வருத்தமடைகிறேன்'' என்கி றீர்கள்.

ஆஹா. ஐ.டி. துறையை மட்டும் அரசியல் ரீதிரில் சீரழிக்கி. றார்கள். உடனடியாக அதை எதிர்த்து நீங்கள் மட்டும் தலைமைச் செயலகம் முன்பாக ஒரு வாரம் உண்ணா விரதம் இருங்கள். அமெ ரிக்காவைப் பொறுத்த வரை ஐ.டி. துறையில் அமெரிக்கனுக்கும், இந்தியர்களுக்கும், சீனர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் ஒரே சம்பளம் தான். ஆனால் அவுட் சோர்ஸிங்கினால் அவர்களுக்கு காசு மிச்சமாகிறது என்பது உண்மைதான். அப்படி அவுட் சோர்ஸிங் செய் யப்படும் இந்தியாவில் ஐ.டி. மக்களுக்கு கிடைக்கும் சம்பளம் என்பது மற்ற துறைகளில் நினைத்துக் கூடப் பார்க்க முடியாது என்பது தெரியும் தானே?

ஐ.டி. துறையில் அமெரிக்காவில் கொடுக்கப்படும் அதே அளவு சம்பளம் இந்தியாவில் இந்தியனுக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்று கூவுவது அறிவீனம். அமெரிக்காவில் நியூ ஜெர்ஸியில் ஒரு இரண்டு பெட்ரூம் அபார்ட்மென்ட்டின் வாடகை 1350 டாலர்கள். ஆனால் இந்தியாவில் அதே அளவு வீட்டின் வாடகை பெரு நகரங்க ளிலேயே ஒரு 10000 - 15000 ரூபாய்தான் இருக்கும். எல்லாமே ரிலேடிவ் அய்யா. உங்களின் தொழிற்சங்கத்தில் மும்பையில் கொடுக்கப்படும் அதே அளவு கூலி நெய்க்காரப்பட்டியில் கொடுக் கப்பட வேண்டும் என்று போராடுவீர்களா?

''இந்தப் பகல் கொள்ளையினால் ஏற்பட்ட இழப்பை சரி செய்ய இந்தியாவும் இழக்க வேண்டுமென்றால் அந்த லாஜிக் சரியா?'' என்று கேட்கிறீர்கள். நீங்கள் ரொம்ப கவலைப்பட வேண்டாம். இந்த இழப்பினால் அமெரிக்கா இழந்ததை கம்பேர் செய்யும் போது இந்தியா இழந்தது குறைவுதான்.

''அதிகரித்து வரும் டாலர் மதிப்பினால் முந்தைய ஒப்பந்தப்படி போடப்பட்ட வரவினால் ஏற்படும் நட்டத்தை ஊழியர் தலையில் கட்டுவதற்கு நிறுவனங்களின் மனிதவளத் துறை மேலாளர்கள் புதிது புதிதாக யோசித்து வருகின்றனர்'' என்கிறீர்கள். அய்யோ அய்யோ! அமெரிக்க டாலர் மதிப்பு அதிகரித்தால் அமெரிக்க வேலையை செய்யும் இந்தியர்களுக்கு அதிக ரூபாய் கிடைக்கும். 3 டாலருக்கு



படிப்பகம்

www.padippakam.com

ஏற்றுமதி செய்து கொண்டிருந்த பனியனுக்கு 120 ரூபாய் முதலில் கிடைத்தால் இப்போது 150 ரூபாய் கிடைக்கும்.

''நூற்றுக்கணக்கில் ஆட்குறைப்பு செய்தாலும் மறுமொழி யின்றி அதை ஏற்றுக் கொள்ளும் அடிமைத்தனம், எந்த நிறுவனத் திலும் நிரந்தரமாக வேலை செய்ய முடியாத நிச்சயமற்ற சூழல்.'' யாருக்கு வேண்டும் நிரந்தர வேலை? நிறுவனம் நல்லபடி நடந்தால் ஊழியர்களுக்கு கொடுக்கும். இல்லையென்றால் குறைத்துக் கொடுக்கும். அதுவும் இல்லயென்றால் ஆட்குறைப்பு செய்யும். அதுதான் வாழ்க்கை. இன்னும் எழுதணும். ஆனா இப்போதைக்கு இது போதும். மிச்சத்த மத்தவங்க செய்வாங்க.

குப்பன் யாஹூ: இது ஒரு தற்காலிக சூழ்நிலைதான், மீண்டும் ஈஸ்ட் கோஸ்ட் ரோடும் (ECR), ஓல்டு மகாபலிபுரம் ரோடும் (OMR) புத்து ணர்வு பெறும். ஐ டி நிறுவனங்கள் வந்த பிறகுதான் அலுவலக அர சியல், அனுபவம் நிறைந்த ஊழியர்கள் புதிதாக படித்து வந்த ஊழி யர்களை புறக்கணித்தல், அலுவலக ஜால்ராக்கள், திறமை இல்லா விட்டலும் வருடா வருடம் நிரந்தர முன்னேற்றம் போன்ற பழைய சடங்குகள், பழைய அழுக்குகள் அலுவலகங்களில் ஒழிந்தது.

ஐ.டி, பீ.பி.ஓ, பன்னாட்டு நிறுவனங்கள் வந்த பிறகுதான் ஊழி யர்களிடம் பரந்த மனப்பான்மை வந்தது. நீங்கள் இந்த மாறுதல் வேண்டாம் என்கிறீர்கள். இப்போதும் சென்னையில் விப்ரோ, டி.சி.எஸ், ஷெல் நிறுவனங்களின் ஊழியர்களுக்கு அளிக்கும் அலு வலகப் பேருந்தை பாருங்கள். அதோடு அசோக் லேலண்டு, எண்ணூர் பௌண்டரிஸ் பேருந்தையும் பாருங்கள். ஐ.டி. நிறுவ னங்கள் தான் முதல் முதலாக ஊழியரை ஒரு மனிதனாக, சொத்தாக நினைத்தன. ஹுண்டாய், எண்ணூர் பௌண்டரி, முருகப்பா குழு மங்கள் ஊழியர்களை மற்றும் ஒரு இயந்திரமாகவே எண்ணின. பொறாமை வேண்டாம் நண்பரே.

அமரபாரதி: சரியாக சொன்னீர்கள் குப்பன். பரந்த மனப்பான்மை மட்டுமல்ல, குழுவாக இயங்குதல் என்ற கான்செப்டே இப்போ துதான் மக்களுக்கு தெரியும். முந்தைய அரசு அலுவலக தலைமு றையில் ஒன்று அவர் சொல்ல பிறர் அடிபணிந்து கேட்பார்கள், அல்லது அவர்கள் பிறரிடம் அடிபணிந்து கிடப்பார்கள். சம அளவில் நட்புடன் சக அலுவலரை அவர்களுக்கு சமமாக மதிக்கவே தெரியாது. ஒரு வித தான்தோன்றித்தனத்துடன் செயல்படுவார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

சொல்வது தவறே என்றாலும் அதையும் புகழ்ந்து சொம்பு தூக்கி னால்தான் ஒருவன் முன்னேற முடியும் என்ற நிலை இருந்தது.

அதை இந்த பிற்போக்குவாதிகள் அதுதான் வாழ்க்கை முறை என்று வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இப்போது இந்த மாற்றம் நல்லதுக்கே என்றாலும் இவர்களால் ஏற்றுக்கொள்ள முடியாததற்கு காரணம், ''இரண்டு காசு சம்பாதிப்பவனை விட நாலு காசு சம்பாதிப்பவன் புத்திசாலி மற்றும் பெரிய ஆள்'' என்ற அடிமை மனப்பான்மையே. என்றைக்காவது மேலதிகாரி சொல்வதில் தவறு இருந்தால் சுட்டிக் காட்டி இருக்கிறார்களா? ஆனால் ஐ.டி. யில் மட்டுமே குழு மனப்பான்மையுடன் வேலை செய்து வரும் கிரெடிட்டை மொத்த குழுவும் அனுபவிக்கும் நிலை உள்ளது. (இதிலும் அடுத்தவன் வேலையின் கிரெடிட்டை திருடுபவர்கள் இருக்கிறார்கள் என்றாலும் மற்ற துறைகளை கம்பேர் செய்யும் போது மிக மிக குறைவு). இவர் பேசுவது அடிமைத்தனத்தைப் பற்றி! கொடுமைடா சாமி..!

லவ்லி: வினவு, ஓரளவுக்கு நான் உங்கள் கருத்தை ஏற்கிறேன்.

பிரேம்குமார்: ''வருடத்திற்கு சில இலட்சம் சம்பளம், வருடத்திற்கு ஒரு முறை வெளிநாட்டு சுற்றுலா, ஒரு இந்திய சுற்றுலா, இருமாதத்திற்கு ஒரு தடவை பிக்னிக், மாதந்தோறும் கேளிக்கைப் பூங்காக்கள், வாரந்தோறும் கேளிக்கை நிகழ்ச்சிகள், மாதக் கூப்பன் கொடுத்து பேரங்காடிகளில் பொருள் வாங்குவது, இது போக தாகமெடுத்தால் கோக், பசியெடுத்தால் பிஸா, போரடித்தால் சத்யம் தியேட்டர், இப்படித்தானே நண்பா நீ வாழ்ந்து கொண்டிருக்கிறாய்?'' என்னங்க இதெல்லாம்? கொஞ்சம் பிட்டு போட சொன்னா எக்கச்சக்கமா பிட் போட்டுட்டீங்க. சிரிப்பு தாங்கல.

நடுவில ஏதோ நல்லது சொல்ல வரீங்கன்னு நினைச்சா, கடைசியில எண்ணத்துல மண். இவ்வளவு நாளாக இருந்த தொழிற்சங்கள் என்ன செய்தன? ஏன் விவசாயத் தற்கொலைகளை இந்த சங்கங்களால் தடுக்க முடியவில்லை? வெறும் கோஷம் போடுவதாலும் கொடி பிடிப்பதாலும் எதுவும் நடந்துவிடாது.

வினவு: நண்பர்களே, தொழிற்சங்கம் என்றாலே, கொடி, உண்டியல், கோஷம் என்று சலித்துக்கொண்டு ஓய்ந்து பத்திரிகைக்கு வாசகர் கடிதம் எழுதும் பழம் பெரிசுகள் கட்சியில் நின்று கொண்டு பேசுவதால் நீங்கள் எதை சாதிக்கப் போகிறீர்கள்? எட்டுமணிநேரப்



படிப்பகம்

www.padippakam.com

பணி, இ.எஸ்.ஐ, பி.எஃப், சி.எல், ஈ.எல் விடுமுறைகள், கான்டீன் வசதி என இன்று நீங்கள் அனுபவிக்கும் பல உரிமைகளை உலக மெங்கும் உள்ள தொழிலாளர்கள் போராடி, உயிரிழந்து தியாகம் செய்து பெற்றனர். ஆர்வமும், நேர்மையும் இருப்பின் இணையத்தில் மே தின வரலாறு பற்றி தேடி எடுத்து படித்துப் பார்க்கவும். இந்த வரலாறே அமெரிக்காவில் இருந்துதான் தொடங்குகிறது.

ஐ.டி. துறையில், 'தான் மட்டும் வாழமுடியும்' என்ற தனிநபர் வாதம்தான் முதலாளிகளால் மூடநம்பிக்கை போல கற்றுத்தரப்படு கிறது. கருணையின்றி, எந்தக் காரணமுமின்றி பல ஊழியர்கள் பல நிறுவனங்களிலிருந்து தூக்கி எறியப் பட்டிருக்கின்றனர். மற்றவர்க ளுக்கு நடந்தது நமக்கு மட்டும் நடக்காது என்று நம்புவது, 'நமக்கு மட்டும் சாவே வராது' என்று கருதுவது போலத்தான். இதுவரை மற்ற தொழிற்சங்கங்கள் எதையும் சாதிக்கவில்லை என்று கருதும் பட்சத்தில் நீங்கள், சாதிக்கக் கூடிய சங்கங்களை கட்டுவதை யார் தடுக்கப் போகிறார்கள்? தனிநபராக இருப்பதை விட சங்கமாக ஒன்றாக இணைந்தால் அது எதைப் பெற்றுத் தருமோ, நிச்சயம் சுய மரியாதை என்றால் என்ன என்பதைக் கற்றுத்தரும்.

இன்றைக்கும் நாம் சமூகம் எனப்படும் மக்கள் கூட்டமாக இருப் பதினால்தான் வாழ்கிறோம். நான் தனிநபராகத்தான் கிழிப்பேன் என்றால் நாம் செல்லவேண்டிய இடம் யாரும் அண்டாத காடு அல்லது பாலைவனம். வாழ்க்கையில் இருக்கும் இந்த உண்மை நமது அலுவலகப் பணிக்கும் பொருந்தும். சி.பி.எம், சி,பி.ஐ போன்ற போலிக் கம்யூனிஸ்டுகள் தொழிற்சங்கங்களை அரசிய லற்ற முறையில் போனசுக்காக மட்டும் குரல் கொடுக்கும் கூட் டமாக மாற்றியிருக்கிறார்கள் என்பது உண்மைதான். அதே சமயம் நேர்மறையில் வீச்சாக செயல்படும் தொழிற்சங்கங்கள் உலகெங்கும் இருக்கத்தான் செய்கின்றன.

உங்கள் அளவுக்கு படிப்பும், ஊதியமும் , வாழ்க்கைத் தரமும் இல்லாத சாதாரணத் தொழிலாளர்கள் பணியாற்றும் தொழிற்சா லைக்கு சென்று, தொழிற் சங்கம் எப்படி செயல் படுகிறது என்று விசாரித்தறியுங்கள். அந்தச் சாதாரணர்கள் எளிய மொழியில் உங்க ளுக்கு புரிய வைப்பார்கள். ஆனால் அதை செய்வதற்கும் ஒரு பணிவு வேண்டுமே?

அப்படி ஒரு எதிர்பார்ப்புடன்,

வினவு



படிப்பகம்

www.padippakam.com

**கலகம்:** ஐ.டி மற்றும் பி.பி.ஓ துறையிலிருக்கும் பலருக்கும் தாங்கள் மக்களின் ஒரு பகுதி தான் என்பதில் நம்பிக்கை இல்லை. தான் ஒரு மக்களுக்கு மேல் ஒரு பிரிவாகவே கருதுகின்றனர். தங்களைத் தங்களே ஏமாற்றி கொள்ளும் வித்தையை நன்றாகக் கற்றிருக்கின் றார்கள். தனக்கு எல்லாமே கிடைப்பதால் அவர்கள் போராட வேண்டிய அவசியமில்லை என்றே கருதுகின்றனர். தற்போது ஒவ் வொன்றாக பறி போன பின்னரும் போராடவில்லையெனில் அத்து றைகளிலிருந்து வெளியேற்றப்படுவோர் நேரே சுடுகாட்டுக்கு செல்வர் தற்கொலைகள் மூலமாக.

**ஆட்டோ சங்கர்:** தொழிற்சங்கம் என்பதை விட ஊழியர் குழுக்கள் தேவை. பல ஐ.டி நிறுவன நிர்வாகங்கள் தன்னிச்சையாக நடவடிக் கைகளை எடுக்கின்றன. உதாரணமாக வேரியபிள் சம்பள பகுதியில் கண்ட கண்ட காரணங்கள் சொல்லி குறைக்கிறார்கள். ஞாயமே இல்லாத அப்ரெய்சல்கள், இவைகளைப் போக்க ஊழியர்கள் ஒன்று பட்டுத்தான் ஆக வேண்டும். தொழிற்சங்கம் எல்லாம் வந்தா பந்த், போராட்டம் இதற்கெல்லாம் இந்த வர்க்கம் தயாராக இல்லை. அது மட்டுமல்ல இவர்கள் எங்கிருந்தாலும் பிழைக்கும் சாமர்த்தியசா லிகள் (சந்தர்ப்பவாதிகள் என்று படிக்கவும்)!

**அக்கிரகாரத்தில் கழுதை:** தாங்கள் அஞ்சிலக்கச் சம்பளம் வாங்கு வதால், உலகமே சுபிச்சமாக இருக்கிறது என்ற கற்பனையில் மிதக்கிற பின்னூட்டப் புண்ணாக்குகள், தொழிற்சங்கங்களில் வரலாறு தெரிந்து கொண்டு பேசட்டும். கோட் அடித்துக் கொடுத்து கம்பீட்டர் முன்னால் உக்காந்து வேலை பார்ப்பதால், வருகிற எகத்தாளம் புரிகிறது. கொஞ்சம் பொறுமை.

ஆமா, தெரியாமத்தான் கேக்கிறேன், இந்த புண்ணாக்குகள் கோட் அடிச்சு கூலி வாங்குது. அதே கம்பேனில பெருக்கரவன் தொடைக்கிறவன், டெலிபோன் ஆப்பரேட்டர், அக்கவுண்ட் அசிஸ் டண்ட்டுன்னு கோட் அடிக்காதவன் இருக்க மாட்டாங்களா? அவங்க எக்கேடு கெட்டுப் போனா எனக்கென்னன்னு இருப் பாங்களா?

இவனுங்க கம்யூட்டர் படிப்பு படிக்கிறதுக்கு இவங்க அப்ப னாத்தா தொழிற்சாலைல வேலை செஞ்சு, குறைந்த பட்ச ஊதி யத்தோட வீட்டுக்கு வந்து சமைச்சுப் போட்டாங்க இல்லியா, அதுக்குக் காரணமே தொழிற்சங்கங்கள்தான். நாளொண்ணுக்கு 18



படிப்பகம்

www.padippakam.com

மணிநேர வேலை, எப்ப வேணா வேலை உட்டுத் தூக்றது, மத்த எந்த சலுகைகளும் கிடையாதுன்னு இருந்த அராஜகமான நிலையெல்லாம் மாத்தி, குறைந்த பட்ச ஊதியம், ஊதிய உயர்வு, பேறு கால விடுமுறை, போனஸ் எல்லாத்தையும் மொதலாளிகள் சும்மாவே தூக்கிக் குடுத்துட்டாங்களா? அதெல்லாம் இல்லாட்டி, நாமெல்லாம் இந்நேரம் நக்கிகிட்டுதான் இருக்கணும். ஸ்ட்ரைக்கு பண்றத மட்டும் டீவி நூஸ்ல உர்லக்கிழங்கு சிப்ஸ் சாப்ட்டுட்டே பாத்துட்டு, தொழிற்சங்கம்னாலே வேலை நிறுத்தம் தான்னு புண்ணூட்டம் போடற புண்ணாக்குகள், 'அயோ என் வேலை போச்சே, கேக்க ஆருமில்லியா'ன்னு பொலம்பற காலம் வரத்தாம்போகுது மகா... ஜஸ்ட் வெய்ட் மாடி.

அக்கிரகாரத்தில் கழுதை: வினவு, பின்னூட்டம் பார்த்தேன். அனுபவத்தில் சொல்கிறேன். இதல்லாம் இவனுங்களுக்கு உறைக்காது. ஏதோ வயித்தெரிச்சலில் பேசுவது போலத்தால் பார்ப்பார்கள். இணையத்தில் உலவுவதில், பெரும்பான்மையானவர்கள் ஐ.டி துறையில் இருப்பவர்கள் என்பதால், உடனுக்குடன் பின்னூட்டம், குதர்க்கவாதம் எல்லாம் வெளியாகி அயர்ச்சி ஏற்படுத்துமே ஒழிய, எந்த விதமான மாற்றத்தையும் ஏற்படுத்தாது. ஒரு பிரபல ஐ.டி நிறுவனத்தில், ஆயிரம் பேரை நீக்கி இருக்கிறார்கள். ஆனால், அது பற்றி, இவர்களில் ஒருத்தர் கூட இணையத்தில் வாயைத் திறக்கவில்லை. சுயநலம் தானே காரணம்? ஒருத்தனுக்குக் கூடவா இந்த நிலைமையின் தீவிரம் உறைக்காது? பிரயோசனமில்லை. அதனால், ஐட்டி ச்சே. ஐட்டி துறையை விட்டு ஒதுக்கி வைத்து விட்டு, உருப்படியாக வேறு ஏதேனும் பேசுங்கள். கேட்கிறோம்.

அதிஷா: வினவு, நச் னு இருந்தது உங்கள் கட்டுரை நண்பரே, இவங்கள பாவம் பாத்து நீங்க சங்கம் வைக்க சொன்னா உங்களத்தான் வையுவாய்ங்க.

அமரபாரதி: அய்யா, நீங்கள் சொல்வது எல்லாமே உண்மைதான். தொழிற்சங்கங்கள் குறைந்த பட்ச ஊதியத்தை வாங்கிக்கொடுக்கும். ஆனால் அதைவிட பன்மடங்கு அதிக சம்பளம் பெறும் ஐ.டி ஊழியர்களுக்கு என்ன கொடுக்க முடியும்? மேலும், சம்பளம் கொடுக்கும் கம்பனி எப்படி நாசமாகப் போனாலும் தனக்கு சம்பளம் வர வேண்டும் என்ற தொழிற்சங்க மனப்பான்மை அடிப்படையிலேயே தவறு. நேர்மைக்கு இங்கு என்ன பிரச்சினை? ''மற்றவர்களுக்கு நடந்தது நமக்கு மட்டும் நடக்காது என்று நம்புவது, 'நமக்கு மட்டும்



படிப்பகம்

www.padippakam.com

சாவே வராது என்று கருதுவது போலத்தான்'' என்கிறீர்கள். அதற்குத்தான் சேமிப்பு என்ற ஒன்று இருக்கிறது. அது இல்லையென்றால் தொழிற்சங்கம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒன்றும் செய்ய முடியாது. சங்கம் என்ற ஒன்று இல்லாமலே அவர்கள் சுய மரியாதையுடன் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

''அந்தச் சாதரணர்கள் எளிய மொழியில் உங்களுக்கு புரிய வைப்பார்கள்'' என்கிறீர்கள். அவர்கள் சொல்லாமலே ஐ.டி.க்காரர்களுக்கு தெரியும். இதை கேட்பதற்கு எதற்கு பணிவு? இது என்ன வேத கால குரு குலமா? உங்களுக்கு சிலது தெரியும், மற்றவர்களுக்கு சிலது தெரியும். உங்களுக்கு தெரிந்ததை நீங்கள் மற்றவர்களுக்கு சொல்லிக் கொடுத்து உங்களுக்கு தெரியாததை மற்றவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளுங்கள். பணிவு, மரியாதை கோபம் ரோஷம் போன்ற சொற்களுக்கெல்லாம் அர்த்தமே தவறாக சொல்லிக் கொடுக்கப்பட்டு இருக்கிறதா என்று தெரியவில்லை.

''அவர்கள் போராடவேண்டிய அவசியமில்லை என்றே கருதுகின்றனர்'' என்கிறீர்கள். இல்லை. எங்கு எதற்காக போராட வேண்டும் என்று தெரிந்தவர்கள் அவர்கள். எந்த போராட்டத்திலும் வின்-லூஸ் (win - loose) சிச்சுவேஷன் இருந்தால் அது போராட்டமாக இருக்காது. போராகத்தான் இருக்கும். ஐ.டி. துறையில் எந்த வாக்கு வாதமும் வின்-வின் (win - win) சிச்சுவேஷன்தான். தெரிந்து கொள்ளுங்கள்.

சுந்தர ராசன்: முதலில் மற்ற துறைகளைப் பாருங்க. அப்புறம் கணிப்பொறித் துறைக்கு வரலாம். இன்று படுத்துள்ள பொருளாதாரம் நாளை மீண்டால், மறுபடி சரியாகி விடும். சிங்கூர் விவசாயிகளின் வயிற்றில் அடித்து நிலத்தைப் பிடுங்கி, டாடா போன்ற பண முதலைகளிடம் பணம் வாங்கிக் கொண்டு சோரம் போன செங்கொடியாளர்களே. எதைப் பற்றியும் பேச உங்களுக்கு அருகதை இல்லை. தமிழ் நாட்டில் இருந்து அரிசி கடத்தப்பட்டு கேரளா செல்கிறது. ஏழை தமிழ் குடியானவன், அரிசி உண்ண வக்கு இல்லை. அவை எல்லாம் கேரளாவில் உள்ள செங்கொடியாளருக்கு உணவாகப் போகிறது. ரேஷன் அரிசி தமிழனுக்கு இல்லை.கேரள செங்கொடியாளர் மூலம். அதை நிறுத்துக செங்கொடியாளரே.

கணினித் துறையைப் பற்றிப்பேச உனக்குத் தகுதி இல்லை. மானம் காக்க துணி இல்லாமல் உடல் அழுத போது, தலையில்



படிப்பகம்

www.padippakam.com

மணம் வீச, பூ இல்லையே என்று கூந்தல் அழுததாம். ஆடு நனையுது என்று ஓநாய் அழுகிறது. 4 வருடம் ஆட்சியில் இருந்து குளிர் காய்ந்து விட்டு இப்போது கொள்கை என்று பதறும் வீணர்களே. அண்டை நாடான பாகிஸ்தான் பெட்ரோல் விலையை குறைத்து விற்கிறது. இந்தியாவின் மொத்த பொருளாதாரம் கேவலமான நிலையில் உள்ளது. முதலில் அதைக் கவனியுங்கள் செங்கொடியாளர்களே.

ஒரு வாசகன்: தொழிற்சங்கம் அமைச்சுட்டு அடுத்து? குர்காவ்ன்-ல மாதிரி கூட்டமாப் போயி கம்பெனி எம்.டிய போட்டுத் தள்றதா? வினவு மற்றும் பிற நண்பர்களே, தங்களின் அளவு கடந்த கரிசனமும், ''ச்சே, நம் பேச்சை கேட்க மாட்டேன் என்கிறார்களே'' என்ற ஆதங்கமும், ''ச்சே, உங்களப் பாத்தாலே வெக்ஸ் ஆவுதுறா'' என்கிற விவேக் பாணி எரிச்சலும் புரிகிறது. கட்டுரையின் பல இடங்களில் லாஜிக் இன்றி பல்வேறு கருத்துக்களை அள்ளித் தெளித்திருக்கிறீர்கள். சில நண்பர்கள் லாஜிக் இன்றி கூவுவது நகைப்புக்கு உரியதாக உள்ளது. ஐ.டி பணியாளர்கள் தேவைப்படின் தங்களை அணுகுவார்கள். அதுவரை பொறுமை காக்கவும்.

ஐ.டி க்காரர்கள் நல்ல நாளில் நிறைய சம்பாதித்தார்கள். இன்று நிலைமை மோசம். சரியாக சேமிப்பை வைத்திருந்தால் இக்கால கட்டத்தை தாண்டி மீள்வார்கள். 1999லிருந்து இது மூன்றாவது இறக்கம். 2000 டாட்காம் பபிள், 2001 இரட்டைக் கோபுர தாக்குதல், இப்பொழுது ரிசெஷன். ஒவ்வொரு சரிவிலிருந்தும் மீண்டு வந்தார்கள். அய்.டியில் தாக்குப் படிக்க முடியாதவர்கள் வேறு துறைக்கு மாறுகிறார்கள். இதுவும் கடந்து போகும். நாளைய எதிர்காலம் நல்லபடியாக அமையும். அதுவரை, தங்களின் உதவும் எண்ணத்திற்கு நன்றி. ஸீயு!

சிறீதர் நாராயணன்: ''உனக்கு கொடுக்கப்படும் குறைவான சம்பளத்தின் மூலம் உன்னை உருவாக்கிய இந்த நாடும் சுரண்டப்படுகிறது'' என்கிறீர்களே, அவுட் ஸோர்ஸிங் என்றால் என்னவென்றே தெரியாமல் வெறும் 'அமெரிக்கா அமெரிக்கா' என்று கூப்பாடு போட்டிருக்கிறீர்கள். அமெரிக்காவில் வேலை பார்க்கும் எந்நாட்டவரானாலும் ஒரே சம்பளம்தான். இந்தியாவிலிருந்து செய்யும் வேலைக்கு அமெரிக்க சம்பளம் கொடுக்க சொல்கிறீர்களா?

நீங்கள் சொல்லும் குறைந்தபட்ச சம்பளம் இந்தியாவின் தனிநபர் வருமானத்தை விட வெகு அதிகமாக இருப்பதை உணர்ந்திருக்



படிப்பகம்

www.padippakam.com

கிறீர்களா? உங்கள் கருத்தின்படியே இந்த மிச்சப்படுத்தலால் யார் பயன்பெறுகிறார்கள்? முதலாளிகள் மட்டுமா? இல்லை. அந்த நிறுவனங்களின் சேவைத் தரமும், வீச்சும் அதிகரித்து அதனால் பயனீட்டாளர்கள் அதிகமாகிறார்கள். நீங்கள் இந்தக் கட்டுரையை எழுத பயன்படுத்திய பெரும்பாலான கருவிகள் கடந்த 10 ஆண்டுகளில் வெகுவாக விலை குறைந்திருக்கின்றன. இது எப்படி சாத்தியமாயிற்று? இந்த விலை குறைவால் உங்களைப் போன்ற எண்ணற்றவர்கள் பயன்பெறத்தான் செய்கிறார்கள்.

வளர்ச்சி விகிதம், வாழ்க்கைக்கு தேவையான பொருளாதாரம் இதெல்லாம் மாறும்பொழுது மனித வளத்தின் விலையும் மாறத்தான் செய்கிறது.

குறைந்தபட்ச ஊதியம், ஒரு வாரத்திற்குண்டான அதிகபட்ச பணிநேரம், ஓய்வூதிய நிதி, தன் திறமைகளை வளர்த்துக் கொள்ள வசதி செய்தல் என்று பல விசயங்களையும் நன்றாகவே அமல்படுத்தியிருக்கிறார்கள். எனக்குத் தெரிந்து எந்த யூனியனும் சாதிக்காத விசயம் இது. இம்மாதிரி கட்டுரை எழுதும் முன்னர் கொஞ்சமாவது நடப்பு விசயங்களை தெரிந்து கொண்டு எழுதுதல் கட்டுரையின் நம்பகத்தன்மையை அதிகரிக்கும்.

அமெரிக்காவிலும் யாரும் வேலையிழக்கவில்லை. புதிய வேலை வாய்ப்புகள் உருவாகிக் கொண்டுதானிருக்கின்றன. உதாரணத்திற்கு மெக்ஸிகன்ஸ் என்று சொல்லப்படும் ஹிஸ்பானியர்கள் பெரும் வரவால் புதிதாக பல வேலை வாய்ப்புகள் உருவாகின. இன்று அமெரிக்காவில் ஆப்பிரிக்கர் போல ஹிஸ்பானியர்கள் மற்றும் ஆசியர்கள் இரண்டறக் கலந்துவிட்டார்கள்.

**மருத்துவர் ருத்ரன்:** *நீங்கள் என்ன சொன்னாலும் 'அவர்கள்' 'அவர்களுடைய' அர்த்தத்தை மட்டுமே பார்ப்பார்கள். கொஞ்சம் பொறுப்போம். ஒரு ஆறு மாதம். அதற்கு பிறகு கோட்ஸிலாக்களும் இன்னபிற ஜந்துக்களும் சொல்வதைக் கேட்க நான் ஆவலாக இருக்கிறேன்.*

**லக்கிலுக்:** *மருத்துவர் ருத்ரன், சும்மா 'நச்'சுன்னு சொல்லியிருக்கீங்க சாரே!*

**பாஷா கவிதைகள்:** *உங்கள் கட்டுரையில் சொல்லப்படும் பலவிஷயங்கள் நிஜம்தான். ஆனால் இன்னொரு நிஜமும் நான் சொல்ல*



படிப்பகம்

www.padippakam.com

ஆசைப்படுகிறேன். மற்ற நிறுவனங்களை போல் இல்லாது இங்கு இருப்பது ஒரு பரஸ்பர இலாப நோக்கம்தான். நிறுவனங்களுக்கு தேவையில்லையெனில் நீ வேண்டாம் போ என்று சொல்வதும், நிறுவனத்தில் வேலை சரியில்லையெனில் வேறு நிறுவனம் மாறுவதும். மற்றபடி செங்கொடி ஊன்றியிருக்கும் கேரள நாட்டிலும் வேலை நிறுத்தமென்று கம்யூட்டர் கம்பெனிகளின் பணி நிற்காது. இத்தனைக்கும் பெரும்பாலான கம்பெனிகள் அவர்களின் தொழிற் சங்கத்தில் உறுப்பினர்கள்.

செங்கொடி: வணக்கம் மெத்தப் படித்த மேதாவிகளே, இந்தியாவில் பார்க்கும் வேலைக்கு அமெரிக்க சம்பளம் கொடுக்க முடியுமா? சரிதான். அமெரிக்கன் பார்க்கவேண்டிய வேலையை இங்கிருந்து நீங்கள் பார்க்கிறீர்கள். உங்களால் வேலையிழந்த அமெரிக்கனினுக்கு உங்கள் பதில் என்ன? ''அமெரிக்காவிலும் யாரும் வேலையிழக்கவில்லை. புதிய வேலை வாய்ப்புகள் உருவாகிக் கொண்டுதானிருக்கின்றன.'' இந்த ஒரு வரியே போதும் யதார்த்த உலகிலில்லாமல் நீங்கள் தனி உலகில் இருக்கிறீர்கள் என்பதற்கு. கொஞ்சம் கண்ணை கசக்கிவிட்டு பாருங்கள் நண்பர்களே!

அமெரிக்காவில் இருந்து உங்களுக்கு வந்த வேலை, நாளை உங்களிடமிருந்து பங்களாதேஷுக்கோ, கென்யாவுக்கோ போகும் போதும், 'வின் - வின்' பாலிசி பேசுவீர்களா நண்பர்களே? நுனி நாக்கு ஆங்கிலமும், கணினிப்புலமையும் இருந்ததால்தான் லட்சத்தில் சம்பளம் என்று திறமை பேசும் நண்பர்களே, உங்களைப்போல் திறமையுள்ளவர்கள் தேனீர்க்குவளை கழுவுவது தெரியுமா உங்களுக்கு? உங்கள் வேலைச்சூழல் தவிர வேறு எதைப் பற்றியும் கவலைப்படாத நண்பர்களே, காட்டில் விலங்குகளும் தான் அதன் சூழல் தவிர வேறெதையும் சிந்திப்பதில்லை.

நீங்கள் அனுபவிக்கும் அத்தனை உரிமைகளுக்குப் பின்னும் போராட்டங்களும், தியாகங்களும் உறைந்து கிடக்கின்றன. எவனோ செய்த போராட்டத்தின் பலனை அனுபவிப்பதற்கு மட்டும் தயாரென்றால், உங்களை உயர்திணை என அழைப்பதில் பொருட்பிழை உண்டாகும். சம்மதமா? கேரளா அரிசி செங்கொடி இதையெல்லாம் முடித்துவிட்டு கணினிப் பக்கம் வரவேண்டும் என ஆலோசனை சொல்பவர்களே, அதுவரை நீங்கள் என்ன செய்வதாய் உத்தேசம்? எந்த விரயங்களும் இல்லாமல் வாழ்க்கையை சுவைத்துக் கொண்டிருப்பீர்கள்? சுவையான வாழ்வை மட்டுமல்ல, சுவைப்பதற்கு நாவையும் இழந்து கொண்டிருக்கிறீர்கள்.



படிப்பகம்

www.padippakam.com

அண்டா நீரில் நீந்தும் தவளைகளே, வெதுவெதுப்பை அனுப விப்பதோடு நின்றுவிட்டால் வெந்துபோவீர்கள். தீ மூட்டப்பட்டி ருப்பதை உணர்ந்தால் மட்டுமே பிழைப்பீர்கள். யார் நீங்கள்? வேகும் தவளைகளா? இல்லை தாவிக்குதிக்கப் போராடும் தவளைகளா?

கிராமத்தான்: ஐ.டி. அடிமைகளே! கொஞ்சம் யோசிச்சி எழு துங்கடா. ஏண்டா வடபழனி டி.சி.எஸ் மூடியாச்சி. சத்யம், விப்ரோ-ல தினம் தினம் வேலையை விட்டு தூக்கிகிட்டு இருக்கான். எச்.ஸி.எல்-ல 2000 பேரை வேலையைவிட்டு தூக்கிட்டான். இன்னும் 31ம் தேதிக்குள் 4 அல்லது 5 ஆயிரம் பேரை தூக்கப் போறான் (நம்பலைனா ஒ.எம்.ஆர்-ல ''உண்மை செய்தி'' அப் படினு ஒரு ஓசி பதிரிக்கை வரும் அதை படிச்சிபாரு ) இந்த நெல மையிலும் ஒங்களோட திமிரு கொறயல. அப்புறம் தொழிற்சங்கம் பத்தியல்லாம் பேசியிருக்கியலடா, ஜெ.பி.ஆர், எஸ்.ஆர்.எம் காலேஜ், நெல்காஸ்ட், இன்னும் பொன்னேரி, ஒசூர் பல இடங்கள்ல போய் பாருங்கடா தொழிற்சங்கம், தொழிற்சங்கத்தோட உரிமை இதல்லாம் புரியும்.

ஒங்களால 3000 சம்பளம் வாங்குகிறவர்கள் எல்லாம் வீட்டு வாடகை குடுக்க முடியாம திண்டாடிகிட்டு இருக்காங்க. ஒரு 1/4 கிர வுண்ட் எடம் வாங்க முடியல. இதுக்கல்லாம் ஏன்னடா சொல்றிங்க? அதுக்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லைனு சொல்லாதீங்க. உங்க வசதிக்காக அல்லது உங்க முதலாளிகளின் வசதிக்காக ரப்பர் சாலை, மேம்பாலம், விமான நிலையம் விரிவாக்கம், இன்னும் ஏராள உலக வங்கி கடன் திட்டம் எல்லாம் உழைக்கும் மக்கள் தலையில் விடியும் கடன். உங்களின் தண்ணீர் வசதிக்காக (குடிக்க, கழுவ) சென்னையை சுற்றியுள்ல ஏரிகளின் அதிகபட்ச தண்ணீர் சப்ளை- நகர மக்கள் தண்ணீருக்கு அவதிப்படுகையில். உங்களால் இந்த நாட்டு மக்களுக்கு என்ன பயன்?

கேளிக்கை விடுதி, மதுபான கடை நடத்துற முதலாளிகளுக் குதான் பயன் (இன்னும் அசிங்க, அசிங்கமா வந்துடும்) இன்னைக்கு இருக்க கூடிய நிலைமையில் பெரும்பான்மை மக்களுக்கு உள்ள பிரச் சனைக்கு மத்தியில் உங்களையும் முதுகெலும்பு உள்ள மனுசனா மதிச்சி எழுதி இருக்காரு. அதுக்கு வரிஞ்சி கட்டிக்கிட்டு வந்துட் டங்க. இன்னும் நெறய திட்டணும் போல இருக்கு.. அப்பறம் வரேன்.



படிப்பகம்

www.padippakam.com

மு. மயூரன்: வினவு, இதே தொழில் துறையில் பணியாற்றுபவன் என்ற ரீதியில் சில கருத்துக்களை முன்வைக்கின்றேன். நீங்கள் இக் கட்டுரையின் இலக்கு வாசகர்களாகக் கொண்டிருப்பவர்கள் பின் முதலாளியத்தின் மிக நுணுக்கமான பரப்புரைகள், கல்வி போன்றவற்றின் தாலாட்டில் வளர்ந்தவர்கள்.. பழைமை - நவீனம் என்ற எதிர் வினூடாக எல்லாவற்றையும் பார்ப்பவர்கள். எது பழசு எது நவீனம் என்பதனை முதலாளியப் பரப்புரைகளிடமிருந்து இவர்கள் கற்றுத் தெளிந்தவர்கள். கம்யூனிசம், தொழிற்சங்கம், போராட்டம் எல்லாமே ஆதிகாலத்தில் தோன்றி தோற்றுப்போன தவறான போக்குகள் என்ற எண்ணம் மிக வலுவாக நம்பப்படுகின்ற தலைமுறையைச் சேர்ந்தவர்கள். இவர்களின் கண் முன்னால் சிவப்புச் சட்டை போட்டுக் கொண்டு காலத்தோடும் ஒத்துவராமல், மக்களோடும் சார்ந்தில்லாமல் முதுகெலும்பு இல்லாதவர்களாக, செயல் திறன் அற்றவர்களாக தேங்கிப் போன அரசியல் நடத்திக் கொண்டிருக்கும் இடதுசாரிகளே தென்படுகின்றார்கள்.

இத்தகைய இடதுசாரிகளே இங்கே இலங்கையில் (இந்தியாவிலுமா?) பெரும்பான்மை. கம்யூனிசம் தோற்றுவிட்ட பழம் பண்டம் என்பதை ஆரம்பக்கல்வி முதல் முதலாளியம் வகுத்துத் தந்த உயர்கல்வி வரைக்கும் கற்றுவிட்டு பின்னர் கொஞ்சம் தேடல் இருந்து தேடத் தொடங்கினால், போஸ்ட் மாடர்னிசம் ஆவி படித்து கம்யூனிசம் செத்துப்போன கதையை உருவேற்றி விட்டுவிடும் நிலையில், மார்க்சியம் சார்ந்த எந்தவொரு சொல்லும் இவர்களுக்கு எரிச்சலூட்டுவதாகத்தான் மாறிப் போகும்.

நவீனம் என்பதாக இவர்கள் நம்பிக் கொண்டிருப்பது கார்ப்பரேட் கலாச்சாரத்தை. இவர்களது கனவுகளும், இலக்குகளும் அன்றாடம் வயிற்றைக் கழுவுவதல்ல; பிள்ளைகளைப் படிப்பிக்க காசு சேர்ப்பதல்ல. அதை முதலில் போராட அழைக்கும் இடதுசாரிகள் புரிந்துகொள்ள வேண்டும். இவர்களுக்கு அடிப்படை வசதிகளுக்கு மேலதிகமாகவே எல்லாம் செய்து கொடுக்கப் பட்டிருக்கின்றது. தன்னையும் இன்னொரு முதலாளியாக, நிறுவனப் படிநிலையில் மேல் மட்டங்களில் இருப்பவராக மாற்றிக் கொள்ள வேண்டுமென்பதே இவர்களது வெறி கொண்ட இலக்கு.

இங்கே முதலாளியத்தை வீழ்த்தும் நோக்கமானது தம்மையும் வீழ்த்தும் நோக்கமாகவே புரிந்துகொள்ளப்படுகின்றது. கார்ப்பரேட் கலாச்சாரத்தின் மீதான விமர்சனங்கள் எல்லாம் தம்மை விமரி



படிப்பகம்

www.padippakam.com

சிக்கும், தம்மைக் கீழ்மைப்படுத்தும் வறட்டு விமரிசனங்களாகவே இவர்களால் கொள்ளப்படுகின்றது. பொருளாதாரம் பற்றிய, வளர்ச்சி பற்றிய, நாடுகளுக்கிடையிலான பொருளாதாரத் தொடர் புகள் பற்றிய இவர்களது அறிவு யாவும் முதலாளித்துவத்தால் வழங்கப் பட்டது. விஞ்ஞான ரீதியான இவர்களது புரிதல் அனைத்துமே முதலாளியத்தின் அடிப்படையில் அமைந்திருக்க, வெறும் விமரிசனங்களாக மட்டுமே மார்க்சிய அடிப்படையிலான கருத்துக்கள் இவர்கள் முன் வைக்கப்படுகின்றது. மார்க்சிய பொருளாதார அணுகுமுறை என்பது இவர்கள் நம்பிக் கொண்டி ருக்கும் பொருளியல் உலகையும் அதன் கோட்பாடுகளையும் விட மிக மிக நவீனமானது என்பதை இவர்களுக்கு அறிமுகப்படுத்த ஆளில்லை.

கார்ப்பரேட் கல்ச்சர் என்று காட்டப்படும் பகட்டான, பார் வையில் அழகான உலகம் தனக்கடியில் எவ்வளவு கேவலமான சாக் கடையை ஓட விட்டு அதன் மீதே, அதை நம்பியே, அதைக் குடித்தே உயிர் வாழ்கின்றது என்பதை இவர்களுக்கு முறைப்படி கற்றுக் கொடுக்க ஒரு மார்க்கமில்லை. கணினி விலை கூடியது. கணினித் தொழில்நுட்பம் விலை கூடியது. மென்பொருட்கள் விலை கூடியன. அதனை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளும் தொழிலாளர்க ளுக்கான அலுவலக வசதிகளும் அதனடிப்படையில் மேம்பட்ட வையாகவே இருக்கும். மிக மிக நவீனமான சுரண்டல் உத்தி இவர்கள் மீது பயன்படுத்தப் படுகின்றது. தமக்கொரு நெருக்கடி வரும் வேளை ஒன்றைத்தவிர, இந்த ஆடம்பரத்துக்கு ஆப்பு விழும் நாளொன்றைத் தவிர வேறெப்போதும் இதனை இவர்கள் புரிந்து கொள்வார்கள் என்று நீங்கள் எதிர்பார்க்க முடியாது.

போராடுவதற்கான உந்துதல் வாழ்க்கை, சூழல் விரட்டி அடிப் பதிலிருந்தே உருவாக முடியும். போராடுவதைத் தவிர வேறு வழி யில்லை என்ற நிலையே போராட்டங்களை உருவாக்கும். அந்த நிலையை கணினித்தொழில் உள்ளிட்ட ஆடம்பரத் தொழில் துறை களுக்கு இந்த நெருக்கடி கொண்டுவந்து சேர்க்கும் என்று நான் பெரிதாக நம்பவில்லை. முதலாளியம், ஏகாதிபத்தியம் இந்த நெருக் கடியைத் தனக்கே உரிய லாவகத்தோடு எதிர்கொண்டு வெல்லும். இந்த தொழில்துறை வெறுமனே கணினி நுட்பர்களை மட்டும் சுரண் டுவதல்ல. அவர்களை மட்டும் நம்ப சீவிக்கக் கூடியதுமல்ல. இவர் களுக்கும் கீழ்நிலையில் இருக்கும் தொழிலாளர்களையும் அது நம் பியிருக்கின்றது.



படிப்பகம்

www.padippakam.com

முதலாளியாகும் கனவில் முதலாளிகளோடு குலவிக் குழைந்து வாழ்வின் உச்சங்களுக்கு போகத் துடிக்கும் ஒரு வர்க்கத்தை போராடுவதைத் தவிர வாழவழியின்றிப் போன வர்க்கத்தோடு ஒன்றாகப் பார்த்து ஒரே அளவுகோல்களோடு அணுகுவது பயனற்றது. மார்க்சியப் பொருளியல் எவ்வளவு நவீனமானது என்பதை இவர்களுக்கு சொல்லிக் கொடுங்கள். ஆகக் குறைந்தது இவர்களுள், இந்த அமைப்புக்கு எதிரான உணர்வையாவது கொண்டிருக்கக் கூடிய வீதியில் நிற்கும் வேலை இழந்துபோன நுட்பர்களைத் திரட்டிக் கொள்ளுங்கள். இவர்களது தொழில்துறை தங்கியிருக்கும் அடிமட்டத் தொழில்புரியும் தோழர்களையும் திரட்டுங்கள். இதுவே போர்க்குணாம்சம் கொண்ட கூட்டணியாக அமையும். எட்டுமணி நேர ஓய்வினை அலுவலகத்தின் மெல்லிய இசை கசியும் இணையத்துடன் கூடிய குளிரூட்டப்பட்ட சூழலிலேயே எடுத்துக் கொள்கின்றோம் என்று இவர்கள் உங்களை விரட்டி விடுவார்கள். இந்த சுகபோகச் சுரண்டலில் எமது நாடும் எவ்வளவு தூரம் ஏமாற்றப்பட்டு சுரண்டப்பட்டுப் போகிறதென்பதை அதன் விளைவுகள் வந்து தாக்கும்போதே இவர்களால் புரிந்து கொள்ள முடியும்.

கோட்சிலா: ஐ.டி. துறையில் இட ஒதுக்கீடு இல்லை. அரசு வேலை வாய்ப்பில் உங்கள் சாதி என்ன என்பதற்குதான் முக்கியத்துவம். இங்கேயோ உங்களுக்கு என்ன கிடைக்கும் என்பதை உங்கள் சாதி தீர்மானிப்பதில்லை. உங்கள் தகுதியும் திறமையும்தான் தீர்மானிக்கின்றது. இங்கே திறமை இருந்தால் சம்பாதிக்கலாம். வேலைவாய்ப்பையும் செல்வத்தையும் உருவாக்கி தேசத்தின் முன்னேற்றத்துக்கு பங்களிப்பு செய்திருக்கும் முதல் தலைமுறை தொழில் முனைவோர் பலர் ஐ.டி. துறையில் இருக்கின்றார்கள். காரல் மார்க்ஸை வழிபடும் கம்யூனிஸ்டுகளாலும் அவர்களது எடுபிடிகளாலும் இதனைச் சகித்துக் கொள்ள முடிவதில்லை. அதனால்தான் தொழிற்சங்கத்தைக் கட்டி பிரச்சினைகளை உருவாக்கி, ஐ.டி. துறை தனது இலட்சியத்தை அடைய விடாமல் முடக்குகின்றார்கள். இந்தியா சந்திரனுக்கு விண்கலம் அனுப்பினால் வினவு எதிர்க்கின்றது. இந்தியாவின் பொருளாதாரம் வளர்வதையும், நடுத்தர வர்க்கத்தினர் உலகமயமாக்கத்தால் பயன் அடைவதையும் இவர்களால் சகித்துக் கொள்ள முடிவதில்லை. பொறாமைதான் இவர்களை இப்படி எழுதத் தூண்டுகின்றது. இந்த அற்ப மதியினரை மன்னித்து விடுவோம்.



படிப்பகம்

www.padippakam.com

அரசூரான்: அய்யா வினவு, உங்க கருத்துல ஓரளவுக்கு உண்மையி ருக்கு. அதுக்காக ஏன் ஐ.டி. காரன் (தலைப்பு போட்டு) வம்பிழுத்து இருக்கீங்கன்னு தெரியல. இதுல ஐ.டி. க்கார நண்பன் மட்டும் ரோஷப்படவோ/வெட்கப்படவோ தேவையில்லை. பி.ஜே.பி ஆட் சியில் இந்தியா ஒளிர்ந்ததோ இல்லியோ, ஐ.டி-யால தமிழகம் ஒளி ருதுங்கிறது நீங்க எல்லோரும் ஒத்துக்கணும். இது உலகமயமாதலின் விளைவால் வந்த கேடு. தேள் எங்கயோ கடிக்க ஏன் ஐ.டி. காரனுக்கு மட்டும் நெறிக் கட்டணும்? அய்யா நீங்க பன மரத்துக்கு கீழ நின்னு மோரக் குடிக்கிறீங்க. ஏதோ ஐ.டி. க்கார புள்ளைங்க பீர குடிக்கி றாங்க.

புருனோ: "மிக மிக நவீனமான சுரண்டல் உத்தி இவர்கள் மீது பயன் படுத்தப் படுகின்றது. தமக்கொரு நெருக்கடி வரும் வேளை யொன்றைத் தவிர, இந்த ஆடம்பரத்துக்கு ஆப்பு விழும் நாளொன்றைத் தவிர வேறெப்போதும் இதனை இவர்கள் புரிந்து கொள்வார்கள் என்று நீங்கள் எதிர்பார்க்க முடியாது." நீங்கள் கூறியது சரி என்று இங்கு வரும் மறுமொழிகளே நிரூபிக்கின்றன.

ராஜ்: நன்றி வினவு. நான் ஐ.டி துறையில்தான் பணியாற்று கின்றேன். என் அப்பா ஒரு கம்யூனிஸ்ட். மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோரைப் பற்றி நான் படித்திருக்கின்றேன். ஆனால் அந்த வயதில் அவர்களுடைய வாழ்க்கையைப் பற்றிப் புரிந் துகொள்ள முடிந்ததே தவிர மார்க்சியத்தைப் புரிந்து கொள்ள முடிய வில்லை. அதாவது மார்க்சின் பொருளாதாரக் கட்டுரைகளைப் புரிந் துகொள்ள முடியவில்லை. அதனை விளக்கும் வகையில் நீங்கள் ஒரு பதிவு எழுத முடியுமா? நாங்கள் தொழிற்சங்கம் அமைக்கத் தயாராக இருக்கின்றோம். காட்சிலா அவர்களே, வினவு கூறும் ஒவ்வொரு வார்த்தைக்கும் எதிராகக் குருட்டுத்தனமாக நாம் ஏன் சண்டை போட வேண்டும்? விவாதித்து முடிவு செய்யலாமே!

அகரன்: இது போன்ற (ஐ.டி.) துறையில் வேலை செய்து கைநி றையச் சம்பளம் வாங்குபவர்களுக்கு தமது சுயநலம் மட்டுமே முக் கியம். அவர்களுக்கு மற்றவர்கள் எக்கேடு கெட்டாலும் அக்கறை யில்லை. அதனால் மற்றவர்களும் அவர்களைப் பற்றி அக்கறைப் படத் தேவையில்லை. அவர்களை இப்படிப் பேச வைப்பதே, அவர்கள் சார்ந்த வர்க்க குணாம்சம் என்ற அடிப்படை மார்க்சியம் தெரியாத அப்பாவிகள். இயேசு கூறியது போல: "இவர்கள் தாம் என்ன செய்கிறோம், என்ன பேசுகிறோம் என்றே தெரியாதவர்கள்." மன்னித்து விடுவோம்.



படிப்பகம்

www.padippakam.com

சிறீதர் நாராயணன்: ''உங்கள் அளவுக்கு படிப்பும், ஊதியுமும், வாழ்க்கைத் தரமும் இல்லாத சாதரணத் தொழிலாளர்கள் பணி யாற்றும் தொழிற்சாலைக்கு சென்று தொழிற்சங்கம் எப்படிச் செயல் படுகின்றது என்று விசாரித்தறியுங்கள். அந்தச் சாதரணர்கள் எளிய மொழியில் உங்களுக்கு புரிய வைப்பார்கள். ஆனால் அதைச் செய் வதற்கும் ஒரு பணிவு வேண்டுமே?'' இதே யோசனையை நீங்களும் பின்பற்றலாம் தோழர். தொழிற்சங்கங்கள் வகுத்ததை விடச் சிறப் பாகவே ஐ.எஸ்.ஓ 9001 போன்ற முறைகள் இருக்கின்றன. இங்கு வந் திருக்கும் பல பின்னூட்டங்கள் ஏதோ உணர்ச்சிவசப்பட்டு எழுதப் பட்டு சலிப்பைத்தான் தருகின்றன.

யுரேசியன்: ''நீங்கள் இந்தக் கட்டுரையை எழுதப் பயன்படுத்திய பெரும்பாலான கருவிகள் கடந்த 10 ஆண்டுகளில் வெகுவாக விலை குறைந்திருக்கின்றன. இது எப்படி சாத்தியமாயிற்று? இந்த விலை குறைவால் உங்களைப் போன்ற எண்ணற்றவர்கள் பயன்பெறத்தான் செய்கின்றார்கள்'' என்கிறார் ஸ்ரீதர் நாராயணசாமி. அவர் கீழ்க்கண்ட கட்டுரையைப் படிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன்:

''இன்று உலகில் கணினி, மற்றும் மொபைல் தொலைபேசி போன்ற இலத்திரனியல் பொருட்களின் விலை குறைந்து பாவனை அதிகரித்து இருக்கின்றதென்றால், அதற்கு முக்கிய காரணம், அவற் றிற்கான மூலப்பொருட்கள் கொங்கோவில் இருந்து பெருமளவில் கொள்ளையடிக்கப்படுவது தான். இது வெறும் கொள்ளை சம்பந் தமான பிரச்சினை மட்டுமல்ல, கனிம வள சுரங்கங்களை கைப்பற்றி சுரண்டுவதற்காக லட்சக்கணக்கான மக்கள் தமது வாழிடங்களில் இருந்து விரட்டப்பட்டனர், அல்லது படுகொலை செய்யப்பட்டனர். கடந்த பத்தாண்டுகளில் மட்டும் இலத்திரனியல் நிறுவனங்களின் மாபெரும் கொள்ளைக்காக நான்கு மில்லியன் அப்பாவி மக்கள் பலி கொடுக்கப் பட்டனர்.''

அகரன்: ஐரோப்பிய அல்லது அமெரிக்க மக்கள், எவ்வாறு வச தியான வாழ்க்கையால் புரட்சியை நினைத்துப் பார்ப்பதில்லையோ, அவ்வாறுதான் ஐ.டி. துறை சார்ந்த நண்பர்களும். எல்லாம் பணம் செய்ற வேலையுங்கோ..! இவர்களுக்கு கல்வியறிவு இருப்ப தால்தான், முதலாளி சம்பளம் என்ற பெயரால், அதிகப் பணத்தை லஞ்சமாகக் கொடுத்து விலைக்கு வாங்கி வைச்சிருக்கான். ஏகாதிபத் தியம் முதலாளித்துவத்தின் உச்சகட்டம் என்ற நூலில் லெனின் சொல்கிறார்: ''தொழிலாளி வர்க்கத்தைப் பிளவுபடுத்தி அவர்



படிப்பகம்

www.padippakam.com

களிடையே சந்தர்ப்பவாதத்தை ஊக்குவித்து தொழிலாளிவர்க்க இயக்கத்தில் தற்காலிகமாக ஒரு சீர்கேட்டை ஏற்படுத்துவது ஏகாதிபத்தியத்தின் ஒரு போக்காக இருக்கிறது என்பதைக் கவனிக்க வேண்டும்''. அக்டோபர் 7, 1858 இல் எங்கெல்ஸ் மார்க்சுக்கு இவ்வாறு எழுதினார்: ''இங்கிலாந்தின் தொழிலாளி வர்க்கம் மென்மேலும் முதலாளித்துவத் தன்மை கொண்டதாய் மாறிக் கொண்டிருக்கிறது.''

பென்டுகாலன்: ''அமெரிகாவிலும் யாரும் வேலையிழக்கவில்லை. புதிய வேலைவாய்ப்புகள் உருவாகிக் கொண்டுதானிருக்கின்றன.'' என்கிறார் ஸ்ரீதர் நாராயணன். கீழே உள்ளது ராய்டர் செய்தி.

அதிலிருந்து ஒரு பகுதி: ''இந்த ஆண்டு அமெரிக்காவில் இதுவரை 12 இலட்சம் வேலைகள் இல்லாது ஒழிந்தன. தேசிய உழைப்புச் சந்தையில் பெரும் சரிவு ஏற்பட்ட காரணத்தினால் கடந்த 3 மாதங்களில் மட்டும் ஐ.டி துறையில் 6,51,000 வேலைகள் காலியாகி இருக்கின்றன.'' ஸ்ரீதர், உங்க பொன்மொழிய அமெரிக்காவுல ஒரு பிரஸ்மீட் போட்டு நவம்பர் 3 ஆம் தேதியே சொல்லீருந்தீங்கன்னா, பாவம் அந்த கிழம் மெக்கெய்னும் அட்டு பிகர் சாரா பேலினும் ஜெயிச்சிருப்பாங்க. உங்க பேரும் வரலாற்றுல நின்னிருக்கும்.. இப்பவும் ஒன்னும் கெட்டுப் போயிறல. இந்தியாவுல ஏப்ரல்ல தான் எலக்ஸன் .. ஏதாவது செய்யுங்க பாஸ்.

சிறீதர் நாராயணன்: அமெரிக்காவில் வேலையில்லாதவர்களின் அதிகரிப்பு அவுட் சோர்ஸிங்கினால் இல்லை என்பதே எனது கருத்து. தற்போதைய வேலையிழப்பு பொருளாதார நெருக்கடியினால் நிறுவனங்கள் தங்கள் செலவைக் குறைக்கின்றன. இம்மாதிரி செலவுக் குறைப்புகள் எப்பொழுதும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. பொருளாதார நெருக்கடி ஏற்படும்போது அது செய்தியாகின்றது. 2000-ம் ஆண்டு வாக்கில் 'தொழில்நுட்பம்' 'இணையதளம்' என்று சொன்னாலே, பணம் செலவழிக்க எல்லோரும் தயாராக இருந்தார்கள். பின்னர் திடீரென்று விழித்துக் கொண்டு இந்த இணைய தளங்களினால் எங்களுக்கு என்ன பயன் என்று தங்கள் செலவினத்தைக் குறைத்துக் கொண்டார்கள். அது பெரும் செய்தி ஆனது. ஆனால் இப்போதும் இணையம் மூலமாகப் பல்வேறு தொழில்கள் நடக்கின்றன. அப்போதைக் காட்டிலும் இப்போது ஏராளமான இலவச சேவைகள் கிடைக்கின்றன. ஆனால் அவை செய்தி ஆவதில்லை. டெட்ராய்டில் வாங்கப்படாத வீடுகளைப் பற்றிய செய்திகள் முன்னர் வருவதில்லை. இப்போது பொருளாதார நெருக்கடி



படிப்பகம்

www.padippakam.com

யினால் 5000 டாலருக்கு வீடுகள் கிடைக்கின்றன என்பது செய்தி ஆகின்றது. உண்மையில் அம்மாதிரி வசிக்க இயலாத வீடுகள் எல்லாக் காலங்களிலும் இருக்கத்தான் செய்கின்றன. அவை பற்றி யாரும் விரிவாக ஆராய்ந்து செய்தி இடுவதில்லை.

சென்ற ஆண்டு சந்தை நன்றாக இருந்த போதும் அதே 5000 டாலர் வீடு 10000 டாலருக்கு கிடைத்தது. உங்களுடைய மறுமொழியில் இன்னொரு இழையில் வேலை வாய்ப்பிழப்பற்கும் அமெரிக்கக் குடியரசு கட்சிக்கும் முடிச்சுப் போட்டிருந்தீர்கள். ஜனநாயகக் கட்சி வேலை வாய்ப்பிற்கான பெரும் திட்டங்கள் எதுவும் முன்வைக்கவில்லை. இந்த விசயத்தில் இரண்டு கட்சிகளுக்கும் பெரிதாக வித்தியாசம் ஏதும் இல்லை. அவுட் சோர்ஸிங்கினால் இந்தியா மட்டுமல்ல நண்பரே, சீனா, பிலிப்பைன்ஸ், அர்ஜெண்டினா போன்ற ஏகப்பட்ட நாடுகள் பயன்பெறத்தான் செய்கின்றன. உலக எல்லைகள் சுருங்கி விட்டதினால், அவரவர்க்கு தேவையான சேவையை நாடு எல்லைகள் கடந்து பெறுவதில் எந்தவிதத் தவறுமில்லை.

நான் சொன்ன வேலைவாய்ப்பு அதிகரிப்பு என்பது கடந்த 25 ஆண்டுகளில் நிகழ்ந்து கொண்டிருக்கும் விசயம். ஹிஸ்பானியர்களும், ஆசியர்களும், ஆப்பிரிக்கர்களும் அமெரிக்காவின் பல்வேறு தளங்களில் புதிய வேலைவாய்ப்புகளைத் தாங்களே உருவாக்கிக் கொண்டுதான் இருக்கிறார்கள். யூனியன்களினால் தொழிலாளர்கள் பயனடந்தது பற்றி எந்தவித மாற்றுக்கருத்தும் இல்லை. ஆனால் பிரபல ஐ.டி நிறுவனங்களில் நடைபெறும் ஜனநாயக நடைமுறைகள் பற்றி துளியும் தெரியாமல் எழுதப்படும் கட்டுரைகளுக்கு என்ன மாதிரி எதிர்வினை செய்ய முடியும் என்பதுதான் சிக்கல்.

**வாய்ஸ் ஆன் விங்ஸ்:** ஒரு இனம் தெரியாத அச்சத்தை மட்டும் இந்தப் பதிவும் பின்னூட்டங்களும் ஏற்படுத்துகின்றன.

மாடு: ''இந்தியாவில் பார்க்கும் வேலைக்கு அமெரிக்க சம்பளம் கொடுக்க முடியுமா? சரிதான் அமெரிக்கன் பார்க்க வேண்டிய வேலையை இங்கிருந்து நீங்கள் பார்க்கிறீர்கள். உங்களால் வேலையிழந்த அமெரிக்கனுக்கு உங்கள் பதில் என்ன?'' நீங்கள் ஹூண்டாய் கம்பெனிக்கு ஒரு பார்வை, ஐ.டி கம்பெனிக்கு ஒரு பார்வையை வைக்கின்றீர்கள். இரண்டு கம்பெனிகளுமே வெளிநாடுகளுக்குத்தான் ஏற்றுமதி செய்கின்றன. ஹூண்டாய் கார் ஏற்றுமதி செய்கின்றது. நாங்கள் மென்பொருட்களை ஏற்றுமதி செய்



படிப்பகம்

www.padippakam.com

கின்றோம். இதே வார்த்தைகளை ஹூண்டாய் தொழிலாளிகளுக்கு எதிராக நீங்கள் சொல்ல முடியுமா? ஹூண்டாய் தொழிற்சங்கத் துக்கு போங்க. அந்த ஊழியர்களை ஐரோப்பாவுக்கு இணையான சம்பளம் கேட்கச் சொல்லுங்க பார்ப்போம். அல்லது நீங்கள் இங்கே கார் உற்பத்தி செய்வதால் ஐரோப்பாவில் உள்ள உங்கள் சகோதரர்கள் வேலை இழக்கிறார்கள்னு சொல்லி அவங்களையெல்லாம் ராஜினாமா செய்யச் சொல்லுங்க. அப்புறம் ஐ.டி பக்கம் வாங்க. இந்த கதையெல்லாம் உங்க யூனியன் மீட்டிங்ல பேசுங்க. சரியா?

அகரன்: ''அமெரிக்காவில் வேலையில்லாதவர்களின் அதிகரிப்பு அவுட் சோர்ஸிங்கினால் இல்லை என்பதே எனது கருத்து.'' - ஸ்ரீதர் நாராயணன்.

ஏன்யா சிறீதர், ஐ.டி. இலே வேலை பார்க்கிறவன் நிறைய பேருக்கு பொதுஅறிவு கம்மி என்னு தெரியுது. அவுட் சோர்சிங் காரணமாக வேலையிழந்த அமெரிக்கர்கள் நிறைய பேர் என்றதால தான் இப்போது ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கபபட்ட ஒபாமா கூட இந்த அவுட் சோர்சிங் முறையை நிறுத்த வேண்டும் என்று சொல்லியிருக் கிறார். ஒரு தொழில் தகமை உடையவனை வேறு தொழிலைச் செய் என்று கட்டாயப்படுத்த முடியாது. இப்போது இந்தியாவில் ஐ.டி. யில் வேலை இழந்தவர்களைப் படித்து தெருக் கூட்டும் வேலை செய்யச் சொன்னால் செய்வார்களா? சிறீதர் ஒன்னையே கொஞ்சம் யோசிச்சு பாரு.

''அவுட் சோர்ஸிங்கினால் இந்தியா மட்டுமல்ல நண்பரே, சீனா, பிலிப்பைன்ஸ், அர்ஜெண்டினா போன்ற ஏகப்பட்ட நாடுகள் பயன் பெறத்தான் செய்கின்றன''ங்குறாரு ஸ்ரீதர். இதே பதிவிலே இருக்கிற ஏதோ ஒரு பின்னூட்டத்தில அமரபாரதி என்கிறவர், ''ஐ.டி. துறையிலே இருக்கிற எல்லாரும் ஜெயிக்கிற சிச்சுவேஷனை உலகம் முழுக்க கொண்டுவரப் போறதா சொல்றார். இது நடக்கிற விஷயமா சாரே? நீங்க சொல்றபடி பார்த்தா, அவுட் சோர்சிங்காலே அமெரிக்காவிலே வேலைய தூக்குறாங்க. இந்தியா, பிலிபைன்ஸ், அர்ஜென்டினாவிலே வேலை கிடைக்குது. எல்லாரும் ஜெயிக்கிற வின்-வின் சிச்சுவேசனை எப்படி உருவாக்க முடியும்? உங்க ஐ.டி. தத்துவம் இங்கே இடிக்குதுங்க.

ஜோன்சன்: அப்பப்பா, எத்தனைக் கருத்து குவியல்கள்!!! பிரச் சினையே இதுதான் - 'இங்க வேலை பார்க்கிற பெரும்பாலான மக்



படிப்பகம்

www.padippakam.com

களுக்கு நாட்டு நடப்பு பற்றியோ, சாதாரண மக்களோட வாழ்க்கை பற்றியோ தெரிந்து கொள்ள ஆர்வமே இல்லாம இருக்கிறது. 90 சத விகிதம் பேர் தங்களோட இயல்பான வாழ்க்கையையே வாழ்வது கிடையாது.' இந்தப் பதிவு என் போன்ற எல்லோரும் படிக்க வேண்டியது. ஆனா, தொழிற் சங்கங்கள் பற்றி இப்போதைக்கு எனக்கு எதுவும் தெரியாததால - நோ கமெண்ட்ஸ்.

இளையபல்லவன்: அய்யா, தங்களுடைய பதிவிற்கான ஒரு அலசல் ஐ.டி. துறையில் தொழிற்சங்கங்கள் ஏன் இல்லை என்கிற என்னுடைய பதிவைப் பார்த்துத் தங்கள் கருத்துக்களைச் சொல்லவும். மிக்க நன்றி.

அகரன்: ஐயா, இளையபல்லவன், தங்களுடைய பதிவை வாசித்தேன். நீங்கள் சொல்லுவது என்னவென்றால், ஐ.டி. தொழிலாளியின் கோணத்தில் இருந்து, தொழிற்சங்கம் தீர்வாகாது என்பது. ''தீர்வாகாது'' என்பதை 'விருப்பத்துக்குரியதாகாது' என்று சொல்வதே பொருத்தம். நீங்கள் கூறும் நடைமுறை யாவும் அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் ஏற்கெனவே வந்து விட்டது. அங்கே சாதாரண துப்பரவுத் தொழிலாளி அல்லது கட்டடத் தொழிலாளி கூட நீங்கள் கூறும் ஐ.டி. ஊழியரின் நிலைமையில்தான் இருக்கின்றார். அவர்களுக்கும் தொழிற்சங்கம் பற்றி எந்த அக்கறையும் இல்லை. அவர்களும் நீங்கள் கூறும் நியாயங்களைத்தான் முன் வைக்கின்றனர். அந்த நாடுகளில் ஏற்கெனவே இருக்கும் தொழிற்சங்கங்கள், அனைத்து தொழிலாளரின் உரிமைகளையும் கவனித்துக் கொள்கின்றன. அதனால் தான் சாதாரண தொழிலாளி அது பற்றி அக்கறை இல்லாமல் இருக்கின்றான். நீங்கள் சிறு பிள்ளையாக எந்தக் கவலையுமற்று வாழ்ந்த காலத்தில், உங்கள் தந்தை எல்லாப் பொறுப்பையும் தனது தலை மேல் போட்டுக் கொண்டு குடும்பத்தைக் பார்த்ததை நினைத்துப் பாருங்கள். ஐ.டி. நண்பர்களே, நீங்கள் இப்போதும் தந்தையின் நிழலில் வாழும் உலகம் தெரியாத சிறு பிள்ளைகளைப் போல பேசுகின்றீர்கள்.

நீங்கள் இங்கே தொழிற்சங்கம் என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்ளாததுதான் பிரச்சினை. அது தொழிலாளரை நிறுவனப்படுத்தும் அமைப்பு. தொழிலாளரின் நலன்களை மட்டும் காக்கும் அமைப்பு. இன்னும் விரிவாகச் சொல்கிறேன். நண்பரே! உங்கள் ஐ.டி. கம்பெனி முதலாளிகளுக்கு தொழிற்சங்கம் இருக்கும் விடயம் தெரியுமா? அமெரிக்காவில் கூட எல்லா முதலாளிகளுக்கும்



படிப்பகம்

www.padippakam.com

தொழிற்சங்கம் இருக்கிறது. அதற்கு அவர்கள் வேறு பெயர் வைத்துக் கொண்டிருக்கலாம். ஆனால் அடிப்படையில் முதலாளிகளின் நலன் பேணும் சங்கம் என்பதை மறுக்க முடியாது. நீங்கள் மட்டும்தான் இது ஏதோ செங்கொடிக்காரரின் போதனை என்று பயந்து ஓடுகின்றீர்கள். தவறு நண்பா, தவறு. உனது சிந்திக்கும் முறையை மாற்ற வேண்டும். முதலாளிகள் எதற்காக தமக்கு தொழிற்சங்கம் வைத்திருக்கின்றனர்? கொஞ்சம் சிந்தியுங்கள். தொழிற்சங்கம் என்பது குறிப்பட்டவர்களின் நலன்களைப் பேணும் நிறுவனம். நீங்கள் நினைப்பதைப் போல அது ஒன்றும் கம்யூனிச சித்தாந்தம் அல்ல. உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது. நீங்கள் என்னதான் சம்பாதித்தாலும் முதலாளிக்கு நிகராக வர முடியாது. ஏனென்றால் அவன் உங்களிடமிருந்து சுரண்டும் பணத்தைச் சேர்த்துதான் கோடீஸ்வரன் ஆகின்றான்.

சிறீதர் நாராயணன்: ''ஏன்யா சிறீதர், ஐ.டி. இலே வேலை பார்க்கிறவன் நிறையப் பேருக்கு பொது அறிவு கம்மி என்னு தெரியுது.'' அறிவுக் கொழுந்து அகரன் அவர்களே, முன்னேற்றப் பாதையைப் பற்றி சிந்திக்கத் தெரியாத, வெறும் உணர்ச்சிப் பிரவாகமாகப் பேசுபவர்களின் பேச்சை அப்படியே நம்பும், குறைந்தபட்ச உழைப்பு மட்டுமே போதும் என்ற சோம்பல் மனோபாவம் இருக்கும் வறட்டு சித்தாந்தவாதிகளுக்கு இருக்கும் பொதுஅறிவு எனக்கு நிச்சயம் வேண்டாம். எப்போதும் ஒரே மாதிரியான வறண்ட சிந்தனையில் அடுத்தவரை மட்டும் குற்றஞ்சாட்டி வெட்டிப்பேச்சு பேசாமல் நான் சொன்ன 'வேலை வாய்ப்பு அதிகரிக்கும்' தத்துவத்தை யோசித்துப் பாருங்கள். இன்று உங்கள் முன்னால் விரிந்து நிற்கும் வாய்ப்புகள் எதனால் சாத்தியமாயிற்று என்று யோசிக்காமல், அவன் அதிகம் சம்பாதிக்கிறானே என்று வயிற்று கடுப்பாகி வாழ்க்கையை வீணடிக்காதீர்கள்.

ஒபாமா அனுமார் படத்தை வைத்திருக்கின்றார் என்று ஊடகங்கள் எழுதுவதைப் போல்தான் நீங்களும் இதைச் சொன்னார், அதைச் சொன்னார் என்று எழுதுகின்றீர்கள். அவுட் ஸோர்ஸிங் நிறுத்தப் பட வேண்டியது என்று யாரும் சொல்லவில்லை. சொல்லவும் போவதில்லை. ஜனநாயகக் கட்சியின் கொள்கைகள் இடதுசாரி தத்துவமுடையதால் அது இம்மாதிரியான வளர்ச்சியில் கண்காணிப்பை அதிகப்படுத்தும். இதில் அடுத்தவரின் பொது அறிவைப் பற்றி விமர்சனம் வேறு. எங்கள் பொது அறிவினைப் பற்றிய



படிப்பகம்

www.padippakam.com

சான்றிதழ் தேவையில்லை. இம்மாதிரியான விவாதங்களில் தனி மனிதத் தாக்குதல் இருக்கும் என்பதாலேயே நான் பங்கேற்பதில்லை. மற்றபடி இங்கே சொல்ல வேறு ஏதுமில்லை.

**சிறீதர் நாராயணன்:** ''ஐ.டி. கம்பெனி முதலாளிகளுக்கு தொழிற் சங்கம் இருக்கும் விடயம் தெரியுமா?'' தொழிற்சங்கத்திற்கும், கூட் டமைப்பிற்கும் வித்தியாசம் தெரியாத அல்லது வித்தியாசப்படுத்திப் பார்க்கத் தெரியாதவர்களின் பொது அறிவு என்னை வியப்பிலாழ்த் துகின்றது. எது சங்கம்? அதன் அடிப்படை என்ன? எது கூட்ட மைப்பு? ஏன் ஒரு கூட்டமைப்பு தன்னை ஒரு சங்கமாக வைத்துக் கொள்ளாமல் கூட்டமைப்பாகச் செயல்படுகின்றது? எந்தவித புரிதல் களும் இல்லாத மொண்ணை வாதம். செங்கொடி என்றெல்லாம் யாரும் பயந்து ஓடவில்லை. மிகவும் ஆரோக்கியமான முறை யிலேயே பெரிய கம்பெனிகளில் விவாதங்கள் நடக்கின்றன. களத்தில் இறங்கி யாரும் ஆய்வு நடத்திப் பார்த்ததாகத் தெரிய வில்லை. மிகவும் வருத்தகரமானது இம்மாதிரியான போக்கு.

**வாய்ஸ் ஆன் விங்ஸ்:** எனது பின்னூட்டத்தை மேற்கோளிட்டு ஒரு அதிமேதாவி பின்னூட்டியிருக்கிறார். அவருக்கு நன்றி. மூளைச் சலவை செய்யப்பட்ட கார்ப்பரேட் ஆசாமிகளின் win - win சித்தாந் தங்கள் எவ்வளவு அபத்தமாகப் படுகிறதோ அதே அளவு அபத்தமா னதாகத்தான் கேள்விக்குட்படுத்தாத இடதுசாரியியமும் தென்படு கின்றது. (குறிப்பாகக் கூற வேண்டுமென்றால் மயூரனின் பின்னூட் டத்தில் ஓரிருமுறை வந்து போகும் இந்தக் கருத்து: ''மார்க்சிய பொருளாதார அணுகுமுறை என்பது இவர்கள் நம்பிக் கொண்டி ருக்கும் பொருளியல் உலகையும் அதன் கோட்பாடுகளையும் விட மிக மிக நவீனமானது என்பதை'') இந்தக் கூற்றை எந்த அடிப்ப டையில் வெளியிட்டிருக்கிறார். அதற்கு நிரூபணமாக எங்காவது மார்க்சியப் பொருளாதாரம் என்பது முயன்று பார்க்கப்பட்டு, முதலா ளித்துவத்தை விட அது சிறந்தது என்று முடிவுக்கு வரப்பட்டுள்ளதா என்று தெரிந்தால் நன்றாயிருக்கும். சீனாவைச் சுட்ட மாட்டீர்க ளென்று நம்புகிறேன். அது வெறும் சர்வாதிகார முதலாளித்துவமே என்பது எனது புரிதல்.

இவ்வாறாக, சிந்தாந்தங்களின் குடுமிப்பிடிச் சண்டையில், இவற்றை எல்லாம் பற்றி அறியாத, ஆனால் இரு சித்தாந்திகளின் செயல்பாடுகளின் காரணமாகவும் தனது வாழ்வையும் வாழ்வாதா ரங்களையும் இழக்கும் சாமானியனின் பொதுப்புத்தி மனநிலையிலி



படிப்பகம்

www.padippakam.com

ருந்துதான் எனது 'இனம் தெரியாத' அச்சத்தை வெளிப்படுத்தி இருக்கின்றேன். சோஷலிச நேருவின் வளர்ச்சித் திட்டங்களால் அப்புறப் படுத்தப்பட்ட கோடானுகோடிகளா, அல்லது இன்று கேபடலிச / கம்யூனிச மன்மோகன்களாலும் புத்த தேவர்களாலும் வெளியேற்றப் படும் கோடானு கோடிகளா - யாருடைய நிலை சிறந்தது? யாருடைய நிலை பொறாமைப் பட வைக்கக் கூடியது?

அகரன்: ''தொழிற்சங்கத்திற்கும், கூட்டமைப்பிற்கும் வித்தியாசம் தெரியாத அல்லது வித்தியாசப்படுத்திப் பார்க்கத் தெரியாதவர்களின் பொது அறிவு என்னை வியப்பிலாழ்த்துகிறது.. எது சங்கம்? அதன் அடிப்படை என்ன? எது கூட்டமைப்பு? ஏன் ஒரு கூட்டமைப்பு தன்னை ஒரு சங்கமாக வைத்துக் கொள்ளாமல் கூட்டமைப்பாக செயல்படுகின்றது? எந்தவித புரிதல்களும் இல்லாத மொண்ணை வாதம்..'' நீங்கள் நிறுவனப்படுத்தப்படாத தனிநபர் என்பதால் சங்கம், கூட்டமைப்பு என்று பிதற்றுகிறீர்கள். சொற்களை மாற்றிப் போடுவதால் அர்த்தம் மாறி விடாது, சிறீதர். தொழிலாளருக்கு என்று சங்கம் இருப்பது போல, முதலாளிகளுக்கு சங்கம் இருக்கிறது என்பதைத்தான் எளிமைப்படுத்தி சொன்னேன். தொழிற்சங்கமும் ஒரு கூட்டமைப்புதான். எப்படி வேண்டுமானாலும் பெயர் வைத்திருக்கட்டும். அவை அவர்களது நலன்களை பாதுக்காக்க தான் ஏற்படுத்தப்பட்டன. முதலில் முதலாளிகள் தான் அவர்களது நலன்களுக்காக சங்கம் (உங்கள் மொழியில் கூட்டமைப்பு) கட்டிக் கொண்டனர். பிறகு தான் தொழிலாளர் நலன்களுக்காக தொழிற்சங்கம் வந்தது. இரண்டு சங்கங்களும் அதில் அங்கம் வகிப்பவர்களின் நலன் சார்ந்தது என்ற சாதாரண உண்மையைக் கூட புரிந்து கொள்ள முடியாத அளவிற்கு, நீங்கள் முதலாளித்துவ போதனைகளால் மூளைச் சலவை செய்யப்பட்டிருக்கின்றீர்கள்.

ஒபாமாவால் அவுட்சோர்சிங்கை நிறுத்த முடியாது என்பது உண்மைதான். அதற்கு காரணம் முதலாளிகள் எப்போதும் எங்கே எப்படி செலவைக் குறைத்து இலாபம் பார்க்கலாம் என்றுதான் சிந்திப்பார்கள். ஐ.டி. முதலாளிக்கு வக்காலத்து வாங்கும் சிறீதர் அவர்களே, செலவைக் குறைப்பதற்காக 20000 சம்பளமாக கொடுப்பதை நிறுத்தி விட்டு, வெறும் 5000 அல்லது 2000 கொடுத்தால் வாங்கிக் கொள்வீர்களா? அய்யா சிறீதர், உங்களுக்கு 20000 ரூபாய் சம்பளம் கொடுக்கும் அதே நேரம் பங்களாதேஷ் நாட்டுக் காரன் 10000 ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டு செய்யத்



படிப்பகம்

www.padippakam.com

தயாராக இருந்தால், அந்த அமெரிக்க முதலாளி எங்கே போவான்? ஐ.டி. தொழில்களை இந்தியாவில் இருந்து பங்களாதேஷிற்கு அவுட் சோர்சிங் செய்தால் நீங்கள் வாழ்த்தி வழி அனுப்பி வைப்பீர்களா?

நீங்கள் கூறியது போல பெரிய கம்பெனிகளில் ஆரோக்கியமான விவாதம் நடப்பது உண்மையாக இருந்தால், அமெரிக்காவில் லெமன் பிரதர்ஸ் போன்ற பெரிய வங்கிகள் எப்படி திவாலாகின? இதற்கு உங்களிடம் பதில் உண்டா? என்ன இருந்தாலும் நீங்கள் ஒரு சாதாரண ஐ.டி. தொழிலாளி. உங்களுக்கெல்லாம் கம்பெனிகளில் நடக்கும் ஊழல்களைப் பகிரங்கமாகச் சொல்லிக் கொண்டிருக்க மாட்டார்கள். நீங்கள் நினைப்பது போல களத்தில் இறங்கி ஆய்வு நடத்த வேண்டிய அவசியம் எனக்கில்லை. ஏனென்றால் நானே ஒரு பெரிய நிறுவனத்தின் நிர்வாக வேலை செய்கின்றேன். எனக்கு தெரியும் உள்ளுக்குள்ளே என்னென்ன குறைபாடுகள் உண்டென்று. மேல்மட்ட நிர்வாகிகளின் ஊழல், பணம் திருடுவதற்கு வசதியாக நண்பர்களைப் பதவியில் அமர்த்துதல், கம்பெனி செலவில் சொந்தத் தேவைக்கு வெளிநாட்டு பயணம், நண்பர்களுடன் ஐந்து நட்சத்திர ஹோட்டலில் உல்லாசம் .. சொல்வதற்கு நிறைய இருக்கின்றது.

தாராளமான பொது அறிவு இருப்பதாக மெச்சிக் கொள்ளும் சிறீதர், உங்களிடம் சம்பளமாகக் கொடுக்காமல் சுரண்டும் பணத்தில் தான் (அவுடசோர்சிங் செய்வதால் கிடைத்த எக்ஸ்ட்ரா இலாபம்), மேற்படி ஊழல் எல்லாம் நடக்கின்றது என்ற உண்மை எனக்கு நன் றாகவே தெரியும். (தேவைப்பட்டால் தகுந்த ஆதாரங்களுடன் நிரூ பிக்கத் தயார்.) நீங்கள்தான் பாவம், அவர்களை நல்லவர்கள் என்று நம்பி ஏமாந்து போகின்றீர்கள். காட் பிளஸ் யூ, சிறீதர்.

அகரன்: ''இன்று உங்கள் முன்னால் விரிந்து நிற்கும் வாய்ப்புகள் எதனால் சாத்தியமாயிற்று என்று யோசிக்காமல், அவன் அதிகம் சம் பாதிக்கிறானே என்று வயிற்று கடுப்பாகி வாழ்க்கையை வீணடிக்கா தீர்கள்.'' என்னது? நீங்கள் அதிகம் சம்பாதிக்கின்றீர்களா? சம்பா திப்பது என்ற சொல் கூட முதலாளிகளின் பாஷையில் இலாபத்தைக் குறிக்கும் என்பதும், உங்களுக்கு கொடுக்கும் சம்பளத்தை தமது செலவினமாகக் கருதும் முதலாளித்துவ பொருளாதாரம் தெரியா ததால் இப்படிக் கூறுகின்றீர்கள். உங்களது சம்பாத்தியம் கூட அமெ ரிக்க பல்தேசிய கம்பெனிகளின் நுகர்பொருள்களை வாங்க கொடுத்த நிதி என்பது கூட உங்களுக்கு தெரியாது. உங்களை நினைத்தால் பரிதாபமாக இருக்கின்றது. வினவு இன்னொரு பதிவில்



படிப்பகம்

www.padippakam.com

எழுதிய நுகர்பொருள் கலாச்சாரம் பற்றி வாசித்து அறியவும். உங்களை நம்பிதானே பீட்சா கார்னரும், கூச்சி (Gucci) கடைகளும் வியாபாரம் நடத்துகின்றன. உங்களது சம்பாத்தியம் மூலம் கிடைத்த பணம் திரும்பவும் அமெரிக்கா போய்ச் சேரும் மாயம் உங்களுக்கு தெரியாது தான். பாவம்.

உங்களுக்கு அதிகச் சம்பளம் கொடுத்து சக தொழிலாளிகளிடம் இருந்து உங்களைப் பிரித்து வைத்திருக்கும் சூழ்ச்சி பற்றி உங்களுக்கு எதுவும் தெரியாது. குறைந்தபட்ச உழைப்பு என்பது சோம்பல் மனப் பான்மை அல்ல. ஒரு நிறுவனம் அதிக இலாபம் சம்பாதிக்கும் போது, அதில் வேலை செய்யும் தொழிலாளிக்கு வேலைப்பளுவைக் குறைக்க வேண்டுமென்பது தான் நியாயம். நீங்கள் போற்றி வழி படும் முதாளித்துவ நாடுகளிலேயே ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்த நியாயம் உங்களுக்கு தெரியாததை நினைத்து பரிதாபப்படுகின்றேன். நீங்கள் சொன்ன வேலைவாய்ப்பை அதிகரிக்கும் தத்துவம் ஏற் கெனவே எமக்கு தெரிந்ததுதான். எங்கோ ஒரு மூலையில் பத்து பேர் வேலையிழக்க, அந்த வேலை வேறொரு இடத்தில் இருக்கும் ஒரு வனுக்கு கொடுக்கும் win-lose தத்துவம் தெரிந்த விடயம். நீங்கள் வேலை இழந்தவனை மறந்து விட்டு, வேலை கிடைத்தவன் பக்கம் நின்று கொண்டு தத்துவம் பேசுகின்றீர்கள்.

பல்தேசிய மோட்டார் கம்பெனி (ஹூண்டாய்) கொடுக்கும் சம்பளம், சாதாரணத் தொழிலாளிக்கு குறைவாகவும், உங்களைப் போன்ற (பொது அறிவு நிரம்பிய) அதிகம் படித்த மேதாவிக்கு அதிக சம்பளம் கொடுப்பதன் காரணம் கூட உங்களுக்கு தெரியாது. நீங்கள் இது போன்ற பதிவுகளைப் படிப்பதன் மூலம் சிந்திக்கத் தொடங்கி விடுவீர்கள். அதைத் தடுப்பதற்கு தான் அதிக சம்பளம் என்ற லஞ்சம் கொடுக்கின்றார்கள். நீங்கள் கூறும் வறட்டு சித்தாந்தம் போன்ற சொற்கள் எல்லாம் அவர்கள் சொல்லிக் கொடுத்தது தான். யாருடைய பணம் உனக்கு கிடைக்கின்றதோ, அவனைப் போலவே பேசக் கற்றுக் கொள்வாய் என்பது பழமொழி. சிறீதர் உங்களை இப் படியெல்லாம் பின்னூட்டம் போட வைப்பதே அவர்கள் கொடுக்கும் கை நிறைஞ்ச சம்பளம் என்ற லஞ்சம் தான். மறுக்க முடியுமா?

உங்களைப் போன்ற ஆட்களை (பாட்டாளி வர்க்கத்திற்கு லஞ்சம் கொடுத்து தனக்கு சார்பாக பேசச் செய்தல்) ஏற்கெனவே பிரித்தானியா தனது நாட்டில் ஏற்படுத்தியுள்ளது பற்றி லெனின்



படிப்பகம்

www.padippakam.com

கூறியதை ஏற்கெனவே எனது பின்னூட்டத்தில் சொல்லியிருக் கின்றேன். நூறு வருடங்களுக்கு பின்னர் லெனின் சொன்னதை ஐ.டி. நண்பர்கள் மெய்ப்பத்திருப்பதை மெச்சலாம். நாங்கள் வறட்டுத்த னமாக சித்தாந்தம் பேசவில்லை. முதலாளித்துவம் உங்களுக்கு சொல்லாமல் மறைத்த விடயங்களைக் கூறுகின்றோம். அவ்வளவு தான். தனக்கு தீனி போட்டு அன்பாக வளர்ப்பவன் தான் தன்னைக் கொல்லப் போகின்றான் என்பது தெரியாத அப்பாவி பலியாடு போன்ற நிலையில் இருக்கும் உங்களைப் பார்த்து பரிதாபப்ப டத்தான் முடியும்.

மண்டைச்சுரப்பு: கடந்த வாரம் வந்த அனைத்து பத்திரிக்கைகளிலும் ஐ.டி. துறையில் ஏற்பட்டிருக்கும் சரிவு பற்றி விலாவரியாக எழுதப் பட்டிருக்கின்றதே. இந்தியா டுடே கூட ஒரு சர்வே நடத்தி 10 லட்சம் பேருக்கு வேலை பறிபோகும் என்று கூறுகின்றதே. இந்த சமயத்தில் கூட நாங்கல்லாம் எனக் காலரைத் தூக்கிவிட்டுக் கொண்டிருந்தால் நம்மை விடக் கேணயன் ஊரில் இருக்க மாட்டான். சுய தம்பட் டத்தை நிறுத்தி ஐ.டி. தொழிலாளர்கள் அனைவரும் ஒரு நிமிடம் சிந் திக்க வேண்டும். 300 பேர் வரை வேலை பார்த்த எனது அலுவல கத்தில் கடந்த 2 மாதங்களில் மட்டும் 50 பேர் வேலையை விட்டு அனுப்பப் பட்டுள்ளனர். இந்தப் பொருளாதார வீழ்ச்சியினால் எதிர் பார்த்த ப்ராஜெக்ட் கிடைக்காததால் எங்களது வேலையும் ஊச லாட்டம் தான். இதே நிலை எனது கல்லூரி நண்பர்களின் மிகப்பெரிய நிறுவனங்களிலும் உள்ளது. பெஞ்சில் உள்ள ஆயிரக்கணக்கான ஊழியர்கள் எப்போது வேண்டுமானாலும் வெளியே அனுப்பப்ப டலாம் என்ற நிலை உள்ளது. இதையெல்லாம் மறைக்க வேண்டாம். பல இலட்சம் சம்பளம் வாங்கி செட்டில் ஆகிவிட்ட ஐ.டி. மேனேஜர்களுக்கு வேண்டுமானால் பயமாக இல்லாமல் இருக் கலாம். என்னைப் போன்று சின்ன கம்பெனியில் வேலை பார்த்து ஒவ்வொரு முறையும் எச்.ஆரிடமிருந்து ப்ராஜெக்ட் மேனேஜருக்கு அழைப்பு வரும் போது அடுத்தது யார் என்ற பயத்தில் ஒவ்வொரு வரும் மற்றவர் முகத்தைப் பார்க்கும் அவஸ்தை இருக்கின்றதே அதை அனுபவித்தால் தான் தெரியும். யாரோ ஐ.எஸ்.ஓ பற்றி பேசினார். ஐ.எஸ்.ஓ வெற்றுக் காகிதம் மட்டுமே. நான் வேலை செய்யும் நிறுவனம் கூட இரண்டு வைத்துள்ளது. அதனால் வேலைக் கெல்லாம் உத்திரவாதம் வந்து விடாது.

அகரன்: ''ஒபாமா அனுமார் படத்தை வைத்திருக்கின்றார் என்று ஊடகங்கள் எழுதுவதைப் போல்தான் நீங்களும் இதைச் சொன்னார்,



படிப்பகம்

www.padippakam.com

அதைச் சொன்னார் என்று எழுதுகிறீர்கள். அவுட் சோர்ஸிங் நிறுத்தப் பட வேண்டியது என்று யாரும் சொல்லவில்லை.'' ''வெளிநாடுக ளுக்கு வேலையைக் கொடுக்கும் நிறுவனங்களுக்கு நாம் வரிவி லக்கை ரத்து செய்ய வேண்டும். அமெரிக்காவிற்குள்ளேயே வேலை வாய்ப்பைக் கொடுப்பவர்களை நாம் வரிவிலக்களித்து ஊக்குவிக்க வேண்டும்'' பாரக் ஒபாமா.

ஒபாமா இந்திய ஐ.டி. துறையைக் காப்பாற்றுவார் என்பது போல எழுதியிருக்கும் வெகுளித்தனத்தை என்ன சொல்வது? ஒபாமா அமெரிக்க மக்களின் பிரதிநிதி. அமெரிக்க மக்களைப் பாதிக்கும் அவுட் சோர்ஸிங் நிறுத்தப்பட வேண்டும் என்று தேர் தலில் வாக்குறுதி அளித்து தான் வெற்றி பெற்றார். இதிலிருந்தே அவுட் சோர்ஸிங் எவ்வளவு தூரம் மக்களின் வெறுப்பைச் சம்பாதித் திருக்கின்றது என்பது தெரிய வரும். ஒபாமா அந்த வாக்குறுதியை நிறைவேற்றா விட்டால் அடுத்த தேர்தலில் தூக்கியெறியப் படுவார். ஒரு அமெரிக்க ஜனாதிபதி தன்னுடைய மக்களின் நலன்களைப் புறக் கணித்து விட்டு எங்கேயோ இருக்கும் இந்திய ஐ.டி. பணியாளர் களைக் காப்பற்றப் போகின்றாரா? ஒபாமாவை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்தது அமெரிக்க மக்களா அல்லது இந்திய ஐ.டி பணி யாளர்களா? இப்படி கனவுலகில் வாழ்பவர்கள் எல்லாம் மற்ற வர்களை வறட்டுத்தனமான சித்தாந்தவாதிகள் என்று கூறுவது வேடிக்கையானது.

''இந்தியாவில் தகவல் தொழில்நுட்பத் துறை 10 இலட்சம் பேருக்கு கூட இன்னமும் வேலை வாய்பளிக்கவில்லை. என்னதான் ஊடகங்கள் இவர்களைப் பற்றி ஊதிப் பெருக்கினாலும் இவர்களால் இந்தியாவில் எந்த மாற்றமும் நிகழப்போவது இல்லை. இதுவரை எந்த அமெரிக்க அரசியல்வாதியும் முன்முயற்சியுடன் உலகமயம் மற்றும் அவுட் சோர்ஸிங் பிரச்சினைகளை அணுகவில்லை. ஒபா மாவின் தவறான அணுகுமுறை கூட இதில் மையப்பிரச்சனையான அமெரிக்க மக்களை வாழ்க்கையை பற்றி விவாதிப்பவர்களின் வறட் சியையே காட்டுகின்றது'' -விஜய் பிரசாத், (இயக்குனர் அயலக ஆய்வு, டிரினிடி கல்லூரி, ஹார்ட்பார்ட்)

ரெட் ஸ்டார்: கோட்ஸில்லா நீ வெள்ளை மாளிகையின் கக்கூஸிலா வாழ்கின்றாய்?

புரோக்னாஸ்டிக் சேஜ்: ''சீனாவைச் சுட்ட மாட்டீர்களென்று நம்பு கிறேன். அது வெறும் சர்வாதிகார முதலாளித்துவமே என்பது எனது



படிப்பகம்

www.padippakam.com

புரிதல்''. ஏன் அது ஸ்டாலினின் சோவியத் ரஷ்யா வாக இருக்க கூடாது வாய்ஸ் ஆன் விங்ஸ்.

ஐடி தமிழன்: அன்புள்ள தமிழர்களே, உன்னுடைய பிரச்சினை எனக்கு புரிகின்றது. நீ அடுத்தவனின் வளர்ச்சியைப் பார்த்து பொறாமைப் படுகின்றாய். முன்பெல்லாம் வெளிநாட்டில் வாழும் இந்தியர் அனைவரும் இந்தியாவின் வளர்ச்சிக்காக ஒன்றுபட வேண்டும் எனக் கூறுவாய். ஆனால் இப்போது நாங்கள் அதை இந்தியாவில் செய்தால் பொறாமைப் படுகின்றாய். நாங்கள் அதிமான வருமான வரியைச் செலுத்தி உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் மறைமுகமாக உதவுகின்றோம் என்பதை மறந்து விடாதீர்கள். நாங்களெல்லாம் படித்தவர்கள். உங்கள் குடும்ப லாபத்திற்காக நீங்கள் நடத்தும் சங்கமெல்லாம் எங்களுக்கு தேவையில்லை.

மற்ற மாநிலத்தில் இருக்கக் கூடிய வேற்றுமையில் ஒற்றுமை என்ற பண்பு கூட நம்மிடம் இல்லாமல் போனது ஏன்? இதனால்தான் நம்மை பிற மாநிலத்தில் ஏன் பிற நாட்டில் கூட மதிப்பதில்லை. உங்களால் எதுவும் செய்ய முடியவில்லையென்றாலும் பரவாயில்லை. மற்றவர்களின் வளர்ச்சியைப் பாராட்டுங்கள். மற்றதை நாங்கள் பார்த்துக் கொள்கின்றோம்.

அகரன்: ''.. அதை இந்தியாவில் செய்தால் பொறாமைப் படுகிறாய். நாங்கள் அதிமான வருமான வரியைச் செலுத்தி உங்களுக்கும், உங்கள் குடும்பத்திற்கும் மறைமுகமாக உதவுகின்றோம் என்பதை மறந்து விடாதீர்கள்.''

அன்புள்ள ஐ.டி.தமிழன் நீங்கள் கீழ்க்கண்ட பத்தியைப் படிக்கவில்லையா? ''இந்தியாவில் தகவல் தொழில்நுட்ப துறை 10 இலட்சம் பேருக்குக் கூட இன்னமும் வேலை வாய்ப்பளிக்கவில்லை. என்னதான் ஊடகங்கள் இவர்களைப் பற்றி ஊதிப் பெருக்கினாலும் இவர்களால் இந்தியாவில் எந்த மாற்றமும் நிகழப் போவது இல்லை.''

கார்த்திக்: ஹாய், எல்லோரும் ஐ.டி பசங்களைப் பத்தி மட்டும் பேசுறீங்களே தவிர, ஐ.டி துறையோட சம்பந்தப்பட்ட தொழில மறந்துட்டீங்களே. 10 இலட்சம் பேருக்கு ஐ.டி துறையில வேலை போயிருச்சுன்னா அது தொடர்பான தொழிலாளர்கள் (டிரைவர், கட்டிட வேலையாட்கள், வங்கி ஊழியர்கள், வாட்ச்சு மேன்கள், ஆபீஸ் பாய், ஸ்வீப்பர்) என 25 இலட்சம் பேருக்கு வேலை போயிடும்பா.



படிப்பகம்

www.padippakam.com

ஐ.டி பசங்கள விட்டுத் தள்ளுங்க ! அவனுங்களுக்கு அடுத்தவனோட மனசப் பத்தி கவலையே கிடையாது. அவனுங்களுக்கு இது தேவைதான். மத்தவங்களைக் கொஞ்சம் கவனிங்கப்பா!

வாய்ஸ் ஆன் விங்ஸ்: புரோக்னாஸ்டிக் சேஜ் ஸ்டாலின் ஆட்சியில் சோவியத் யூனியனில் இருந்த பொருளாதார அமைப்பு முதலாளித் துவத்தை விடச் சிறப்பாக இருந்தது என்று கூற வருகிறீர்களா? அல்லது அந்த ஆட்சி சர்வாதிகாரத்தில் சீனாவை விஞ்சியது என்று கூற வருகிறீர்களா?

புரோக்னாஸ்டிக் சேஜ்: ''ஸ்டாலின் ஆட்சியில் சோவியத் யூனி யனில் இருந்த பொருளாதார அமைப்பு முதலாளித்துவத்தை விட சிறப்பாக இருந்தது என்று கூற வருகிறீர்களா? அல்லது அந்த ஆட்சி சர்வாதிகாரத்தில் சீனாவை விஞ்சியது என்று கூற வருகிறீர்களா?'' இதப்பத்தி நீங்க என்ன நினைக்கிறீங்க? ''அந்த ஆட்சி சர்வாதிகா ரத்தில் சீனாவை விஞ்சியது என்று கூற வருகிறீர்களா?'' சர்வாதி காரமா? என்ன சொல்ல வருகிறீர்கள்? இந்தியாவில் ஐ.டி. துறை சர் வாதிகாரமாக நடக்கவில்லையா?

அகரன்: ஓய்வெடுக்க வேண்டிய இரவுநேரம் பணியில் ஈடுபடுதல், வேலைப்பளு காரணமாக ஐ.டி. பணியாளர்கள் இளம்வயதிலேயே நோயாளிகளாகி விடுகின்றனர். நீரிழிவு, நரம்புத் தளர்ச்சி, மன உளைச்சல், ஒரு வேலையை திரும்பத் திரும்ப செய்வதால் வரும் சீகுஐ போன்ற நோய்கள் இவர்களைத் தாக்குகின்றன. பல ஆண் டுகள் வேலை செய்தாலும், நோயாளியானவர்களை நிர்வாகம் கண்டு கொள்வதில்லை. அவர்களின் சொந்தச் செலவில் சிகிச்சை செய்ய வேண்டும். ஐ.டி. நகரங்களில் தனியார் மருத்துவமனைக ளுக்கு ஐ.டி. நோயாளிகள் வருவது அதிகரித்து வருகின்றது. செய்திப் பத்திரிகைகளே இவற்றைத் தெரிவிக்கின்றன. ஐ.டி. பணி யாளர்கள் பெறும் அதிகச் சம்பளம் இவர்களுக்கு வைத்தியம் பார்க்கவே போதாது. இந்த இலட்சணத்தில் நாங்கள் அதிகம் சம்பா திக்கிறோம், அதனால் மற்றவர்களுக்கு பொறாமை என்று சொல்லி தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்கிறார்கள். பரிதாபத்துக்குரிய ஜீவன்கள் இந்த ஐ.டி.காரர்கள்.

இலவச பகுதி நேர வேலை: எல்லாம் வேஸ்ட்.....2010ல ஐ.டி ஃபீல்டு டம்மிதான்.



படிப்பகம்

www.padippakam.com

சீனு: அதிகம் சம்பளம் வாங்குவது தான் இங்கு பிரச்சினையே. சரி! அதே சம்பளம் கொடுத்தாலும் வர மாட்டேன் என்று தன் 'கொள்கை யில்' உறுதியாக இருப்பவர்கள் எத்தனை பேர். கை தூக்குங்க பாக் கலாம்.

கலையரசன்: பெரும் மூலதனத்துடன் வரும், வெளிநாட்டு தேசங்க டந்த நிறுவனங்களை கையாள்வதில், கியூபாவின் நடைமுறை இங்கே ஒப்புநோக்கத் தக்கது. சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னர் உல் லாசப் பிரயாணத் துறையில் முதலீடு செய்த வெளிநாட்டு நிறுவ னங்கள் யாவும், கியூபா அரசுடன் ஜாயின்ட் வென்ஜர் என்ற இரட்டை முகாமைத்துவ முறையின் கீழேயே அனுமதிக்கப்பட்டன. துப்புரவு பணியாளர் முதல் மேனேஜர் வரை கியூபி பிரஜைகளையே பணிக்கு அமர்த்திய போதும், அவர்களுக்கு வெளிநாட்டு நிறுவனங்கள் முன்னூறு தொடக்கம் எண்ணூறு (தகுதிக்கேற்ற படி) டாலர்கள் என்று அள்ளிக் கொடுத்த போதும், அனைத்து சம்பளங்களும் சராசரி கியூபித் தரத்தை விட அதிகமாகாமல் பார்த்துக் கொள்ளப்பட்டன. உதாரணத்திற்கு கியூபாவில், சராசரி சம்பளம் நூறு டாலர் என்றால், வெளிநாட்டு நிறுவனங்களில் வேலை செய்பவர்களின் சம்பளம் நூற்றி இருபது டாலராக இருக்கும். மிகுதியைப் பிடித்துக் கொள்ளும் அரசாங்கம் அதனைப் பிற துறைசார்ந்த தொழிலாளர் நலத் திட்டங்களில் முதலீடு செய்யும். வெளிநாட்டு நிறுவனங்கள் ஐந்து அல்லது பத்து வருடங்கள் மட்டுமே நிர்வகிக்க ஒப்பந்தம் போடப்படுவதால், அதற்குப் பின்னர் அரசாங்கம் பொறுப்பு என் பதால், யாருக்கும் அங்கே நாளை வேலை போனால் என்ன செய்வது என்ற அச்சம் இல்லை. தொழிலாளர் மத்தியில் வேறுபாடுகளை உரு வாக்கி, சமூகத்தில் பிரிவினை ஏற்படுத்தும், ஏற்றத்தாழ்வான சம் பளமுறை ஏற்கெனவே இந்தியாவில் தவிர்க்கப்பட்டிருந்தால்; யாரும் ''திமிர் பிடித்தவர்கள்'' என்று பெயர் எடுத்திருக்கவும் மாட் டார்கள்; யாரையும் ''பொறாமைக் காரர்கள்'' என்று குற்றம் சாட் டவும் அவசியம் இருந்திருக்காது.

பாண்டி: நீங்களெல்லாம் பைத்தியங்களா, வேலை வெட்டி இல்லையா? சின்சியரா வேலை செய்பவர்களுக்கு ஒரு பிரச்சனை யையும் இல்லை தெரியுமா?

அறிவுமணி இராவணன், (ஜெர்மனி): என் தம்பி தங்கை மற்றும் ஏராளமான நண்பர்கள் உள்பட அனைவரும் இத் (ஐ.டி.) துறையில் உள்ளனர். பதிவிலுள்ள அனைத்து பிரச்சனைகளும் அவர்களுக்கு



படிப்பகம்

www.padippakam.com

நன்றாக தெரியும்.. இவைகளை விவாதித்தல் தங்கள் நிலைக்கு (ஸ்டேடஸ்) இழுக்கென எண்ணுவதால், வெந்நீரில் உலா வரும் தவளைகளாக தங்கள் இனத்திற்கேற்படும் இன்னல்களை எண்ணாமல் குதூகலிக்கின்றனர். தனக்கு இந்நிலை ஏற்பட வெகு நாள் இல்லையெனினும் கற்பக்கப்பட்ட, சலவை செய்யப்பட விடயங்கள் அவர்களை மயக்கத்தில் ஆழ்த்துகின்றன. இவர்கள் ஒன்றுபட ஆர்வமாய் இருக்கின்றனர் ஆனால் வார்த்தையும்(சங்கம், யூனியன்), மேல்தட்டு என கருதும் கல்வியும் இவர்கள் விலங்காய் உள்ளன. வர்க்கம் சாரா வார்த்தைகளும், நாகரிக (என கருதும்) அணுகுமுறைகளுமே இவர்கள் தேவை. சுருங்கக்கூறின் 'பழைய கள் - புதிய மொந்தை' இவர்கள் மருந்தாய் உள்ளன.

புவன்: ஐயா எனக்கு தெரிந்து இங்கே யாரும் அதிகம் சம்பாதிக்கிறோம் என்று மார் தட்டுவது கிடையாது!! சத்தியமாக..! நான் ஒரு ஏழை குடும்பத்தில் இருந்து வந்தேன்! மேல் படிப்பு படிக்க வேண்டும் என்று ஆசை! குடும்ப சூழ்நிலை காரணமாக பி.எஸ்.ஸி படித்து முடித்தவுடன் வேலைக்கு வந்துவிட்டேன்! என் படிப்பு கடன், இதர கடன் என்று ஒரு ரெண்டு லட்சம் சேர்ந்து விட்டது!! அதை அடைக்க எனக்கு இந்த சம்பளம் தேவை! என பெற்றோர் உடல் நலம் இல்லாமல் இருந்த பொது இந்த தொழிலை நம்பித்தான் ரெண்டு லட்சம் கடன் கொடுத்தார்கள்!

இங்கே நான் அமெரிக்கனின் வேலையை பிடிங்கிவிட்டேன் என்று என் வேலையை நீங்கள் பிடுங்க பார்க்கறீர்கள்! சரி இங்கே இருக்கும் இந்த வேலையை எல்லாம் நாங்கள் விட்டுவிட்டு என்ன செய்வது? ஏதோ ஐ.டி துறையை விட்டால் வேறு பிழைப்பே பிழைக்க முடியாது என்கிறீர்கள்! ஏன் இந்த துறையில் நாங்கள் பிழைக்க கூடாதா?

ஐயா நான் ஆபீஸ் வந்த பிறகு, இங்கு சத்தியமாக ஏற்ற தாழ்வு இல்லை! நான் என்ன ஜாதி என்று யாரும் கேட்பது இல்லை! எல்லா துறையை போல் இங்கும் சிலர் பாகுபாடு பார்கிறார்கள்! நீங்கள் கேட்பது இன்று சரி, நாளை என்ன ஆகும் என்று! நாளை உலகம் அழிய போகிறது என்று, இன்று சாக நான் தயாராய் இல்லை! சத்தியமாக நாளை இந்த வேலை போனால் நான் தற்கொலை செய்து கொள்ள மாட்டேன்!! பொழைக்க ஆயிரம் வழி இருக்கு சார்! இன்று சேமித்த சேமிப்பை வைத்து சிறு தொழில் தொடங்கலாம்! ஏதாவது இருக்கும் சார்!



படிப்பகம்

www.padippakam.com

சம்பளத்தில் உள்ள ஏற்ற தாழ்வு. இதில் சத்தியமாக உங்கள் பக்கம் தன் தர்மம்! இது வஞ்ச புகழ்ச்சி இல்லை! சத்தியமாக இல்லை! ஆனால் நம் கோசம் ''அவனுக்கு கொடுக்கும் ஊதியத்தை எனக்கும் கொடு!'' என்று இருக்க வேண்டுமா? இல்லை ''என்னை விட சம்பாதிக்கும் அவன் துறை வேண்டாம்'' என்று இருக்க வேண்டுமா? சத்தியமாக எனக்கு தலைக்கனம் மயிர் அளவு கூட இல்லை!

சென்னையில் ஷேர் ஆட்டோ ஓட்டும் நண்பருக்கும் எனக்கும் சம்பளத்தில் பெரிய வித்தியாசம் இல்லை! இங்கே இருக்கும் வீட்டு புரோக்கர்கள் என் வருட சம்பளத்தை ஒரு மாதத்தில் சம் பாதிப்பார்கள் போல இருக்கிறது! இது இங்கே கூடி இருக்கும் அறிவுப் பெருமக்கள் எல்லோருக்கும் தெரியும்!

நான் என் வாதத்தில் சங்கத்தை பற்றி ஒன்றும் சொல்லவில்லை!! நானும் சங்கம் வேண்டும் என்று தான் நினைக்கிறேன்!! ஆனால் நம் நாட்டில் சங்கம் என்பதற்கு பொருள் ''சங்கத்து உறுப்பினர்களுக்கு ஒரு பிரச்சனை என்றம் போராடுவது, அது அவர் மீது தப்பாக இருந் தாலும்''. அந்த குப்பை போல் ஒரு சங்கம் வேண்டாம்! என் நலத்தை பார்க்க வேண்டும், கூடவே கொஞ்சம் பொது நலத்தையும்!

நீங்களே இங்குள்ள மறுமொழிகளை படித்து பாருங்கள், யார் யாரை திட்டி இருகிறார்கள் என்று தெரியும்!! எந்த கட்சி தேவை இல்லாத வார்த்தைகளை பேசியிருக்கிறார்கள் என்று பார்த்தல் யாருக்குத் தலைக்கனம் என்று தெரியும்!!!

**வெங்கட்:** மில்லுல ஒருத்தனோட வேலைய அவன கேட்காமலேய பிடுங்க முடியுமா? முடியாது.காரணம் அங்கெல்லாம் தொழிற் சங்கம் இருக்கின்றது. இங்கே நம் ஐ.டி. துறையில் கணக்கே இல் லாமல் பொறியாளர்களை வீட்டிற்கு அனுப்பும் போது, ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்கும் தொழிலாளியிடம் உள்ள ரோஷம், உரி மைக்காக போராடும் குணம் நம்மிடயே இல்லையே. அது ஏன் நண்பா? சற்றே சிந்தித்து பார்.

ஏனெனில் இங்கே நமக்கெல்லாம் நம்மை அறியாமல் நம்மில் சுயநலமே மேலோங்கி இருக்கிறது.இந்த வருடத்தில் நமக்கு எத்தனை விழுக்காடு ஊதிய உயர்வு கிடைக்கும் என்ற எண்ணமே மேலோங்கி இருக்கிறது. சக தொழிலாளியை நீக்கும் போது அதை



படிப்பகம்

www.padippakam.com

தட்டிக் கேட்க மனம் மறுக்கிறது. உரிமையை கேட்க அவர்களுக்கு இருக்கும் துணிச்சல் நம்மிடம் இல்லை. காரணம் அவர்களுக்கு குரல் கொடுக்க சங்கம் இருக்கிறது.

சங்கம் என்ற உடனே இந்த உண்டியல் ஏந்தி வீண் பேச்சு பேசும் பல போலி கம்யூனிஸ்ட்கள் நம் கண் முன்னே தெரிவார்கள். உண்மையான உணர்வுடன் தொழிலாளியின் நலன் கருதி இருக்கின்ற சங்கங்களும் நம் நாட்டில் உண்டு. ஜேப்பியார் என்ற மலையை எதிர்த்து, போலி கம்யூனிஸ்ட்கள் தொழிற்சங்களின் மீது ஏறி உண்மையாகவே தொழிலாளிக்கு குரல் கொடுக்கும் புதிய ஜனநாயக தொழிலாளர் முன்னணி என்ற சங்கத்தை ஜேப்பியார் பொறியியல் கல்லூரியில் நிறுவி ஜேப்பியார் என்ற மலையை இன்று குடையவில்லையா? தொழிலாளர்களுக்கு சுய மரியாதையை பெற்று தரவில்லையா?

சிந்தியுங்கள் தோழர்களே.. மில் தொழிலாளியின் உரிமைக்காக எழுப்ப குரல் உண்டு. நமக்கு?

புவன்: நண்பா வெங்கட், சத்தியமாக நீ சொல்வது அனைத்தும் உண்மை!! நான் எதிர்ப்பது சங்கத்தை அல்ல! நான் எனக்கு அந்த உரிமை வேண்டாம் என்று சொல்ல வில்லை! ஆனால் இங்கே சில மறுமொழிகள் எதோ நமக்கு திமிர் மட்டும் தன் இருக்கிறது என்றும், நம் வாங்கும் பணம் அதனையும் கொண்டுபோய் குப்பையில் கொட்டுகிறார்கள் என்றும் சொல்லுகிறார்கள்! அந்த கருத்தைத்தான் எதிர்க்கிறேன்! முடிந்தால் அப்படி சொல்லுபவர்கள் அவர்கள் பக்கத்தில் உள்ள மனநலம் குன்றியோர் காப்பகம், முதியவர் காப்பகம் சென்று பார்க்கட்டும்.. அவர்களுக்கு உதவுவது யார் என்று கேட்கட்டும். ஆனால் அதற்கெல்லாம் இந்த மனிதர்களுக்கு மற்றவரை மதிக்க தெரியவேண்டுமே?

ஆனால் நம் வேலை நிரந்தரத்தை நமக்கு கொடுக்கப்படும் அதிக சம்பளத்திற்கு தியாகம் செய்கிறோம் என்பதே உண்மை!! எந்த ஒரு மில் தொழிலாளியும் ஒரு வருடத்திற்கு ஒரு மில் மாறுவது இல்லை!! அப்படி மாறினாலும் சம்பளம் இரட்டிப்பு ஆகாது!! நம் துறை அப்படியா? பிறகு எதற்கு இந்த ஒப்பீடு? ஐ.டி துறையால் சில பிரச்சினைகள் உள்ளதை நானும் ஏற்கிறேன். அதற்க்கு பொறுப்பு நாங்களா? இல்லை இதை வழிமுறைபடுத்தாத அரசாங்கமா?



படிப்பகம்

www.padippakam.com

வெங்கட்: நண்பர் புவன் அவர்களுக்கு, ''சத்தியமாக நீ சொல்வது அனைத்தும் உண்மை. நான் எதிர்ப்பது சங்கத்தை அல்ல. ஆனால் இங்க சில மறுமொழிகள் எதோ நம்மக்கு திமிர் மட்டும் தன் இருக்கிறது என்றும், நம் வாங்கும் பணம் அதனையும் கொண்டுபோய் குப்பையில் கொட்டுகிறார்கள் என்றும் சொல்லுகிறார்கள். அந்த கருத்தைத்தான் எதிர்க்கிறேன்'' என்று சொல்லியிருக்கிறீர்கள்.

நண்பா உண்மையிலேயே நிறைய பேர் கொண்ட கருத்தாகத்தான் இது உள்ளது . இன்னும் சொல்லப் போனால் சில சமூக அக்கறை (போலி) உள்ளவர்கள் ஐ.டி. மக்களுக்கு சமூக சிந்தனையே இல்லை, சமூகத்தின் மீது அக்கைறையே இல்லை என்ற நோக்கில் பேசுவதும் உண்டு. எல்லா ஐ.டி. தொழிலாளியும் ஊதாரித்தனமாக,உல்லாசமாக பப், டிஸ்கோ, பார், ரிசார்ட் என்று பொழுதை கழிக்கிறார்கள் என்று எண்ணுகிறார்கள்.

ஆனால் நம் போன்றோர், பல ஐ.டி. நண்பர்கள் நிறைய சமூகப் பணிகள் ஆற்றி வருவதுடன் ஐ.டி. தொழிலாளிக்கு சமூக சிந்தனையும் உண்டு நிரூபிக்கின்றனர். ''ஆனால் நம் வேலை நிரந்தரத்தை நமக்கு கொடுக்கப்படும் அதிக சம்பளத்திற்கு தியாகம் செய்கிறோம் என்பதே உண்மை!''

உண்மைதான் நண்பா. ஆனால் தியாகமா செய்கிறோம்? விலை வாங்கி நம் வேலை நிரந்தரத்தை விற்று கொள்கிறோம்.அதற்காக நாம் ஒரே அலுவலகத்தில் நிரந்தரமாக பணிபுரிய வேண்டும் என்று சொல்ல வில்லை. நம் வேலை பறிபோனால் அதை மானங்கெட்டு தியாகம் என்ற பெயரில் நாம் மௌனம் சாதிக்க வேண்டாம் என்று சொல்கிறேன்.

ஒரு வருடத்தில் நான்கு நிறுவனத்திற்கு மாறும் எண்ணம் எதனால் ஏற்படுகிறது. சிலர் டிராக் மாற மாறுகிறார்கள்.பலர் நம்மை சந்தையில் அதிகம் விலை கேட்போர் யார் என்று தேடி மாறுகிறோம். அங்கே அதிருப்தி அடைந்தவுடன் அடுத்த நிறுவனம். இதன் பெயர் என்ன நண்பா? எதனால்?

சுயநலம் நம் உரிமையை,பொது நலத்தை மழுங்கடிக்கிறது. உண்மையாக சொல் நண்பா, வருட உயர்வு வரும்போது மட்டும் தான் நாம் இந்த முதலாளி எனும் முதலையை அடையாளம் காண்கிறோம். முதலாளித்துவத்தின் அக்கிரமத்தை யோசிக்கிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

எத்தனை பேர் என் நிறுவனம் எனக்கு உண்மையாக இருக்கிறது.எல்லா உரிமைகளையும் வழங்குகிறது என்று சொல்ல முடியும். நாம் விலை போகிறோம் என்பதற்காக எல்லாவற்றையும் சகித்து கொள்ள வேண்டுமா நண்பா?

புவன்: நண்பா வெங்கட், முதலில் என் கருத்துக்கு மதிப்பளித்து பேசுவதற்கு நன்றி! நான் ''எந்த ஒரு மில் தொழிலாளியும் ஒரு வருடத்திற்கு ஒரு மில் மாறுவது இல்லை!! அப்படி மாறினாலும் சம்பளம் இரட்டிப்பு ஆகாது!'' என்று கூறி இருந்தேன். நம் முதலாளிகளையும் ஏமாற்றுகிறோம் என்று சொல்லவே இதை சொன்னேன்!! இது சுய நலம் தான்! ஆனால் இது தான் நடைமுறை!!

இந்த துறையை பொறுத்தவரை யாரை நம்பியும் யாரும் இல்லை! ''இந்த கம்பெனி இல்லைனா ஆயிரம் கம்பெனி'', ''இவன் இல்லைனா இன்னொருத்தன்'' என்ற எண்ணமே மேலோங்கி இருக்கு! சரி, அவர்கள் காரணம் சொல்லவேண்டும், வேலையை பிடுங்க கூடாது என்று சொல்லும் நாம், பான்ட் (BOND) போடும்போது சந்தோசமாகவா கையெழுத்து போடுகிறோம்? உனக்கு தெரியும் ''அந்த கம்பெனியில் பான்ட், அதனால் வேற கம்பெனி ட்ரை பண்ணறேன்'' சொல்லுபவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள்!! இனிமேல் பான்ட் போட்டால் அது கம்பெனிக்கும் பொருந்தும் என்ற கருத்தை வரவேற்கிறேன். அதாவது ஐந்து வருடம் பான்ட் என்றால், அந்த நபரும் வெளியே போக முடியாது. கம்பெனியும் வெளிய அனுப்ப முடியாது! ஆனால் ஐந்து வருட பான்ட் நம்மில் எத்தனை பேர் சம்மதிப்போம்? இந்த மனோபாவத்துக்கு தான் வேலை நிரந்தரம் இன்மையை அடகு வைக்கிறோம்!!

பாரதி சே: தங்களது பதிவிற்கும், அதற்கான மறுமொழிகளுக்கும் என் நினைவில் தோன்றுவது மார்டின் நிமோலரின் கவிதைதான். கடைசியாக என்னைத் தேடி வந்தார்கள், அவர்கள். முதலில் கம்யூனிஸ்ட்டுகளைத் தேடி வந்தார்கள். நான் ஒன்றும் பேசவில்லை. நான் கம்யூனிஸ்ட் இல்லை. பின்னர், தொழிற்சங்கவாதிகளைத் தேடி வந்தார்கள். நான் ஒன்றும் பேசவில்லை. நான் தொழிற்சங்கவாதி இல்லை. அதற்குப் பின்னர், யூதர்களைத் தேடி வந்தார்கள். நான் ஒன்றும் பேசவில்லை. நான் யூதன் இல்லை. அடுத்து, கத்தோலிக்கர்களைத் தேடி வந்தார்கள். நான் ஒன்றும் பேசவில்லை, நான் கத்தோலிக்கன் இல்லை. கடைசியாக, என்னைத் தேடி வந்தார்கள், எனக்காகப் பேச அப்போது யாருமே இல்லை.



படிப்பகம்

www.padippakam.com

நானும் ஒரு பன்னாட்டு நிறுவனத்தில் (கொத்தடிமையாய்) வேலை செய்கின்றேன். என் மனதிற்குள் இருக்கும் பல ஆதங்கத்தை அந்த அடைப்புக்குறிக்குள் உள்ள வார்த்தை மிகத் தெளிவாக எடுத்துரைக்கும் என நம்புகின்றேன். நானும் என் நண்பர் இவானும் இது பற்றி விவாதித்திருக்கிறோம். இந்த நிலை விவாதத்திற்கு வந்ததே மிகப்பெரிய அடுத்த கட்ட நகர்வு என நம்புகின்றோம்.

ஆனால் சில நண்பர்கள் சொல்வது போல் நமது அரசாங்கத்தின் மீதும் தவறு உள்ளது. உள்நாட்டு மற்றும் அந்தந்த வட்டாரத்திற்கான வேலை வாய்ப்புகளை கண்டுகொள்ளாது இன்ன பிற தொழில் வாய்ப்புகளான பன்னாட்டு நிறுவன முதலீட்டை ஊக்குவித்தது, மென்பொருள் தொழிலுக்கான வாய்ப்புகளை அதிகரித்தது, அந்த மாதிரியான வாய்ப்புகளையும் பரவலாக அமைக்காமல் ஒரே இடத்தில் செறிவாக்கியது, முழுவதும் அயல்நாடுகளை நம்பிய தொழிற்துறையை விரிவாக்கியது, என்று நீண்டு கொண்டு போகின்றது நமது கையாலாகாத அரசாங்கத்தின் சாதனைப்(?!) பட்டியல்.

எங்களைப் போன்ற மென்பொருள் நிறுவன ஊழியர்களாலும் சாமானிய மனிதர்களின் வாழ்க்கைத்தரம் பாதிக்கப்பட்டது, பாதிக்கப்படுகின்றது என்பது மறுக்க முடியாத உண்மை. நம் சமுதாயக் கண்ணோட்டத்தில் பொருளாதார நிர்ணயம் என்பது எங்களைப் போன்றவர்களைச் சுற்றியே தீர்மானிக்கப்படுவதும் பத்திரிக்கைகளில் அங்கலாய்க்கப்படுவதும் மிகவும் வருத்தத்திற்குரியதாக உள்ளது. எனில் இதர வர்க்கத்தின் நிலைப்பாடானது கேள்விக்குறியதாக்கப்படுகின்றது.

உள்ளூரில் நாங்கள் படித்த படிப்பின் வேலைவாய்ப்புத்தளம் இல்லாத காரணத்தினால் பஞ்சம் பிழைக்க இங்கு வந்தோம். என் போன்றவர்களால் இங்கு இருந்த பூர்வீகக்குடிகளின் இருப்பு அவர்களின் சொந்த மண்ணிலிருந்தே பெயர்த்தெடுக்கப்பட்டு விரட்டப்படுவதும் வேதனைக்குரியதே.

அதேபோல் அரசாங்கமும் இந்த பன்னாட்டு நிறுவனங்களைக் காரணம் காட்டி, கடந்த சில வருடங்களுக்குள்ளாக, புற்றீச்சலென தனியார் பொறியியற்கல்லூரிகளின் எண்ணிக்கையை அதிகரித்து, கல்வியை வணிகமாக்கியது. கடந்த சில வருடங்களுக்கு முன்னர்வரை, சென்னையின் மோசமான சாலைகளில் ஒன்றாக இருந்த



படிப்பகம்

www.padippakam.com

ஓ.எம்.ஆர். (பழைய மகாபலிபுரம் சாலை), இப்போது சென்னையின் மிகப் பொலிவான சாலை என ஆனதும் இந்த பன்னாட்டு நிறுவனங்களின் அடிவருடியான அரசாங்கத்தின் ஓரவஞ்சனைதானே!

முடிவாக, இந்த சமுதாய, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் மாற்றம் என்பது தனி ஒரு மனிதனின் தவறா அல்லது சமுதாயத்தின் தவறா அல்லது அரசாங்கத்தின் தவறா எனப் பிரித்துப்பார்க்க இயலாமல் ஒன்றோடொன்று பிணைந்திருக்கிறது. ஆனால் கண்டிப்பாக ஆரம்பத்திலேயே வேரறுக்கப்பட வேண்டிய விசயம்.

புரோக்னாஸ்டிக் சேஜ்: வேலை இழப்பு விவரங்கள் - http://economictimes.indiatimes.com/Infotech/?.??.eS/articlelist/40274504.cms

<http://infotech.indiatimes.com/quickiearticleshow/3845928.cms>

Mphasis Pay cut 20% & 40% by Feb, 2008

<http://www.rediff.com/money/2008/dec/27mphasis&may&cut&pay&packets.htm>

MphasiS may impose upto 45 % salary cut:

<http://news.in.msn.com/business/article.aspx?cp&documentid=1768020>

•••



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

## வாசகர் விவாதம்....

இவனுங்க கம்பீட்டர் படிப்பு படிக்கிறதுக்கு இவங்க அப்பனாத்தா தொழிற்சாலைல வேலை செஞ்சு, குறைந்த பட்ச ஊதியத்தோட வீட்டுக்கு வந்து சமைச்சுப் போட்டாங்க இல்லியா, அதுக்குக் காரணமே தொழிற்சங்கங்கள் தான். நாளொண்ணுக்கு 18 மணிநேர வேலை, எப்ப வேணா வேலை உட்டுத் தூக்றது, மத்த எந்த சலுகைகளும் கிடையாதுன்னு இருந்த அராஜகமான நிலையெல்லாம் மாத்தி, குறைந்த பட்ச ஊதியம், ஊதிய உயர்வு, பேறு கால விடுறை, போனஸ் எல்லாத்தையும் மொதலாளிகள் சும்மாவே தூக்கிக் குடுத்துட்டாங்களா? அதெல்லாம் இல்லாட்டி, நாமெல்லம் இன்னேரம் நக்கிகிட்டுதான் இருக்கணும். ஸ்ட்ரைக்கு பண்றத மட்டும் டீவி நூஸ்ல உர்லக்கிழங்கு சிப்ஸ் சாப்ட்டுட்டே பாத்துட்டு , தொழிற்சங்கம்னாலே வேலை நிறுத்தம் தான்னு புண்ணூட்டம் போடற புண்ணாக்குகள், அயோ என் வேலை போச்சே, கேக்க ஆருமில்லியான்னு பொலம்பற காலம் வரத்தாம் போகுது......
மகா.. ஜஸ்ட் வெய்ட் மாடி.

– அக்கிரகாரத்தில் கழுதை



படிப்பகம்